8

338

# சுதேச வாசகம்

31 AUG 1940
MADRAS

## நான்காம் புத்தகம்

1367

1954

ஆரம்பப் பாடசாலை புதிய பாட
நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

# சுதேச வாசகம்

## நான்காம் புத்தகம்

(ஆரம்பப் பாடசாலை புதிய பாடத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தது

31 AUG 1940
MADRAS
1354
1386
494.815

பதிப்பாளர் :
வி. சூ. சுவாமிநாதன்,
மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி

ரிமை] [விலை அணா 6

முதற் பதிப்பு. 1939
இரண்டாம் பதிப்பு 1940
மூன்றும் பதிப்பு 1940

பாரதி பிரஸ், மதுரை.

# முன்னுரை

1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டப் படி இந்தச் சுதேச வாசகம் நான்காம் புத்தகத்தையும் வெளியிடலானேம். ஏற்கனவே வெளிவந்துள்ள மூன்றும் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயரிய வசன நடை, புதிய வார்த்தைகள், கடினப் பதங்கள் முதலியவை இப் புத்தகத்தில் ஓர் ஒழுங்கைப் பின் பற்றிப் புகுத்தப்பட்டிருக்கின்றன. பாடங்கள் யாவும் நம் நாட்டுப் பழக்க வழக்கங் களுக்கு ஏற்றவாறும், அனுபவ சாத்தியமாய்ப் போதிக்கத் தக்கவாறும் அமைக்கப் பட்டுள்ளன. அவசியமான புதிய வார்த்தைகளையும், கடினப் பதங்களையும் சிரமமில் லாமல் போதிக்கத்தக்க முறையிலேயே இப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

பின்னல் வரும் பாடங்களிலுள்ள கால் புள்ளி, முற்றுப் புள்ளி, மேற்கோள் குறி முதலியவைகளைப் பிள்ளைகள் அப் பாடங்களிலிருந்தே அறிந்து கொள்வதற்காக, இப் புத்தகத்தின் ஆரம்பத்திலேயே அவைகளைப்பற்றிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன. மற்ற இலக்கண அம்சங்கள் அந்தந்தப் பாடத்தின் இறுதியிலேயே விளக்கப் பெற்று, அவைகளுக்குரிய அப்பியாசங்களும் அங்கங்கேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர, விஷயக் கேள்விகளும், சுருக்கிச் சொல்லல், பிள்ளைகளின் சொந்த வாசகத்தில் கூறல் முதலிய பல பயிற்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாடங்கள் சம்பந்தமான பாடல்களும், சிறு கதைகளைக் கூறும் பாடல்களும் இப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்கள், பிள்ளைகளின் பத உச்சரிப்பைச் சீர்திருத்துவதிலும் ; எழுதுவதில் ஏற்படும் குறைகளை நிவர்த்திப்பதிலும் ; சொந்த அனுபவங்களையும், சிறு கதைகளையும் கூறுவதிலும், எழுதுவதிலும், ஏற்படும் பிழைகளைத் திருத்துவதிலும் ஊக்கத்துடன் உழைக்க வேண்டும். தவிரவும் இப் புத்தகத்திற் கூறப்படும் பழமொழிகளையும், மேற்கோள்களையும் கூறி, பிள்ளைகளைச் சந்தர்ப்பம் கூறும்படி செய்யவேண்டும். பொதுவாகப் பிள்ளைகளின் பகுத்தறிவை வெளிக் கொணரவும், விஷய அறிவை விருத்தி செய்யவும் அவசியமான கேள்விகளையும், அவர்களது சொந்த அனுபவங் களையும் கேட்க வேண்டும். இந்த லக்ஷியங்களை நன்குணர்ந்து. இப் புத்தகத்திலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்குமாறு ஆசிரியர்களை வேண்டுகின்றேம்.

இப் புத்தகத்தில் ஸ்ரீ. சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்களது சில பாடல்களை உபயோகித்துக்கொள்ள அனுமதியளித்த பிள்ளையவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும்.

இவ் வாசக வரிசை வெளிவர உதவிய ஆசிரியர்க்கும், கல்வி அதிகாரிகளுக்கும் எம் மனமார்ந்த வந்தனம்.

பதிப்பாசிரியன்.

# கடவுள் துதி

(முத்திநெறி அறியாத என்ற சந்தம்)

மனம் உருக்கும் பாடல்களை வாயாறப்பாடி நின்றே
தினம் உனது சேவடியைச் சிந்திக்கும் செல்வமுளோம்
கனம் உதவும் கல்வியினைக் கற்கவரும் கருத்துடைய
இனம் எனவே எண்ணிஎமை எம்பெருமான்! காத்தருளே. 1

கைப்பொருளின் மெய்ப்பொருளாம் கல்விஎனக் கருதுவம்யாம்
முப்பொழுதும் உனை வணங்கி முயற்சியினுல் உயர்ச்சிபெற
எப்பொழுதும் விழைகின்ருேம் இறையவனே எம்பெருமான்
இப்பொழுது நின்னருளாம் இன்ப மிகத் தந்தருளே. 2

நற்குணமும் கல்வியைப் போல் நாடுதற்குச் சிறந்ததென
சிற்குணனே பெரியோரால் சிறியேம்யாம் தெரிந்துமுளோம்
கற்பனைகட் கடங்காத கடவுள் உனைக் கண்டடைவோம்
அற்பகுணம் அகற்றிஎமை ஆளாக்கி ஆண்டருளே. 3

உயர்வுடனே சிறப்பினையும் உழைப்பதனுல் அடைந்திடலாம்
அயர்வறு நல்வாழ்வினைஉன் அருட்பெருக்கால் அடைந்திட [லாம்
பெயர்பலவாய் உருவிலனுய் பிறங்கிய எம் பெருமானே!
துயர்தவிர்க்கும் உமதடியைத் துணைகொண்டோம் வந்தருளே. 4

—ஙா. கனகராஜ ஐயர்.

# தேச வணக்கம்

---

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் **இந்தியத்**
**தாயே**! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்களெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை **இந்திய**
**அன்னை**! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிற்பச்
சீர்வளமும் மிகத்திகழும் **இந்தியச்**
**செல்வி**! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகுகாலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் **பாரத**
**தேவி**! உனக்கு நமஸ்காரம். 4

—**வே. முத்துசாமி ஐயர்.**

# பொருள் அடக்கம்


| வரிசை | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | அப்பியாசம்—1—புள்ளிகளும் குறிகளும் | 7 |
| 1. | கடவுள் வணக்கம் | 8 |
| 2. | தமிழ் நாடு | 11 |
| 3. | தமிழ் இலக்கியம் (பாட்டு) | 14 |
| 4. | சிங்கமும் ஆடும் | 15 |
| 5. | பட்டு | 20 |
| 6. | புத்தியும் வித்தையும் | 23 |
| 7. | பாய் பின்னுதல் | 27 |
| 8. | நெற்பானையும் எலியும் (பாட்டு) | 31 |
| 9. | வீரத்தாறி | 32 |
| 10. | உமார் | 36 |
| 11. | அம்மை குத்துவது ஏன்? | 39 |
| 12. | கர்வம் ஆகாது | 43 |
| 13. | போக்கு வரவு சாதனங்கள் | 47 |
| 14. | சைக்கிள் (பாட்டு) | 52 |
| 15. | குமணன் | 53 |
| 16. | கடிகாரம் | 57 |
| 17. | கடிகாரம் (பாட்டு) | 62 |
| 18. | குலசேகரர் | 64 |
| 19. | காற்று | 68 |
| 20. | தென்னையும் நாணலும் | 73 |
| 21. | சர்க்கரை | 76 |
| 22. | சாமுவேல் | 80 |
| 23. | புதையல் | 84 |
| 24. | கல்வியின் மகிமை (பாட்டு) | 88 |
| 25. | கிராமத் தொண்டு | 90 |
| 26. | சுவாமி விவேகானந்தர் | 94 |
| 27. | விவசாயம் | 98 |
| 28. | கடிதங்கள் | 101 |
| 29. | பொத்தான் துவாரம் தைத்தல் | 106 |
| 30. | உண்மையின் பெருமை (நாடகம்) | 108 |
| | அப்பியாசம்—2—படப் பழக்கம் | 115 |
| | வெற்றிவேற்கை (பாட்டு) | 116 |

# சுதேச வாசகம்

## நான்காம் புத்தகம்

---

### அப்பியாசம் 1

## புள்ளிகளும் குறிகளும்

நாம் வாசிக்கும் ஒவ்வொரு வாக்கியங்களிலும், எழுத்துக்கள், வார்த்தைகள் இவைகளைத் தவிர வேறு சில அடையாளங்களும் காணப் படுகின்றன. அவைகள் பல வேறு விதமானவைகளா யிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்திற்காக ஏற்பட்டு இருக் கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் இருக்கவேண்டிய இடத்தையும் அறியவேண்டியது அவசியம். அவைகள் இல்லாவிடில் வாக்கியத்தின் பொருள் வேறுபடும்.

### புள்ளிகள்

( , ) இந்த அடையாளம் **கால் புள்ளி** எனப்படும். வாசிக்கும்போது இந்த அடையாளம் இருக்குமிடத்தில் ஒரு **மாத்திரை** நேரம் அதாவது கண் ணிமை ஒருதரம் கொட்டும் நேரம்நிறுத்த வேண்டும்.

**உதாரணம்:**—பால், சோறு, எலி முதலியவற்றைப் பூனை தின்னும்.

( . ) இது **முற்றுப் புள்ளி** எனப்படும். ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இது காணப்படும். வாசிக்கும்போது இந்த அடையாளமிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

**உதாரணம்:** —பறவைகள் ஆகாயத்திற் பறக்கின்றன. தவளைகள் தண்ணீரில் நீந்துகின்றன.

### குறிகள்

(" ") இவ்வடையாளம் **மேற்கோள் குறி** எனப்படும். ஒருவர் எந்த வாக்கியங்களை எந்தவிதமாய்க் கூறினரோ, அந்த வாக்கியங்களை அப்

படியே உபயோகித்திருக்கிறது என்பதைக் குறிக்கும் இடங்களில், ஆரம்பத்திலும் முடிவிலும் இவ்வடையாளங்கள் உபயோகப்படும்.

**உதாரணம்** :—வன தேவதை அவன் முன் தோன்றி, "நீ சுகமாய் வாழ்வாயாக" என்று கூறியது.

(' ') இவ்வடையாளமும் மேற்கோள் குறிதான். ஆனால் இது பழமொழியையும், அந்நிய பாஷை வார்த்தைகளையும் குறிக்கிற இடங்களில், அவைகளின் ஆரம்பத்திலும் முடிவிலும் உபயோகிக்கப்படும்.

**உதாரணம்** :—'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பெரியோர் கூறி யிருக்கின்றனர்.

நாம் ஆகாரத்தில் சேர்க்கின்ற உப்பு, 'சோடியம் குளோரைட்' எனப்படும்.

### பயிற்சியும் கேள்வியும்

I. புள்ளிகளின் விபரங்களை எடுத்து உதாரணத்துடன் எழுது.

II. பின்வரும் வாக்கியத்தில் புள்ளிகளை அமைத்து எழுதவும் :—

ராமா நான் உனக்கு உதவி செய்யக் கட்டாயம் ஐந்து மணிக்கு வருகிறேன் என்று சொல்லிப்போன கேசவன் இன்னும் இதுவரையில் வராததைக் கவனிக்கையில் அவன் சுயகாரியப் புலி என்பது விளங்குகிறதல்லவா?

---

## 1. கடவுள் வணக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| இதோ | எவ்வளவோ | வெறுப்பே | நண்பர்கள் | செல்லமாட்டான் |
| எதிரில் | அவிழ்த்து | விட்டுவிட | முடிப்பு | வேண்டுமானால் |
| உடனே | கண்டாலும் | இரத்தம் | வலம் | வரலாமோ |
| ஏன் | பரிகாசமாய் | கெடுதல் | பற்றி | புதையல் |
| கதி | முனிவர் | தடுக்கி | கட்டுச்சோறு | சிரித்துக்கொண்டே |

மதுரை நகரில் கோபாலன், கோவிந்தன் என்று இரு நண்பர்கள் இருந்தனர். அவர்களில் கோபாலனுக்குக் கடவுளை வணங்குவதில்

பிரியம் அதிகம். கோவிலை எங்குக் கண்டாலும் உள்ளே நுழைந்து கடவுளை வணங்காமல் செல்லமாட்டான். கடவுளை வணங்குவதை மிகவும் முக்கியமாக அவன் செய்து வந்தான்.

ஆனால் கோவிந்தனுக்கோ, கடவுள் என்றால் வெறுப்பே. கடவுளின் பெயரை வாயால் சொல்லவும் மாட்டான். கடவுளைக் கண்டு வணங்க நினைக்கவும் மாட்டான். அவனைக் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போக, கோபாலன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் அது முடியவில்லை. ஆகையால் கோபாலன் கோவிந்தனிடம் கடவுளைப் பற்றிப் பேசுவதே யில்லை.

கோபாலனும் கோவிந்தனும் ஒருநாள் அயலூருக்குச் செல்ல நேர்ந்தது. இருவரும் கட்டுச் சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். வழியில் ஒரு காடு இருந்தது. அக்காட்டின் வழியே அவர்கள் மிகுந்த கஷ்டத்துடன் சென்றனர். நடுக்காட்டில் ஒரு கோவிலைக் கண்டனர்.

கண்டதும் கோபாலன் கோவிந்தனைப் பார்த்து, "கோவிந்தா! இதோ பார் ஒரு கோவில் தெரிகிறது. நாம் வெயிலில் நடந்து களைப் படைந்திருக்கிறோம். ஆகையால் கோவிலுக்குள் சென்று கடவுளை வணங்கிவிட்டு, சிறிது நேரம் இளைப்பாறிச் செல்லுவோம் வா" என்று கூறினான். அதற்குக் கோவிந்தன், "நான் கோவிலுக்கு வரமாட்டேன் என்பது உனக்குத் தெரியும். அப்படி யிருந்தும் நீ ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய்? நீ வேண்டுமானால் கோவிலுக்குப் போய் வா. நான் இம்மரத்தடியிலேயே இருக்கிறேன்" என்றான்.

அவ்வாறே கோபாலன் கோவிலுக்குள் சென்றான். கோவிந்தன் கோவிலுக் கெதிரே யிருந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். கோவிலுக்குள் சென்ற கோபாலன், கடவுளை வணங்கி விட்டு, சுற்றி வலம் வந்தான். அப்பொழுது ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தான். பலமான காயம் பட்டு, அதிலிருந்து இரத்தம் வெளியேறியது. மிகவும் கஷ்டத்துடன் எழுந்து, வெளியே வந்தான்.

மரத்தடியிலிருந்த கோவிந்தன் எதிரில், மரத்திலிருந்து ஒரு துணி முடிப்பு விழுந்தது. அவன் அதை அவிழ்த்துப் பார்க்கவே,

அதில் பத்து ரூபாய்கள் இருந்தன. அதனால் அவன் சந்தோஷமடைந்தான். எதிரில் கோபாலன் காயத்துடன் வருவதைக் கண்டான். கண்டதும் கோவிந்தன் சிரித்துக்கொண்டே, "என்ன கோபாலா! கோவிலுக்குப் போனதற்குப் பலன் உனக்கு உடனே கிடைத்துவிட்டதா? அங்கு வராமலிருந்த எனக்கும் பலன் கைமேல் கிடைத்துவிட்டது. இதோ பார்! நான் கோவிலுக்குள் வராமல் வெளியே இருந்ததற்கு வெகுமதியாக எனக்குப் பத்து ரூபாய்கள் கிடைத்திருக்கின்றன. என் சொல்லை மீறிக் கோவிலுக்குச் சென்ற உனக்கோ, இரத்தக் காயம் ஏற்பட்டது. ஆகையால் நீ இனிமேல் கோவிலுக்கே போகாதே" என்று பரிகாசமாய்க் கூறினான்.

இது கேட்ட கோபாலன் கடவுளை மறுபடியும் வணங்கி, "கடவுளே! உன்னை அன்புடன் வணங்கும் எனக்கும் இக் கதி வரலாமோ? உன்னை வணங்காதவருக்குத்தான் நன்மை ஏற்படுமோ? வணங்குபவருக்கு என்றும் கெடுதல் தானோ?" என்று கூறி மனம் வருந்தி அழுதான்.

அப்போது கடவுள் ஒரு முனிவர்போல அவர்களெதிரில் தோன்றினார். அவர் கோபாலனை நோக்கி, "அப்பா! கோபாலா! நீ வருத்தப்படாதே. இன்று நீ பாம்பு கடித்து இறக்கவேண்டியவன். கடவுளை வணங்கியதால் சிறு காயத்தோடு தப்பினாய். ஆனால் கோவிந்தனுக்கு இன்று பெரிய பணப்புதையல் கிடைத்திருக்கும். கடவுளை வணங்காததால் பத்து ரூபாய்களே கிடைத்தன. இதன் உண்மையை அறியாமல் நீ ஏன் வீணாய் வருந்துகிறாய்? உன் உறுதியை என்றும் கைவிடாதே" என்று கூறி மறைந்தார்.

இது கேட்ட கோபாலன் மிகவும் சந்தோஷ மடைந்தான். அன்று முதல் கோவிந்தனும் கடவுளை வணங்கி வந்தான். ஆகையால் நாம் கடவுளை வணங்குவதில் ஏற்படும் கஷ்டங்களைக் கண்டு, அதை விட்டுவிடக் கூடாது. மிகவும் உறுதியான பக்தியுடன் கடவுளை வணங்க வேண்டும்.

### பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளைச் சொந்த வாக்கியங்களிலமைத்து எழுது:— எதிரி, கதி, மீறி, அவிழ், தடுக்கி.

II. ஈரருத்தம் கொண்ட வார்த்தைகளை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுது.

III. கொடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து எழுது:— (1) நாம்——நடந்து களைப்படைந்திருக்கிறோம். (2) நீ——கோவிலுக்குப் போய் வா. (3) அப்பொழுது——தடுக்கி——விழுந்தான்.

IV. கடவுளை வணங்குவோர்கள் பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றப்படுவார்கள் என்பதை ஒரு பக்கத்திற்கு (20 வரிக்குள்) அதிகப்படாமல் எழுது.

V. பின் வரும் வார்த்தைகளை யார், யாருக்கு, எதற்காக, எந்தச் சந்தர்ப்பத்தில் சொன்னார்கள் என்பதை எழுது:—(1) நீ வேண்டுமானால் கோவிலுக்குப் போய் வா. (2) கோவிலுக்குப் போனதற்குப் பலன் உடனே கிடைத்துவிட்டதா? (3) நீ வருத்தப் படாதே.

VI. முதலெழுத்து, சார்பெழுத்து என்றால் என்ன? அவைகள் யாவை? உதாரணத்துடன் எழுதுக.

---

## 2. தமிழ் நாடு

| | | | | |
|---|---|---|---|---|
| பாகம் | சங்கம் | துறைமுகம் | ஓவியம் | நாட்டியம் |
| முதல்-வரை | முத்து | அரசியல் | நூற்கள் | வைத்தியம் |
| ஆதரித்து | கலைகள் | மூவேந்தர் | பகுதி | சரித்திரம் |
| நாடு | சரக்குகளை | செலுத்துவதில் | அருகில் | பவளம் |
| பரவி | காவியங்கள் | சிற்பம் | விற்பனை | தீபஸ்தம்பம் |
| முரசு | தலைநகரம் | சங்கீதம் | தோணிகள் | பிற்காலத்தில் |
| பண்டைக் காலம் | | முகத்துவாரம் | கைதேர்ந்தவர்கள் | |

நாம் பேசுவது தமிழ் பாஷை. தமிழ் பேசுபவர்கள் வாழும் நாட்டுக்குத் தமிழ் நாடு எனப் பெயர். தமிழ் நாடு தென்னிந்தியாவின் தென் பாகத்திலுள்ளது. பண்டைக் காலத்தில் நம் தமிழ் நாடு கிழக்குக் கடற்கரைக்கும் மேற்குக் கடற்கரைக்கும் இடையே, தெற்கில் கன்னியா குமரி முதல் வடக்கே காஞ்சீபுரம் வரை பரவியிருந்தது.

நம் தமிழ் நாட்டை முன் காலத்தில் சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். தமிழ் நாட்டு மூவேந்தர் நீதி செலுத்துவதில் இணையில்லாதவர்கள். அவர்கள் காலத்தில் தமிழ்க் கல்வி ஓங்கி வளர்ந்திருந்தது. விவசாயம் செழிப்புற்றிருந்தது. ஜனங்கள் பெரிய தோணிகள் செய்து, அவைகளில் நம் நாட்டில் விளையும் சரக்குகளை ஏற்றி, பல இடங்களுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்தனர். அந்நிய நாடுகளோடும் அவர்கள் வியாபாரம் செய்தனர். தமிழர் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவர்களா யிருந்தனர். சிறந்த படை வீரர்களாய் விளங்கினர். அவர்களுக்கு இரும்பு முதலிய உலோகங்களில் பலவித ஆயுதங்கள் செய்யத் தெரிந்திருந்தது. சிற்பம், சங்கீதம், நாட்டியம், வைத்தியம், ஓவியம் முதலிய பல கலைகளிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்களது அரசியல் முறை உலகப் புகழடைந்திருந்தது. தமிழ்ப் புலவர் பலர், பல சிறந்த தமிழ் காவியங்களைச் செய்தனர். அரசர்கள் பல கலைகளையும், புலவர்களையும் ஆதரித்து வந்தனர்.

சேர ராஜ்யம் :—இது கேரளம் என்று சொல்லப்படும். இதில் கோச்சி, மலையாளம், திருவாங்கூரின் வடபாகம், சேலம் ஜில்லாவின் பெரும்பகுதி முதலிய தற்காலப் பகுதிகள் அடங்கி யிருந்தன. சேர நாட்டிற்குத் தலை நகரம் வஞ்சி. இதன் துறைமுகங்கள் முசிரி, மாந்தை, தொண்டி முதலியன. கோவலன் சரித்திரமாகிய சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காவியத்தைப் பாடிய இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனது தம்பியே. சேர அரசர்களின் கொடி, முரசுக் கொடியாகும்.

சோழ ராஜ்யம் :—இதில் தற்காலத்திய திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு, கோயம்புத்தூர் முதலியன அடங்கியிருந்தன. சோழ நாடு காவிரிப் பாய்ச்சலால் மிகவும் செழிப்பாய் இருந்தது. இந் நாட்டிற்குத் தலை நகரம், திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள உறையூர். பிற்காலத்தில் தஞ்சையும் காஞ்சியும் தலை நகரங்களாய் விளங்கின. இந் நாட்டிற்குத் துறைமுகமாய் விளங்கியது காவிரிப்பூம் பட்டினம். அது

காவிரி நதியின் முகத்துவாரத்தில் இருந்தது. அங்கு ஒரு தீபஸ்தம்பம் இருந்ததாகவும், பட்டினம் வெகு அழகாய் அமைந்திருந்ததாகவும், ஒரு காலத்தில் சோழ ராஜ்யத்தின் தலைநகராய் விளங்கியதாகவும் தமிழ் நூல்களிலிருந்து தெரியவருகிறது. அக்காலத்தில் அது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். தமிழில் இராமாயணம் பாடிய கம்பர் இந்நாட்டில் பிறந்தவரே. சோழர்களின் கொடி புலிக்கொடி யாகும்.

பாண்டிய ராஜ்யம் :—இது சோழ நாட்டிற்குத் தெற்கே இருந்தது. இதில் தற்காலத்திய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களும் திருவாங்கூரில் சில பாகங்களும் சேர்ந்திருந்தன. முதலில் மணலூர் பாண்டிய நாட்டின் தலைநகரமா யிருந்தது. பின்னர் மதுரை தலைநகர மாகியது. மதுரையிலுள்ள மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோவில் உலகப் பிரசித்தமானது. மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. பல தமிழ்ப் புலவர்கள் அச்சங்கத்தில் கூடி, பல அரிய பெரிய தமிழ் நூற்களைச் செய்தனர். அரசர்களும் புலவர்களாகவே விளங்கினர். இந் நாட்டிற்குத் துறைமுகம் கொற்கை. அந்நிய தேசத்து வியாபாரிகள் கொற்கையில் இறங்கி, தங்கள் சரக்குகளை விற்பனை செய்து, இங்கிருந்து மீன், முத்து, பவளம், தந்தம், மயில் முதலியவைகளை வாங்கிச் செல்வார்கள். பாண்டிய மன்னர்களுக்கு மாறன் என்றும் வழுதி என்றும் பட்டப் பெயர்கள் உண்டு. அவர்களுடைய கொடியிலும் நாணயங்களிலும் மீன் உருவம் வரையப்பட்டிருந்தது.

அக் காலத்தில் நம் தமிழ் நாடு எவ்வகையிலும் சிறந்து விளங்கியது. நாமும் நம் தமிழ் மொழியையும், தமிழ் நாட்டையும் எவ்வகையிலும் சிறந்தோங்கச் செய்வோமாக.

### பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—பரவு, நூல், பண்டைக் காலம், சிற்பம், ஓவியம்.

II. ஈரருத்தமுள்ள பதங்களை எடுத்து எழுதி வாக்கியகளின் மூலம் தனித் தனிப் பொருள்களை விளக்கு.

III. பின் வரும் கேள்விகளுக்கு விடை எழுது:—(1) பாண்டிய அரசர்களின் பட்டப் பெயர்களை எழுது. (2) சேர சோழ நாட்டின் அக்காலத்திய எல்லைகளைக் குறிப்பிடு. (3) தமிழ் நாடு மிகவும் நாகரிகமடைந்திருந்தது என்பதற்கு உதாரணங்கள் கூறு.

### உயிரெழுத்து

IV. தன்னில் ஒலி கொண்டதும் ஒலி உண்டாக்கக் கூடியதுமான எழுத்து உயிரெழுத்தாம். அ முதல் ஔ வரையிலுமுள்ள பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாம். (1) அவைகளில், குறுகிய ஒலியுள்ளதும், நீண்ட ஒலியுள்ளதுமான எழுத்துக்களைப் பிரித்து எழுது. (2) குறில், நெடில் எழுத்துக்களைக் கொண்டுள்ள வார்த்தைகள் சில எழுது.

உதாரணம்:—அரம், ஆரம், இனம், ஈனம், உண், ஊண், எங்கு, ஏங்கு, ஒட்டை, ஓட்டை, ஐயர், ஔவை.

## 3. தமிழ் இலக்கியம்

### (கும்மி)

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர் நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவோமே—என்றும்
உத்தம ராகி ஒழுகுவோமே. 1

பாவின் சுவைக்கட லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை
நாவின் இனிக்கப் பருகுவோமே—நூலின்
நன்னய முற்றுந் தெளிகுவமே. 2

தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே. 3

கற்றவர் மெச்சும் கலித்தோகை—யாமின்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே—காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே.

பண்டை இயற்கை வளங்களெல்லாம்—பத்துப்
பாட்டின் வளத்தினிற் கண்டறிந்து
மண்டல மெங்கும் கமழும்—அருந்தமிழ்
வாசம் நுகர்ந்து மகிழ்வோமே.

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## 4. சிங்கமும் ஆடும்

| | | | | |
|---|---|---|---|---|
| இடையன் | பேஷ் | அதட்டியது | பயமுறுத்தல் | சரணம் |
| சென்றுன் | அயல் | மரியாதை | பிழைக்க | மகாராஜா |
| இருட்டு | அச்சம் | பலகாரம் | இராகம் | துடிக்க |
| ஆத்திரம் | முட்கள் | துடுக்காய் | தாளம் | சாமர்த்தியம் |
| மதி | தைரியமாய் | வார்த்தை | பல்லவி | இருப்பிடம் |
| தாடி | மூர்க்கமான | மிருகேந்திரன் | அநுபல்லவி | புரட்டு |
| வேங்கை | பரவசம் | உருட்டு | முரட்டுத்தனம் | |

மலையோரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு மந்தையிலிருந்து கிழ ஆடு ஒன்று தப்பி மலைமேல் ஓடியது. அம்மந்தையை மேய்த்து வந்த இடையன், தப்பிச்சென்ற ஆட்டைப் பல விடங்களிலும் தேடிக் காணுமல் வருத்தத்துடன் வீடு சென்றுன்.

தப்பிச் சென்ற ஆடோ, மலையிலே பல விடங்களிலும் சுற்றி விட்டு ஒரு குகையண்டை வந்தது. அக்குகையில் ஒருவருமில்லாதிருக்கவே, தைரியமாய் உள்ளே புகுந்து படுத்துக்கொண்டது. பொழுது போன பிறகு இருட்டி விட்டதால், தன் மந்தைக்குப் போய்ச்சேர அதற்கு வழி தெரியவில்லை.

அக்குகை ஒரு மூர்க்கமான சிங்கத்தினுடையது. அச்சிங்கம் காடெங்கும் சுற்றித் தனக்கு வேண்டிய ஆகாரத்தை வயிறு நிறையத் தின்றுவிட்டுத் தன் குகைக்குத் திரும்பியது. குகையில் யாரோ புகுந்



திருப்பதாய்ச் சிங்கத்திற்குத் தெரிந்தது. அதனால் அது வெளியில் நின்றபடியே மிகுந்த கோபத்தோடு,

இராகம்—மோகனம் தாளம்—ஆதி

பல்லவி

ஆரடா கால் வைத்தவன்—என் குகைக்குள்ளே
ஆரடா கால் வைத்தவன்.

அநுபல்லவி

பாரடா இப்போதே ஓரறை அறைந்துன்னைப்
படக்கென்று பிடித்துள்ளம் துடிக்கக் கொன்றடித்துண்பேன் (ஆர)

சரணம்

இருட்டுப் பொழுதைக் கண்டு திருட்டுத்தனமாய் வந்து
உருட்டுப் புரட்டுச் சொல்லி முரட்டுத்தனம் செய்யவே (ஆர)

என்று கூறி அதட்டியது. இதைக் கேட்டதும் உள்ளே இருந்த ஆடு, தைரியத்துடன் சிங்கத்தை நோக்கி,

இராகம்—மோகனம் தாளம்—ஆதி

பல்லவி

பயலே நீ ஆரடா—என்னைப்
பார்த்திந்த வார்த்தையை ஆத்திரமாய்ச் சொல்லப் (பய)

அநுபல்லவி

அயலே இருப்பதற் கச்சமு மில்லாமல்
இயலே அறியாமல் எதிர்த்தனை பொல்லாத (பய)

சரணங்கள்

ஒருநூறு வேங்கையும் இருநூறு யானையும்
ஒரு நாளை உணவாக உண்டவன் நானென்று
தெரியாமல் நெருங்கினாய் சிங்கத்தைக் கண்டதும்
அருமையாத் தின்னவே ஆசைகொண்டிருக்கிறேன் (பய)

ஒரு சிங்கம் கிடைக்காமல் ஊரூராய்த் திரிகிறேன்
பரவசம் கொண்டென்னைப் பார்த்திது பேசிய
மரியாதை தெரியாத மதிகெட்ட சிங்கமே
வருவாய் உனை உண்டபின் வளர்தாடி எடுப்பேன் நான் (பய)

"பயலே! நீ யாரடா! என்னை யாரென்று தெரிந்துகொள்ளவில்லைபோலும்; நேற்று ஒரு தினத்துக்குள் நூறு வேங்கைகளும் இருநூறு யானைகளும் எனக்குப் பலகாரமாயின. ஆனால் சிங்கம் ஒன்றுகூடக் கிடைக்கவில்லையே என வருந்தினேன். சிங்கம் ஒன்றைத் தின்றபின்பே, சில நாளாய் வளர்த்துள்ள இத்தாடியை எடுக்கவேண்டும்

என்று எண்ணிக்கொண் டிருந்தேன். நீ சிங்கமானுல் இரு; இதோ வந்துவிட்டேன்" என்று வெகு துடுக்காய்க் கூறியது.

இது கேட்ட சிங்கம், "ஐயோ! இது என்ன, மிகவும் ஆச்சரிய மாயிருக்கிறதே! இதுவரை இம்மாதிரி மிருகத்தை நாம் கண்ட தில்லையே. நம் குகைக்குள் புகுந்துகொண்டு, நம்மையே பயமுறுத்த வேண்டுமாயின், இது எவ்வளவு தைரியமுள்ளதா யிருக்கவேண்டும். தைரியத்திற்குத் தக்க பலமும் இருக்குமல்லவா? நாம் பேசாமல் ஓடினுல் தான் உயிர்தப்பிப் பிழைக்கலாம். எதிர்த்து நின்ருல் இன்றோடு நம் வாழ்வு தீர்ந்துவிடும்" என்று எண்ணிக்கொண்டு ஓடியது.

சிங்கம் ஓடிய ஓட்டத்தைக் கண்ட ஒரு நரி சிங்கத்தை நோக்கி, "அரசே! என்ன? இன்று ஒருநாளுமில்லா ஓட்டமாயிருக்கிறதே! என்ன விசேஷம்?" என்று வினவியது. சிங்கம், "அப்பா! நான் என்னசொல்வேன்; என்னசெய்வேன்? எனக்குப் பெரிய ஆபத்து வந்து விட்டது. அதனுல்தான் நான் உயிர் பிழைக்க ஓடுகிறேன்" என்றது.

நரி:—காட்டில் வாழும் மிருகங்களுக்கெல்லாம் தலைவராகிய தங்களுக்கும் ஓர் ஆபத்து வருமா? அது என்ன? விஷயத்தை தயவு செய்து சொல்லுங்கள், கேட்போம்.

சிங்கம்:—நரியே? நான் என்ன செய்வேன்? என் குகைக்குள் ஏதோ ஒரு பெரிய பலமுள்ள மிருகம் புகுந்துகொண் டிருக்கிறது. அது என்னைக் கண்டவுடன் பாய்ந்து கொல்லவந்தது. நான் தலை தப்பினுல் போதும், என்று ஓடி வந்துவிட்டேன்.

நரி:—மிருகேந்திரா! நீங்கள் பயப்படத்தக்க மிருகமல்ல அது என்பது நிச்சயம். இருட்டிலே தங்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்காது. நாம் இருவரும் போய்ப் பார்ப்போம் வருகிறீர்களா?

சிங்கம்:—அப்பப்பா! நான் வரமாட்டேன். நீ வேண்டுமானுல் போய்ப் பார்த்துவிட்டு வா.

நரி:—மஹாராஜவே! நீங்கள் பயப்பட வேண்டாம். நானும் கூடவே வருகிறேன். இந்தக் கொடியால் என்னை உங்கள் வாலோடு சேர்த்

துக் கட்டிக் கொள்ளுங்கள். ஏதாயினும் ஆபத்து நேருமென்று தோன்றினால் என்னையும் கூட்டிக் கொண்டு வந்துவிடுங்கள்.

சிங்கமும் அதற்கு இசைந்து, நரியைத் தன் வாலில் கட்டிக் கொண்டு புறப்பட்டது. இரண்டும் குகையண்டை போயின. இவ்விரண்டும் வருவதைக் கண்ட ஆடு, தந்திரத்தால் தப்ப வேண்டுமென்றெண்ணி,

(இங்கிலீஷ் நோட்டு)

மந்திரித் தொழிலுக் கேற்ற தந்திரம் தெரிந்த நரி
வந்திட்டாய்—உணவு—தந்திட்டாய்.
இந்த க்ஷணம் சிங்கத்தினை இன்பமுறத் தின்றிடுவேன்
எங்கடா—உனக்கும்—பங்கடா.

"நரியே! பேஷ்! நீ தான் நல்ல மந்திரி. ஓடிப்போன சிங்கத்தை அழைத்து வந்து விட்டாய். மிகவும் வந்தனம். உனக்குரிய பங்கு கட்டாயம் கிடைக்கும்" என்று கூறியது.

இதைக் கேட்ட சிங்கம் நடு நடுங்கி, திரும்பிப் பாராமல் ஓட்டம் எடுத்தது. சிங்கத்தின் வாலில் கட்டப் பட்டிருந்த நரியோ, வழியிலுள்ள கற்களிலும், முட்களிலும் அடிபட்டு இறந்தது. தைரியமுள்ள ஆடும் தன் சாமர்த்தியத்தால் தப்பி, தனது இருப்பிடம் சேர்ந்தது.

### பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—ஆத்திரம், மதி, மூர்க்கமாய், துடுக்காய், சாமர்த்தியம்.

II. கோடிட்ட இடங்களில் எத்தனை விதமான வார்த்தைகளை அமைக்கலாம் என்பதைக் காட்ட, தனித் தனித்தாய் எடுத்து எழுது :—

(1) அவன்———பள்ளிக்கூடம்———.
,, வேகமாய் ,, வந்தான்.
,, மெதுவாய்ப் ,, ,,
,, வேகமாய் ,, போனான்.
,, மெதுவாய் ,,

அவன்——பள்ளிக்கூடம்——

,, நடந்து ,, போனான்

,, வண்டியில் ,, ,,

இன்னும் எத்தனையோ விதம் எழுதலாம். (2)——கிழ ஆடு மலைமேல்——ஓடியது (3) எனக்கு——ஆபத்து வந்து——.

III. (1) நரி பட்ட பாடு என்ன? ஏன் அந்த அவஸ்தை? (2) ஆடு எதனால் உயிர் பிழைத்தது?

IV. மெய்யெழுத்துக்கு சப்தம் உண்டா? ('க்' முதல் 'ன்' வரை.) வல்லினம் க், ச், ட், த், ப், ற்; மெல்லினம் ங், ஞ், ண், ந், ம், ன்; இடையினம் ய், ர், ல், வ், ழ், ள் ஒவ்வொரு இனமும் தோன்றும் ஐந்து வார்த்தைகளை எழுது.

# 5. பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வெந்நீரில் | நுனி | பருத்து | மாகாணத்தில் | பாதிரிகள் |
| கடுகு | உறங்கி | வெளியேற | பளபளப்பாயும் | ராத்தல் |
| உஷ்ணம் | பிசின் | முசுக்கட்டை | துவாரங்கள் | சவுக்காரம் |
| புழுக்கள் | தேனீ | இயற்கை | பொறிந்து | சாம்பல் |

ஆங்கிலம் பசுமை உதவாது கழிகள் உடுத்துகின்றனர் துளைத்துக்கொண்டு

பருத்திப் பஞ்சிலிருந்து நெய்யப்பட்ட ஆடைகளை, ஏழைகள் முதல் எல்லோரும் உடுத்துகின்றனர். ஆனால் பணம் உள்ளவர்கள் பட்டு ஆடைகளை அணிகிறார்கள். பட்டாடைகள் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும். இதன் காரணம் என்ன? பட்டு நூல் ஒரு வகைப் பூச்சியால் நூற்கப்படுவதாகையால் பட்டு மிருதுவாயும், பளபளப்பாயும் இருக்கிறது. இப் பூச்சியைப் பட்டுப் பூச்சி என்று சொல்கிறார்கள். இது எப்படி உண்டாகிறது என்பதைப்பற்றிக் கவனிப்போம்.



தாய்ப்பூச்சி முசுக்கட்டை இலையின்மேல், கடுகு போல் சிறுத்த முட்டைகளை இடும். அம்முட்டைகள் சுமார் இருநூறு முதல் நானூறு வரை இருக்கும். அம் முட்டைகளெல்லாம் சூரிய உஷ்ணத்தினால் பொறிந்து, புழுக்கள் வெளிப்படும். முட்டையி லிருந்து வெளிப்பட்ட புழு சுமார் அரைக்கால் அங்குல நீளமுள்ளதாகவும், சாம்பல் நிறமாயு மிருக்கும். இப் புழு முசுக்கட்டை இலையைத் தின்று வளர்ந்து, ஒரு வாரத்தில் நன்றாய்ப் பருத்துவிடும். பிறகு தன்தோலை உரித்துக்கொண்டு வெண்மை நிறமாகும். இந்தப்படியே அப்புழு ஐந்தாறு நாட்களுக்கு ஒரு முறையாக நாலைந்து தடவை தன் தோலை உரித்துக்கொள்ளும். வெண்மையாய் இருந்த புழு, தோல் உரிய உரிய, மஞ்சள் நிறமாக மாறி கடைசியில் பசுமை நிறமாய் விடும். உடனே முசுக்கட்டை இலைகளைத் தின்பதை நிறுத்திவிடும்.

இச்சமயம் பட்டுப் புழு ஒன்றரை அல்லது இரண்டு அங்குல நீளமுள்ளதாக இருக்கும். அப் புழு முசுக்கட்டைச் செடியின் கிளையில் தன் கூட்டைக் கட்டிக்கொள்ளும். அதற்காக அது, தன் வாயின் கீழுள்ள துவாரங்கள் வழியாக ஒரு வகைப் பிசினை வெளிப்படுத்தும். இந்தப் பிசின் மஞ்சள் நிறமாகவும், பளபளப்பாகவும் இருக்கும். இப் பிசினிலிருந்து நூல் நூற்றுத் தானும் உள்ளே இருந்துகொண்டே, தன் தேகத்தை மறைக்கும்படியான ஒரு கூட்டைக் கட்டிக் கொள்ளும். இதற்கு மூன்று நான்கு தினங்களாகும். இப்படிக் கட்டிய கூடு முட்டை வடிவமாயிருக்கும். கூட்டில் அடைபட்ட புழு மறுபடியும் ஒரு தரம் தோலுரித்து, பொன்னிறம் அடைகிறது.

பின் அப்புழு தன் கூட்டுக்குள்ளேயே பதினைந்து இருபது தினங்கள், தன்னை மறந்து உறங்கிக் கிடக்கும். இந்த உறக்கமே அதன் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றது. கூட்டுக்குள் இருக்கும் போது, நாளாக ஆக, உருவம் மாறிக்கொண்டே வந்து, கடைசியில் இறகு முளைத்த பட்டுப்பூச்சியாகிக் கூட்டைத் துளைத்துக் கொண்டு வெளியேறுகிறது. இதுவே பட்டுப் பூச்சியின் இயற்கை வளர்ச்சி.

இவ்வாறு பூச்சியை வெளியேறவிட்டால், பட்டு சின்ன பின்ன மாய் அறுந்து போகும். அந்தப் பட்டு ஒன்றுக்கும் உதவாது. ஆகை யால் பூச்சி உள்ளிருக்கும் பொழுதே, கூட்டை வெந்நீரில் போட்டுப் பூச்சியைக் கொன்று, பட்டு நூலை எடுத்துக் கொள்வார்கள். தேனீ தனது தேனுக்காக உயிரைக் கொடுப்பது போல், பட்டுப் பூச்சியும் பட்டுக்காகத் தனது உயிரைக் கொடுக்கிறது. இவ்வாறு எடுத்த பட்டை சவுக்காரம் கலந்த தண்ணீரில் கழுவிச் சுத்தப் படுத்துகிறார்கள். பிறகு அதன் நுனியைக் கண்டு பிடித்து, கழிகளில் சுற்றுவார்கள். சுமார் இரண்டாயிரம் கூடுகளிலிருந்து ஒரு ராத்தல் பட்டுக் கிடைக்கும். இந்தப் பட்டிலிருந்துதான் புடவைகளும், வஸ்திரங்களும் நெய்யப் படுகின்றன.

இந்தப் பட்டுப் பூச்சி முதலில் நம் நாட்டில் இருக்கவில்லை. சீன தேசத்தில் மட்டும் இப் பூச்சிகளை வளர்த்துப் பட்டாடைகள் நெய்து, நல்ல லாபம் சம்பாதித்து வந்தனர். பின்னர் ஐரோப்பியப் பாதிரிகள் மூலம் இது பல தேசங்களுக்கும் பரவலாயிற்று. இப்பொழுது உலகத் தில் இப் பூச்சிகளை வளர்க்காத தேசங்கள் இல்லை. நமது தேசத்தில் வங்காளம், மைசூர், பர்மா, காஷ்மீரம் முதலிய இடங்களிலும் பட்டு கிடைக்கிறது. நமது மாகாணத்தில் காஞ்சீபுரம், கோள்ளேகாலம், பெங்களூர், பெத்தாபுரம் முதலிய இடங்களில் பட்டாடைகள் நெய்யப் படுகின்றன.

### பயிற்சியும் கேள்வியும்

I. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை :— (1)——ஆடைகள் பளபளப்பாகவும், மிருதுவாகவும்——(2)——அதன் நுனியைக்——பிடித்து கழிகளில் சுற்றுவார்கள்.

II. எதிர்ப்பதங்கள் கூறு :—ஏழை, மிருது, உஷ்ணம், வெளி, நிறுத்து, மறை, உறக்கம், இயற்கை, வெந்நீர், சுத்தம், பரவு.

III. (1) பட்டுப் பூச்சியின் உற்பத்தியைப்பற்றி எழுது. (2) பட்டு எப்படிக் கிடைக்கிறது? (3) பட்டாடைக்கும் பஞ்சாடைக்கும் வித்தியாசம் என்ன?

IV. உயிர்மெய்யெழுத்துக்கள் :—மெய்யுடன் உயிர் சேர்ந்தால் உயிர்மெய் யெழுத்தாகும். உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டோடு சேர்ந்து ஒவ்வொரு மெய்யும் பன்னிரண்டு புது எழுத்துக்களாக மாறி இருநூற்று பதினறு உயிர் மெய் எழுத்துக்களாக மாறுகிறது.

உதாரணம் :—க் + அ = க ; க் + உ = கு ; க் + ஓ = கோ.

'ங்' என்ற மெய் எழுத்து ஒவ்வொரு உயிருடனும் சேர்ந்து எப்படி மாறுகிற தென்பதை எழுது.

---

## 6. புத்தியும் வித்தையும்

| | | | | |
|---|---|---|---|---|
| போதாது | தருணம் | அனுபவம் | புத்தகப் புழு | பயின்று |
| பகுத்தறிவு | ஒழுங்காக | பட்டினம் | புத்திசாலி | முட்டாள் |
| தேக சுகம் | எப்பொழுதும் | மற்ருெருவன் | மூத்தவன் | ஆனபின் |
| சிதறி | பழகுவதற்கு | அற்பப்பதரே | மூடன் | கூடப்பிறந்தவன் |
| ஆசிரியர் | ஆவல் | எப்படியும் | வித்தை | கண்ணுங் கருத்துமாய் |

இவ்வுலகில் ஒருவன் பலவிதமான வித்தைகளைக் கற்ருல் மட்டும் போதாது. ஆனுல் அதற்குத் தகுந்தாற்போல் பகுத்தறிவு என்னும் புத்தியும் இருக்க வேண்டும். சிலர் தமக்குப் பாடமாக உள்ள புத்தகங்களைப் படிப்பதைத் தவிர, வேறு எக்காரியத்தையும் கவனிப்பதில்லை. எப்பொழுதும் புத்தகத்தையே படித்து, புத்தகப் புழுவாக இருப்பதில் நன்மையே யில்லை. அவ்வாறு இருப்பதினுல் தேகசுகம் கெடும். அத்துடன் 'இது நல்லது', 'இது கெட்டது', என்று பகுத்தறியக் கூடிய சக்தியும் இல்லாது போய்விடும். ஆகையால் நன்ருய்ப் படிப்பதுடன், உலகத்திலுள்ள பலவித மனிதர்களிடமும், பிராணிகளிடமும் தகுந்தபடி பழகுவதற்கு ஏற்ற புத்தியையும் அடைதல் வேண்டும். வித்தைமட்டும் இருந்தால் பிரயோசனம் இல்லை. புத்தியும் இன்றியமையாதது.

உதயபுரம் என்ற ஊரில் நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் நால்வரும் கல்வி கற்பதற்காக ஜயபுரம் என்ற ஊருக்குச் சென்ருர்கள். அங்கே அவர்கள் ஒரு நல்லாசிரியரை யடைந்து, பல

வித்தைகளைப் பயின்று வந்தார்கள். அவர்களில் கடைசி சகோதரனுன சுபுத்தி என்பவனுக்கு வித்தை சிறிதும் வரவில்லை. அவ்வித்தைகளைக் கற்றுக்கொள்ள ஆவல் கொஞ்சமும் அவனுக்கு ஏற்படவில்லை. ஆனுல் அவனுக்கு உலக அனுபவமும் நல்ல சாமர்த்தியமும் ஏற்பட்டது. மற்ற மூவரும் எப்பொழுதும் வித்தைகளைக் கற்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்து வந்தனர். அவர்களுக்கு வித்தையைத் தவிர வேறு ஒரு விஷயமும் தெரியவில்லை. அவர்கள் சுபுத்தியை மூடன் என்று எண்ணி, வெறுத்து வந்தார்கள்.

இவ்வாறே நான்கு வருஷங்களில் அவர்களது படிப்பு முடிவடைந்தது. மூத்தவர்கள் மூவரும் சகல வித்தைகளிலும் வல்லவர்களானுர்கள். சுபுத்தியோ புத்திசாலியாகவும், ஆனுல் படிப்பில்லாதவனுகவும் இருந்தான். அவர்கள் நால்வரும் தங்கள் ஆசிரியரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ராஜபுரி என்ற பட்டினம் இருந்தது. அப்பொழுது மூத்தவன் மற்றவர்களை நோக்கி, "சகோதரர்களே! இன்னும் சிறிது தூரத்தில் ராஜபுரி என்ற நகரம் இருக்கிறது. அதை ஆளும் அரசன், கல்வியில் வல்லவர்களுக்குச் சிறந்த பரிசுகள் அளிக்கின்முனும். நாமும் அங்கே சென்று பரிசுபெற்று வருவோம். ஆனுல் நம்முள் சுபுத்தி மிகவும் மூடன். ஆகையால் அவனை இங்கேயே விட்டு விட்டுப் போவோம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்முன்.

அது கேட்ட மூன்மும் சகோதரன், "அண்ணன்மார்களே! படிக்காத முட்டாளாயிருந்த போதிலும், சுபுத்தி நம் கூடப்பிறந்தவன் அல்லவா? ஆகையால் அவனையும் கூட்டிக்கொண்டே செல்வோம்" என்று கூறினுன். மற்றவர்களும் இதற்குச் சம்மதித்தனர். பிறகு நால்வரும் ராஜபுரியை நோக்கிப் புறப்பட்டனர். போகும்பொழுது அவர்கள் ஒரு காட்டின் வழியாய்ச் செல்ல நேர்ந்தது. அக்காட்டின் நடுவே ஓரிடத்தில் சில எலும்புகள் சிதறிக் கிடந்தன. அதைக் கண்டதும் மூத்தவன், "தம்பிமார்களே! நாம் கற்ற வித்தையைப் பரிசை செய்ய ஒரு நல்ல தருணம் கிடைத்திருக்கிறது. இத்தருணத்தைக் கை

விடக்கூடாது. இதோ, இறந்த ஒரு புலியின் எலும்புகள் கிடக்கின்றன. நம்மவருள் ஒருவன் இந்த எலும்புகளை ஒழுங்காக அடுக்கட்டும். மற்றொருவன் இதற்குத் தோலும் சதையும் உண்டாக்கட்டும். நான் இதற்கு உயிர் கொடுக்கிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான்.

இதுகேட்ட சுபுத்தி மிகவும் பணிவுடன், "அண்ணன்மார்களே! தயவுசெய்து நீங்கள் செய்யப்புகும் காரியத்தை யோசித்துச் செய்யுங்கள். இறந்த புலியை நீங்கள் உயிர் கொடுத்து எழுப்பினால், அது நம்மையே முதலில் கொன்றுவிடும். ஆகையால் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டாம். வேறு வழிகளில் உங்கள் வல்லமையைப் பரிக்ஷிக்

கலாம்'' என்று கூறி வேண்டினான். அப்போது மற்றொரு சகோதரன் சுபுத்தியை நோக்கி, "அடே! அற்பப்பதரே! வித்தை கற்காத முழு மூடனாகிய நீயா எங்களுக்கு புத்தி சொல்லுகிறாய்? அண்ணன் கூறிய படியே உன்னை அங்கேயே விட்டுவிட்டு வந்திருக்கவேண்டும்'' என்று கோபத்துடன் கூறினான். மற்ற சகோதரர்களும் அவ்வாறே சுபுத்தி யைக் கண்டிக்கலாயினர்.

ஆனால் சுபுத்தியோ அவர்களை வணங்கி, "அண்ணன்மார்களே! நீங்கள் எப்படியும் செய்து கொள்ளுங்கள். ஆனால் தயவு செய்து நான் ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொள்ளும்வரை பொறுங்கள். பிறகு உங்கள் வித்தைகளைப் பரிக்ஷித்து, அதன் பலனை அடையுங்கள்'' என்று கூறி, ஒரு பெரிய மரத்தின்மேல் ஏறிக்கொண்டான்.

சுபுத்தி மரத்தின்மேல் ஏறிக் கொண்டபின் சகோதரரில் ஒருவன் இறந்த புலியின் எலும்புகளை ஒழுங்காய் அடுக்கினான். இன்னொருவன் அதற்குத் தோலும் சதையும் உண்டாக்கினான். மூன்றாவது சகோதரன் அப்புலிக்கு உயிர் கொடுத்தான். உயிர் பெற்றெழுந்த புலியோ, அம் மூவர் மேலும் பாய்ந்து, அவர்களைக் கொன்று தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டது. புலி ஓடி வெகு நேரம் ஆனபின், சுபுத்தி மரத்திலிருந்து இறங்கி, வீட்டுக்குச் சென்றான். ஆகையால் வித்தை இருந்தால் மாத்திரம் பிரயோசனம் இல்லை. சமயத்திற்குத் தகுந்த புத்தி யும் வேண்டும்.

## பயிற்சியும் கேள்வியும்

I. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை:—சிதறு, தருணம், பழகு, மற்றொரு, பயில்.

II. நீ இதுவரை படித்துள்ள அல்லது அறிந்துள்ள பழமொழிகள் சில எழுது.

III. (1) கல்வி கற்கப் போனவர்களுக்குள் இருந்த வேற்றுமைகள் என்னென்ன? (2) புத்தகப் புழுவாயிருப்பதை நீ விரும்புகிறாயா? ஏன்?

IV. (1) தமிழில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் என்பதை எழுது. (2) ஆயுத எழுத்து என்றால் எது? அதை ஒரு வார்த்தையில் உபயோகித்து அந்த வார்த்தையின் அர்த்தம் விளங்க வாக்கியத்திலமை.

V. நாய் குலைக்கிறது. இதில் நாய் ஒரு பொருளின் பெயர்; அப்படிப்பட்ட சொற்களுக்கெல்லாம் பெயர்ச் சொற்கள் என்று பெயர். குலைக்கிறது என்பது ஒன்றின் வேலையை அல்லது தொழிலைக் குறிக்கிறது. தொழிலைக் குறிக்கும் சொல் தொழிற் சொல் அல்லது வினைச்சொல் என்று பெயர். ஆகவே ஒரு வாக்கியத்திற்கு ஒரு பெயர்ச் சொல்லும் ஒரு வினைச்சொல்லும் கட்டாயம் தேவையெனத் தெரிகிறது. பெயர்ச்சொல் வினைச்சொல் மட்டும் வரும் பத்து வாக்கியங்கள் எழுது.

---

## 7. பாய் பின்னுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| விடுத்து | உழைப்பு | தங்களுக்கு | கோரம்பாய் | பதப்படுத்தி |
| திருந்த | தாங்கள் | மேலானது | சிலவற்றை | சிரமமாய் |
| முறிந்து | சாதித்து | கைத்தொழில் | இலகுவில் | நாளடைவில் |
| வாரி | இழைத்து | காய்ந்தும் | கிட்டத்தட்ட | தாழம்பாய் |
| தாழை | உசிதம் | மத்தியில் | நேரானதாக | செய்வன |
| சிக்கன | பொதிந்து | தொடுத்து | ஆதாரமாய் | அகலம் |
| இர்க்கு | மடிப்பு | சமமாக | பலப்படுத்தி | எதிர்பார்ப்பது |
| முதலிய | வர்க்கம் | அமைக்க | கோடுகள் | முற்படவேண்டும் |
| | | விசனிக்கத்தக்கது | | |

படுக்கப் பாயும் உடுக்க உடையும், உண்ண உணவும் ஒரு மனிதனுக்குத் தேவையானவை. இவை மூன்றும், கைகளின் உழைபபினால் கிடைக்கக் கூடியதே. செல்வவந்தர்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே தங்களுக்கானவைகளைச் சாதித்துக்கொள்ள முடியும். ஆனால் சாதாரண மனிதர்கள் அப்படிச் செய்துகொள் வது கூடாத காரியம். அவனவன் தனக்கு வேண்டிய ஆகார, உடை, படுக்கைக்கானவைகளைத் தானே தேடிக்கொள்ளின், அதுவே உலகத்திலுள்ள சிக்கன முறைகளிலெல்லாம் மேலானதாகும்.

எது எவ்வாறிருப்பினும் பாய் பின்னுதல், கயிறு திரித்தல் முதலிய சிறிய கைத் தொழிலையும் செய்யாது விடுத்து, அதற்காக அந்நியரையும் பிற நாட்டையும் எதிர்பார்ப்பது நம் வர்க்கத்திற்கே அவமானத்தை அளிப்பதாக இருக்கிறது. ஆகையால் இச் சிறு தொழில்களை நாமே செய்ய முற்பட வேண்டும்.

பாய்களில், கோரப்பாய் என்றும், ஓலைப்பாய் என்றும், தாழம் பாய் என்றும் பல வகைகள் உண்டு. இவைகளில் உஷ்ணப் பிரதேசமாகிய நம் தேசத்தில், அதிலும் தமிழ் நாட்டில் கோரைப் புல்லும், பனை, தாழை ஓலைகளும் அதிகம். அவைகள் பிரயோசன மற்றவைகளாய்க் காய்ந்தும், அடுப்புத் தீயில் எரிந்தும் வீணுவது மிகவும் விசனிக்கத் தக்கது. பாய் பின்னும் தொழிலை இலகுவில் கற்றுக்கொள்ள முடியுமாதலால், அதைக் கற்றுக்கொள்வது மிகவும் நன்மையும் பிரயோசனமுமானது.

பனை ஓலையை, முதலில் கூரிய கத்தியினுல் ஓலையின் இரு ஓரங்களும் கிட்டத்தட்ட ஒரே அகல முள்ளதாக இருக்கும்படி, வேண்டிய மட்டிலும் இழைத்து அல்லது வாரி வைத்துக் கொள்ள வேண்டும். ஈர்க்குகளைப் போக்கி, அவைகளில் சிலவற்றை நேரானதாக எடுத்து ஒழுங்குப்படுத்தி வைத்துக் கொள்ளுதல் நலம்.

ஈர்க்கில் ஒன்று எடுத்து 'ட'வைப்போல் வளை. 'ட'விலுள்ள மூலையை, ஒரு ஓலையால் பொதிந்து மூடு. அப்படி மூடின அந்த ஓலையை, இரண்டு மடிப்பும் 'ட'வின் இரு கோடுகளுக்குச் சரிமத்தியிலிருக்கும்படி வைத்துக்கொள். இப்பொழுது மூன்று கோடுகள் உனக்குக் கிடைக்கிறது. இப்பொழுது இந்த மூன்றையும் ஆதாரமாய் வைத்து, ஒரு ஓலையால் பின்ன ஆரம்பிக்க வேண்டும். நடுமத்தி ஓலை மேலே வரும்படியும் இரு ஓரங்களின் ஈர்க்குகள் கீழே வரும்படியும் பின்னி, இப்பொழுது பின்னிய ஓலையின் இரு நுனிகளும் அதன் கீழிருக்கும் ஈர்க்குக்கு கீழாகச் சுற்றி, மத்திய ஓலைக்குச் சமமாக நிற்கும்படி மடக்கு. இப்பொழுது முன் மூன்ருக இருந்த இதழ்கள் இப்பொழுது ஐந்தாக இருக்கக் காண்பாய். இப்படியே ஒவ்வொரு தடவை


A
B
C
D
45°
45°

பின்னும்போதும், இரண்டு இதழ்கள் அதிகப்படுவதையும், அந்த ஒவ்வொரு ஓலையும் தன் இரு நுனி ஓலைகளால் ஈர்க்கை மறைத்து வருவதையும் காண்பாய். இப்படியே வேண்டிய அகலத்திற்கும் நீளத்திற்கும் ஈர்க்கை தொடுத்துக்கொண்டு, ஓலைகளால் பின்னல் செய். பின்பு மற்ற மூலைகளை வேண்டிய இடத்தில் ஈர்க்கை மடித்துக் கொண்டு, முன்னையப் பின்னலின் ஒழுங்கை விடாமல் பின்னினால், புது மூலைகளுக்கப் பாலுள்ள ஓலைகளை ஈர்க்கைச் சுற்றி மடக்கும்போது, முன்னையப் பின்னலுக்கு எதிர்த்துச் செல்வதைக் காண்பாய். அதை அப்படியே பின்னிப் பாயைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதே முறையால் தான் தாழம் பாயையும் பின்னுகிறார்கள். ஓலைகளும், ஈர்க்கும் முறிந்து போகாதபடி அடிக்கடி தண்ணீர் தெளித்துப் பதப்படுத்திக் கொள்வது உசிதம்.

முதலில் அதன் ஓரங்கள் நேராக அமைக்கச் சிறிது சிரமமாயிருக்கும். நாளடைவில் அதைத் திருப்திகரமானதாகச் செய்து கொள்ளலாம்.

எத்தொழில்களிலும் கைத்தொழிலே மேல்.
'செய்வன திருந்தச் செய்.'

### பயிற்சியும் கேள்வியும்

I. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—உழை, உழைப்பு, விசனி, விசனம், சமம், அகல, அகலம்.

II. பாய் பின்னுதல் என்பதைப்பற்றி வியாசம் எழுது.

III. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை :—(1) பாய்——— கயிறு———முதலிய சிறிய கைத்தொழிலையும்———விடுத்து———அந்நியரையும் ———எதிர்பார்ப்பது———வர்க்கத்திற்கே———அளிப்பதாக இருக்கிறது.

IV. அழி, அளி ; தணி, தனி ; எரி, எறி ; தரி, தறி ; மரி, மறி ; பரி, பறி. இந்தவிதமாக வரும் இன்னும் பல வார்த்தைகளை எழுதி அவைகளின் அர்த்தம் விளங்க வாக்கியங்களில் அமை.

V. பெயர்ச் சொற்களில் பின் வருபவைகளுக்கு இணங்க ஐந்தைந்து பெயர்கள் எழுது :—(1) பொருட் பெயர் (உ—ம். கந்தன்) (2) இடப் பெயர் (உ—ம். வீடு.) (3) காலப் பெயர் (உ—ம். காலை) (4) உறுப்பின் பெயர் அல்லது சினைப்பெயர் (உ—ம்.

கை) (5) குணப் பெயர் அல்லது பண்புப் பெயர் (உ—ம். பசுமை) (6) தொழில் பெயர் (உ—ம். படித்தல்)

---

## 8. நெற்பானையும் எலியும்

### (கும்மி)



பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையும் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா. 1

உள்ளே புகுந்துநெல் தின்று தின்று—வயி
றூதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும்—ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா. 2

பானையைக் காலை திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு
பூனை எலியினைக் கண்டதடா—ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா. 3

கள்ளவழியிற் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ள படியே நடப்பவர்க்குத்—தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா. 4

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

---

# 9. வீரத்தாதி

| | | | | |
|---|---|---|---|---|
| இளவரசன் | திரட்டி | வழிதேடினன் | போஷித்து | நிலைத்து |
| ஆபரணம் | கத்தி | வாக்களித்தான் | மிகுந்தவர்கள் | ராஜபக்தி |
| தாதி | எவ்வாறு | பரபரப்புடனும் | பெயர்பெற்றது | அபகரிக்க |
| கலகம் | ரஜபுத்திரர் | ராணு | நம்பிக்கை | வேலைக்காரன் |
| உருவிய | அஞ்சார்கள் | காவலர் | பாராட்டி | செய்கைகள் |
| | முன்வருவார்கள் | | நடைபெறுகிறது | |

நம் இந்தியா தேசத்தில் ரஜபுத்திரர் என்ற ஒரு ஜாதியார் இருந்தனர். அவர்கள் மிகவும் சிறந்த வீரர்கள் பிறருக்கு உதவி செய்ய, தமது உயிரையும் கொடுக்க முன் வருவார்கள். அவர்கள் ராஜபக்தி மிகுந்தவர்கள். ரஜபுத்திர ஸ்திரீகளோ கற்பையே தமது ஆபரணமாகக் கருதுபவர்கள். கத்தி யெடுத்து யுத்தம் செய்யவும் அஞ்சார்கள். ரஜபுத்திரர்களுடைய ராஜ்யம் ராஜபுதனம் என்பது. ராஜபுதனத்தில் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைவன் ஒருவன் உண்டு. அவனை ராணு என்று சொல்லுவார்கள். இந்தப் பிரிவுகளுள் மீவார் ராஜ்யம் மிகவும் பெயர் பெற்றது. அதை விக்ரமஜித் என்னும் ராணு ஆண்டு வந்தான்.

மீவாரில் வனவீரன் என்பவன் சேனாதிபதியா யிருந்தான். அவன் மிகவும் கொடியவன். மீவார் ராஜ்யத்தை அபகரிக்க எண்ணங்கொண்டான். தன் கீழுள்ள சேனையின் உதவியால், திடீரென விக்ரமஜித் ராணுவைக் கொன்றுவிட்டான். பிறகு தானே அரசனாக நிலைத்திருக்கவேண்டி, ராணுவைச் சேர்ந்தவர்கள் யாவரையும் கொல்ல

வழி தேடினன். அப்பொழுது விக்ரமஜித்தின் தம்பியான உதயசிங் சிறு குழந்தையாயிருந்தான். அவன் பன்னு என்னும் தாதியால் வளர்க்கப்பட்டு வந்தான். பன்னு விக்ரமஜித்தினிடம் வேலை பார்த்தவள்.

வனவீரன், ராணவைக் கொன்றதையும், உதயசிங்கைக் கொல்ல விருப்பதையும் அவள் அறிந்தாள். எப்படியும் ராஜகுமாரனை உதயசிங்கைக் காப்பாற்ற நினைத்தாள். விக்ரமஜித்திடம் வேலை பார்த்த, நம்பிக்கையுள்ள வேலைக்காரன் ஒருவனை இவ்விஷயத்தில் உதவிசெய்ய வேண்டினள். அவனும் அவளுக்கு உதவி செய்ய வாக்களித்தான். ஆனல் வனவீரன், உதயசிங்கை யாரும் வெளியே கொண்டுபோக முடியாதபடி காவல் வைத்திருந்தான். ஆகையால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வாறு சில நாட்கள் சென்றன. வனவீரன் செய்கைகள் அந்நாட்டிலுள்ள சில பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை. சிலர் கலகம் செய்ய ஆரம்பித்தனர். 'உதயசிங் உயிருடன் இருப்பதாலேயே இவ்வாறு நடைபெறுகிறது' என்றெண்ணிய வனவீரன், உதயசிங்கைச் சீக்கிரம் கொல்ல நினைத்தான். ஒருநாள் நடு இரவில் அந்த நம்பிக்கையுள்ள வேலைக்காரன் பன்னுவிடம் ஓடிவந்து, "அம்மா! பெரிய ஆபத்து வந்துவிட்டதே. இனி என்ன செய்வோம்? எவ்வாறு இளவரசனைக் காப்பாற்றுவோம்? வனவீரன் உருவிய கத்தியுடன் நம் இளவரசனை வெட்ட வருகிறுன். தப்ப வழியில்லையே" என்று பரபரப்புடனும் விசனத்துடனும் கூறினன். பன்னு சமயத்திற்குத் தகுந்த யோசனையுடையவளாதலால், உடனே ஒரு கூடையில் உதயசிங்கை வைத்து, அவன்மேல் பழங்களையும் இலைகளையும் போட்டு நன்கு மூடி, அவ்வேலைக்காரன் கையில் ஒப்புவித்தாள். மீவார் நாட்டைத் தாண்டி, அடுத்த நாட்டு அரசனிடம் இளவரசனை ஒப்பிவிக்க வேண்டினள். அவ்வேலைக்காரனும் ஒத்துக்கொண்டு, அக் கூடையைத் தலைமேல் சுமந்து கொண்டு வெளியே சென்றுன். காவலரும் அது பழக்கூடையென்றெண்ணிப் பேசாமல் இருந்துவிட்டனர்.

வனவீரன் உள்ளே நுழைவதற்குள் பன்னா, உதயசிங்கின் வயதும் உயரமும் உள்ள தனது குழந்தைக்கு ராஜகுமாரனது உடைகளை அணிவித்தாள். இளவரசனது தொட்டிலில் தன் குழந்தையைப் படுக்க வைத்தாள். உருவிய கத்தியுடன் உள்ளே நுழைந்த வனவீரன் பன்னாவை நோக்கி, "எங்கே! ராஜகுமாரன்! ராஜகுமாரன் எங்கே? உடனே காண்பி" என்று கோபத்துடன் கூறினான். ஆனால் பன்னாவோ வாய் திறக்கவில்லை. தொட்டிலையே பார்த்தவண்ணமா யிருந்தாள். வனவீரனும் தொட்டிலிலிருந்த குழந்தையே உதயசிங் என்றெண்ணி, கத்தி




யால் அதை வெட்டிவிட்டு வெளியே சென்றான். ராஜகுமாரனைக் காப்பாற்ற, தன் குழந்தை இறந்ததற்காகப் பன்னா சிறிதும் விசனப்படவில்லை. ஆனால் அரண்மனையை விட்டு உடனே வெளியே சென்று விட்டாள். என்னே பன்னாவின் ராஜபக்தியும் தியாகமும்!

உதயசிங்கைக் கொண்டு சென்ற வேலைக்காரன் அடுத்த நாட்டு அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனும் உதயசிங்கை ஒருவருக்கும் தெரியாமல் வளர்த்து வந்தான். நாளடைவில் உதயசிங் சகல

வித்தைகளையும் கற்றுப் பெரிய வீரனானான். தன் பிறப்பு வளர்ப்பை யறிந்தான். வேண்டிய படைகளைத் திரட்டி, மீவார்மேல் படை யெடுத்து வனவீரனைக் கொன்று, தான் ராணுவானான். வனவீரனது கொடுமையிற் சிக்கி வருந்திய குடிகளும் உதயசிங் ராணுவை எதிர் கொண்டழைத்தனர். உதயசிங்கும் குடிகள் மகிழ அரசாட்சி புரிந்தான்.

உதயசிங் ராணுவானதும், பெற்ற பிள்ளையைக் கொடுத்துத் தன்னைக் காத்த, பன்னுவைத் தேடிக் கண்டு பிடித்தான். அவளை அரண்மனையிலேயே, தன் சொந்தத் தாயைப்போல் பாராட்டிப் போஷித்து வந்தான். பன்னுவும் தன் சொந்தப் பிள்ளை உயிர் பெற்று வந்தாற்போல் சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தாள்.

ஆனால் உதயசிங் என்ன செய்தாலும், பன்னுசெய்த உதவிக்கும் தியாகத்துக்கும் இணையாகுமா? அவளுடைய உதவியே உதவி! அவள் செய்த தியாகமே தியாகம்! அவளே வீரத்தாதி!

### பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை:—உருவு, பாராட்டு, பரபரப்பு, அபகரி, திரட்டு.

II. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை:—(1) நம்——நாட்டில் தமிழ்——அதிகமாய் —— இருந்து வருகிறது; (2) உன்னத —— உள்ள —— தங்கள் முன்னைய நிலைமையை——கடவுள் துணை செய்வார்.

III. (1) வீரத்தாதி என்று சொல்ல பன்னு செய்த அரிய காரியங்கள் என்னென்ன? (2) நீ உதயசிங்கென்று வைத்துக்கொண்டு அக் கதையின் சம்பவத்தைச் சுருக்கி ஒரு பக்கத்திற்குள் எழுது.

IV. பெயர்ச்சொல்லை, உயர்திணை, அஃறிணை என இருவகையாய்ப் பிரிக்கலாம். கடவுளும் மனிதனும் உயர்திணை. மற்றவைகள் எல்லாம் அஃறிணை.

(உ-ம்) கந்தன், மனிதன், கடவுள், சீதை—உயர்திணை.
மாடு, வீடு, கல், கப்பல்—அஃறிணை.

இப்பாடத்தில் வரும் ஐந்து உயர்திணை ஐந்து அஃறிணைப் பெயர்கள் எழுது.

---

# 10. உமார்

| | | | | |
|---|---|---|---|---|
| சீடர்கள் | குரு | வழக்குகள் | வனாந்திரங்களில் | ரொட்டிகள் |
| ஈவிரக்கம் | சித்தம் | தழுவினர் | குதிரை யேற்றம் | பகிர்ந்து |
| ஒழிவு | விழுந்து | மன்றாடினாள் (ர்) | சாதுரியம் | பொக்கிஷம் |
| தக்க | என்பவர்கள் | மனச்சாட்சி | வித்தியாசம் | நிபுணர் |
| ஊதியம் | கல்நெஞ்சம் | அனுமதி | எண்ணினார் | பொங்கி |
| துன்பம் | படைத்தவர் | ஏற்பாடு | கேள்வியுற்றார் | கொடுமை |
| துணியீர் | தயங்கினார் | தொழுது கொண்டு | வசைமொழிகள் | சீமான் |
| ஆராய | மல் யுத்தம் | முதன்மையானவர்கள் | விரைந்து | நித்திரை |
| இழைத்த | பணக்காரன் | பெருந்தன்மையான | ஆங்காங்கு | விடுதி |
| | | அடிகள் | | |

அரேபியாவில் முகம்மது நபி தமது மார்க்கத்தைப் பரவச் செய்து கொண்டிருந்த காலத்தில் அவருக்கு அநேக சீடர்களிருந்தனர். அவர்களில் அபு பகர், உமார் என்பவர்களே முதன்மையானவர்கள்.

மெக்காவில் ஒரு பெருந்தன்மையான குடும்பத்திற் பிறந்தவர் உமார். தம் இளமைப் பருவத்தில், தேச வழக்கப்படி ஒட்டகங்கள் மேய்த்து வந்தார். இவருடைய தகப்பனார் கல்நெஞ்சம் படைத்தவர். ஈவிரக்கமின்றிச் சில சமயங்களில் உமாரைத் தண்டிப்பார். உமாரும் குரங்கு கையிலகப்பட்ட பூமாலையைப்போலக் கஷ்டப்பட்டார். நல்ல ஆகாரமும் உடையுமின்றி உமார் பகல் முழுவதும் வனாந்தரங்களில் ஒட்டகங்களுடன் அலைந்து திரிய வேண்டியிருந்தது. ‘தன் கையே தனக்குதவி’ என்பதற்கிணங்க, தமது ஒழிவு நேரங்களில் பிறரது உதவியால் கல்வி கற்றுக்கொண்டார்.

தக்க பருவம் வந்ததும் உமார், குதிரையேற்றம், மல்யுத்தம், ஓட்டம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினார். அஞ்சா நெஞ்சும், வாக்குச் சாதுரியமும் அவரோடு பிறந்த பொக்கிஷமாக இருந்தன. நியாயங்கள் எடுத்துச் சொல்வதில் நிபுணர். ஏழை அல்லது பணக்காரன் என்றும், இனத்தான் அல்லது அந்நியன் என்றும் வித்தியாசம்

பாராமல், நியாயமாய் வழக்குகளைத் தீர்த்து வைப்பார். இவர் வியாபாரம் செய்யத் தலைப்பட்டார். அதில் இவருக்குப் பெயரும் புகழும் கிடைத்ததோடு, நல்ல ஊதியமும் கிடைத்தது.

அக்காலத்தில் முகம்மதிய மதம் பரவத் தொடங்கியதை விரும்பாதவர்களில் உமாரும் ஒருவர். முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் மிகவும் கஷ்ட நஷ்டத்திற்குள்ளாக்கினார். இவர் முகம்மது நபியையே கொலை செய்ய எண்ணினார். அதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் திடீரெனத் தம் சகோதரியும் அவர் குடும்பத்தாரும் முகம்மதிய மார்க்கத்தைத் தழுவினர் என்று கேள்வியுற்றார். அவரது கோபம் பொங்கியெழுந்தது. உருவிய கத்தியும் கையுமாய் தம் சகோதரியின் வீடு சேர்ந்தார். அவர்களை மிகவும் கொடுமைக்குள்ளாக்கினார். 'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே' என்று கூறிப் பல வசைமொழிகளை வழங்கினார். அவரது சகோதரி இத்துன்பத்திற் கிடையிலும், " 'அல் குர் ஆன்' என்ற புத்தகத்தை ஒருதடவையாகிலும் படித்துப் பார்த்தால், நீர் இப்படியெல்லாம் செய்யத் துணியீர். முகம்மதிய மதத்தை மதித்து, அதனைத் தழுவுவீர் " என்று கூறி மன்றாடினாள்.

இதில் சிறிதாகிலும் உண்மையிருக்கவேண்டுமென்று உமாரின் மனச்சாட்சி கூறியது. அல் குர் ஆன் புத்தகமொன்றைப் பெற்றார். தனியான ஓரிடத்தில் அமர்ந்து, அதனை ஆராயத் தொடங்கினார். முடிவில் உண்மையை அறிந்தார். தாமும் முகம்மதியராக மனங்கொண்டார். முகம்மதியர்களுக்குத் தாமிதுவரை இழைத்த துன்பங்களனைத்தையும் நினைந்து நினைந்து மனமுருகினார். முகம்மது நபியிடம் மன்னிப்புக் கேட்க விரைந்து சென்றார். முகம்மது நபியின் அடிகளில் விழுந்து மன்றாடினார். மன்னிப்புப் பெற்று,முகம்மதிய மார்க்கத்தை மேற்கொண்டார். மனக்கவலை தீர்ந்தார். முகம்மதிய மார்க்கத்திற்காகப் போராட முன் வந்தார்.

முகம்மதியர்களுக்கிருந்த கஷ்டங்களை முன்னிட்டு முகம்மது மெக்காவிலிருந்து மேடினாவுக்குச் சென்றார். உமாரும் அபு பகர் என்ற

சீமானும் அவருடனேயே சென்றனர். அபு பகர் என்பவரும் உமாரும் எப்பொழுதும் முகம்மது நபியின் பக்கத்திலேயே யிருந்து அவருக்கு உதவி புரிந்து வந்தனர். முகம்மது நபிக்குப் பின் அபு பகர் முதல் குருவாக அமைந்தார். அபு பகர் தமது இறுதிக் காலத்தில் ஜனங்களின் அநுமதியின்பேரில் தமக்குப்பின் உமாரைக் குருவாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தார்.

உமார் குருவாக இருந்த காலத்தில் மிகவும் சாதாரணமான மனிதனைப்போல நடந்து வந்தார். ஆடம்பரம் என்பதே அவரிடம் கிடையாது. இவர் சொன்ன சொல் தவறுதவர்; மிகவும் இரக்க சித்த முடையவர். இவர் தமது அறுபதாவது வயதில் ஒரு நாள் தொழுது கொண்டிருக்கும்போது, ஒரு அடிமை திடீரென இவரைத் தாக்கிக் கத்தியால் குத்தினான். அக்காயம் காரணமாகவே, சில நாட்களில் தம் உடலைத் துறந்தார்.

இவரது அரிய குணங்களைப்பற்றி அநேக கதைகள் வழங்கு கின்றன. ஒரு சமயம் உமார் தாம் ஒரு மதகுரு என்று ஒருவரும் அறியாவண்ணம் தெருத் தெருவாய் நடந்து சென்றார். ஆங்காங்கு என்ன நடக்கிறதென்று கவனித்தார். ஒரு தெருவில் ஓர் ஏழை விதவை தன் பிள்ளைகளின் பசிக்கொடுமையைத் தாங்க முடியாதவளாய் அழுது கொண்டிருக்கக் கண்டார். கண்டதும் மனமுருகித் தாமே சென்று, ரொட்டிகள் வாங்கி வந்து, அவைகளை அக்குடும்பத்தினருக்குப் பகிர்ந்து கொடுத்தார். அவர்களுடனிருந்து அவர்கள் நித்திரை செய்த பின் மன அமைதியுடன் தமது விடுதிக்குச் சென்றார்.

இம்மாதிரியே இவர் பல அரிய காரியங்களைச் செய்து சிறந்து விளங்கினர். இவரது புகழ் இன்றும் உலகெங்கும் ஓங்கி நிற்கின்றது.

### பயிற்சியும் கேள்வியும்

I. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை—ஊதியம்; சித்தம், தயங்கு, அநுமதி, பொங்கி.

II. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை:—(1) தக்க பருவம் ——உமார் குதிரை ஏற்றம், மல்யுத்தம் ஓட்டம்——தேர்ச்சி பெற்று——(2) அவ

ருடைய———பொங்கி———.(3) முகம்மதுநபியின்———யிருந்து அவருக்கு——— வந்தனர்.

III. (1) 'குரங்கு கையிலகப்பட்ட பூ மாலை' என்றால் என்ன பொருள்? அதற்கிசைய நீ இப்பாடத்தில் என்ன வாசித்தாய்? (2) முகம்மதிய மார்க்கத்தை யொழிக்க எண்ணியவர் அதை விருத்தி செய்யுமாறு மாறியவர் யார்? எப்படி? (3) உமா ரின் சரித்திரத்திலிருந்து நீ அறிந்து கொள்ளும் உண்மை என்ன?

IV. உயர்திணையில் ஆணும் பெண்ணுமிருப்பதால் ஆணைக்குறிக்கும் சொற்கள் ஆண்பால் என்றும் பெண்ணைக் குறிக்கும் சொற்கள் பெண்பால் என்றும் சொல்லப்படும். இவைகளிரண்டையும் பொதுவாய்க் குறிக்கிற சொற்கள் பொதுப்பால் ஆகும்.

(உ—ம்) கந்தன்———ஆண்பால்
வள்ளி———பெண்பால்
மனிதர்———பொதுப்பால்

அஃறிணைச் சொற்களில் ஒன்றைக் குறிப்பனவற்றிற்கு ஒன்றன்பால் என்றும் ஒன்றிற்கு மேற்பட்டதைக் குறிப்பனவற்றிற்குப் பலவின்பால் என்றும் சொல் வர். மாடு, ஆடு; வீடு—ஒன்றன் பால். மாடுகள், ஆடுகள், வீடுகள்—பலவின் பால்.

இப்பாடத்திலிருந்து திணை, பால் இவைகளுக்கு உதாரணங்கள் ஐந்தைந்து கொடு.

---

# 11. அம்மை குத்துவது ஏன்?

| | | | | |
|---|---|---|---|---|
| ஒளித்து | குழிவிழுந்து | அம்மைப்பால் | அழகை | தழும்பு |
| அம்மை | வாடும் | அடிவயிறு | கோப்பளம் | புதிதாக |
| வைசூரி | சம்பந்தம் | குத்துகிறவர் | ஆயுட்காலம் | சுலபமாய் |
| ஜுரம் | முத்துக்கள் | பெரிய அம்மை | வார்த்தவர் | |

தகப்பனார் :—ராமா! நீ ஏன் இப்படி ஓடிவருகிறாய்? சிறிது நேரத் திற்கு முன்தானே பள்ளிக்கூடம் சென்றாய்? அதற்குள் ஏன் திரும்பி விட்டாய்?

ராமன் :—அப்பா! இன்று எங்கள் பள்ளிக்கூடத்துக்கு அம்மை குத்து கிறவர் வந்திருக்கிறார். அதனால்தான் நான் ஓடிவந்து விட்டேன்.

தகப் :—குழந்தாய் ! இதற்காகவா பயந்து ஓடிவந்தாய் ! உனக்குத்தான் குழந்தையா யிருக்கும்போதே அம்மை குத்தியாய் விட்டதே. போன வருஷத்திலும் ஒரு தடவை அம்மை குத்தியாய் விட்டதே. அப்படியிருக்க நீ ஏன் பயப்படவேண்டும் ?

ராமன் :—அப்பா நான் பயந்து ஓடிவரவில்லே. நமது வீட்டில் சிறு குழந்தை யிருக்கிறதே. அதற்கும் அம்மை குத்தி விடுவார்களே. உங்களிடம் சொல்லி, குழந்தையை ஒளித்து வைப்பதற்காக வந்தேன்.

தகப் :—ராமா ! இப்போது அம்மை குத்துகிறவரிடமிருந்து குழந்தையை ஒளித்து வைக்கலாம். ஆனல் பின்னல் வைசூரி, வராமல் குழந்தையை ஒளித்து வைத்துக் காப்பாற்ற முடியுமா ?

ராமன் :—அப்பா ! வைசூரி என்ருல் என்ன ? அதற்கும் அம்மை குத்துவதற்கும் என்ன சம்பந்தம் ?

தகப் :—ராமா ! வைசூரி அல்லது பெரிய அம்மை என்பது ஒரு கொடிய வியாதி. இவ் வியாதிக்கு முதலில் மூன்று நாட்கள் விடாது ஜுரம் கண்டு, பின்பு அம்மை முத்துக்கள் தேகம் முழுவதும் காணும். இம் முத்துக்கள் நாளடைவில் பெரிதாகி வாடும். வாடியபின் முத்துக்கள் இருந்த இடங்களிள் குழி விழுந்து, தேகத்தின் அழகைக் கெடுத்துவிடும். சிலருக்குக் கண் குருடாகிவிடும். மற்றும் சிலருக்குக் காது செவிடாகிவிடும். வேறு சிலருக்குக் கை அல்லது கால் நொண்டியாய்விடும். ஆகையால் வைசூரி என்ற பெயரைக் கேட்டாலே ஜனங்களுக்குப் பயம்

அதிகம். வைசூரி வியாதி வராமலிருப்பதற்காகவே அம்மை குத்துகிருர்கள்.

ராமன்:—அம்மை குத்தும்போது பால்போல் வெள்ளையா யிருக்கும் ஒன்றைக் கையில் வைக்கிருர்களே, அது என்ன அப்பா?

தகப்:—ராமா! அதுதான் அம்மைப் பால். அதைக் கைமேல் வைக்காமல் அம்மை குத்திஞல் பிரயோசனம் இல்லை. இப் பால் அம்மை குத்தும்போது நமது இரத்தத்தில் கலந்து, குத்திய இடத்தில் கொப்பளம் உண்டாக்கும். இவ்விதம் அம்மை கொப்பளித்துத் தழும்பு ஏறினல்தான், நமது தேகத்தில் வைசூரி வராமல் தடுக்கும் சக்தி உண்டாகும். இவ்வாறு கொப்பளிப்பதற்கு அம்மைப்பால் மிகவும் அவசியமானது.

ராமன்:—அப்பா! இந்த அம்மைப்பாலை எப்படித் தயார் செய்கிருர்கள்?

தகப்:—ராமா! கன்றுக்குட்டியின் அடிவயிற்றில் அம்மைக் கொப்பளங்கள் உண்டாக்கி, அவற்றிலிருந்து பாலை எடுத்துக் கெடாமல் பத்திரப்படுத்தி வைப்பார்கள். இவ்வாறு பத்திரப்படுத்தி வைத்தபாலை, அம்மை குத்துவதற்காக அயலூர்களுக்கு அனுப்புவார்கள்.

ராமன்:—அப்பா! கன்றுக்குட்டியின் அடிவயிற்றில் கொப்பளங்கள் உண்டாக்குவதற்கும் அம்மைப் பால் வேண்டுமல்லவா? அப் பால் எங்கிருந்து கிடைக்கிறது?

தகப்:—ராமா! வைசூரி வியாதி ஒருவருக்கு வந்தால், பிறகு அவரது ஆயுட்காலம் முழுவதும் அவருக்கு அவ்வியாதி வருவதில்லை. இவ்வுண்மையை அறிந்த முன்காலத்து ஜனங்கள் வைசூரி வார்த்தவர்களின் தேகத்திலுள்ள கொப்பளங்களிலிருந்து பாலை எடுத்துத் தங்கள் தேகத்தில் செலுத்திக்கொண்டு, தங்களுக்கும் வைசூரி வார்க்கும்படி செய்து கொண்டு வந்தார்கள். ஆனல் இம்மாதிரி செய்வதஞல் பலர் இறந்து போவதுமுண்டு. பிற்காலத்தில் இதையறிந்த சில நிபுணர்கள், வைசூரிக் கொப்பளங்களிலிருந்து பாலை எடுத்து, அதன் சக்தியைப் பல விதத்திலும்

குறைத்து உபயோகித்து வந்தார்கள். இவ்வாறு சக்தி குறைக்கப் பட்ட பாலையே கன்றுக்குட்டியின் அடிவயிற்றில் கொப்பளங்கள் உண்டாக்க உபயோகிக்கிறார்கள்.

ராமன்:—அப்பா! அம்மை குத்தும் முறையை முதலில் கண்டு பிடித் தவர் யார்?

தகப்:—இதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் டாக்டர் ஜென்னர் துரையவர்கள்.

ராமன்:—அப்பா! அடுத்த வீட்டுக் குழந்தைக்கு வைசூரி வார்த்திருந்த பொழுது, வாசலில் வேப்பிலை கட்டித் தொங்கவிட்டிருந்தார்களே, ஏன்?

தகப்:—ராமா! வைசூரி ஒரு தொத்து வியாதி. ஒருவரிடத்திலிருந்து மற்றவர்களுக்குப் பரவும். ஆகையால் வைசூரி கண்டவர்களிடம் எல்லோரும் செல்லக்கூடாது. இதற்குத்தான் அந்த வீட்டில் வைசூரி கண்டிருக்கிறது என்று மற்றவர்களுக்குத் தெரிவதற்கு அடையாளமாக வேப்பிலைக் கொத்து தொங்க விடுகிறார்கள். அம்மை குத்திக்கொண்டவர்களே அங்குப் போகலாம். ஏனெனில் அம்மை குத்திக் கொண்டவர்களுக்கு வைசூரி வராது. அப்படி வந்தாலும் மிகவும் சுலபமாய்ப் போய்விடும். ஆகையால் யாவரும் அம்மை குத்திக்கொள்ள வேண்டியது அவசியம்.

ராமன்:—அப்பா! நான் குழந்தையாய் இருக்கும் போதுதான் எனக்கு அம்மை குத்தி விட்டார்களே! மறுபடியும் போன வருஷம் ஏன் அம்மை குத்தினார்கள்?

தகப்:—ராமா! ஒவ்வொருவரும் ஏழு வருஷங்களுக்கொருதரம் அம்மை வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில் வைசூரி வராமல் தடுக்கும் சக்தி ஏழு வருஷத்துக்குமேல் இருப்பதில்லை என்று புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. சிறு குழந் தைக்கு ஆறுமாதம் ஆகுமுன்னமே அம்மை வைத்து விடுதல்

நல்லது. ஆகையால் நமது குழந்தைக்கும் இப்பொழுதே அம்மை வைத்துவிடுவோம். வா, போகலாம்.

ராமன் :—சரி ! அப்பா ! நானும் தங்களுடன் வந்து அம்மை குத்துவதைக் கவனித்துத் தெரிந்து கொள்ளுகிறேன்.

### பயிற்சியும் கேள்வியும்

I. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—குழி, சம்பந்தம், அழகு, ஆயுட்காலம், தழும்பு.

II. (1) வைசூரி உண்டாவதினல் என்னனென்ன கஷ்டங்களெல்லாம் ஏற்படுகின்றன ? (2) வைசூரி வந்தால் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் ? (3) வைசூரி வராமல் தடுக்க என்ன ஏற்பாடுகள் நடக்கின்றன ? அவை எப்படி வைசூரி வராமல் தடுக்கின்றன ?

III. எண் : ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒருமை என்றும், ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும் சொல் பன்மை என்றும் சொல்லப்படும். மனிதன், மாடு, வீடு, இவை ஒவ்வொன்றும் ஒருமையாகும். மனிதர், மாடுகள், வீடுகள் இவைகள் பன்மையாகும். இப்பாடத்திலுள்ள ஒருமை பன்மைச் சொற்களில் ஐந்தைந்து எடுத்து எழுதி அவைகள் என்னென்ன பால் என்பதை விளக்கு.

IV. வைசூரியைப் பற்றி ஒரு பக்கத்தில் ஒரு வியாசம் எழுது.

---

## 12. கர்வம் ஆகாது

| | | | | |
|---|---|---|---|---|
| ரிஷிகள் | திறமையை | எவரும் | புகழ்ந்தனர் | பூலோகத்தில் |
| தேவர்கள் | விழித்தனர் | அபூர்வ | கானம் | முறையிட்டனர் |
| கண்விழித்து | உருக | வையகத்தில் | வீங்கி | அசோகமரம் |
| தேவலோகம் | மகிழ்வித்து | | | |

நாரதர், தும்புரு என்ற இரண்டு ரிஷிகளும் வீணை வாசிப்பதில் வல்லவர்கள். அவர்கள் எப்பொழுதும் தேவலோகத்தில் வீணை வாசித்துத் தேவர்களை மகிழ்வித்து வந்தனர். அவர்களது வீணை வாசிக்கும் திறமையை எல்லோரும் புகழ்ந்தனர். அதனல் அவர்கள் தங்களைக் காட்டி

லும் வீணை வாசிப்பதில் வல்லவர் எவருமில்லை என்று கர்வங்கொண்டனர். அது காரணமாக அவர்கள் யாரையும் மதிப்பதில்லை.

இவ்வாறு கர்வங்கொண்ட அவர்கள் ஒரு நாள் தேவலோகத்தில் வீணை வாசித்தனர். வாசித்ததும் எல்லாத் தேவர்களுடைய வயிறுகளும் வீங்கிவிட்டன. உடனே தேவர்கள், இவர்களது வீணாகானத்தை நிறுத்தும்படி வேண்டினர். தங்கள் கானத்தினால் தேவர்களது வயிறுகள் வீங்குவதைக் கண்ட ரிஷிகள் பயந்து, வீணாகானத்தை நிறுத்தினர். எல்லோராலும் கொண்டாடப்படும் தங்களுடைய கானத்துக்கும் அவமதிப்பு ஏற்பட்டதைக் கண்டு மனம் வருந்தினர். உடனே அதன் காரணத்தை யறிய பிரம்மாவிடம் சென்று முறையிட்டனர்.

அவர்களது முறையீட்டைக் கேட்ட பிரம்மா, “வீணை வாசிப்பதில் வல்லவர்களான ரிஷிகளே! இதன் காரணம் எனக்கும் தெரியவில்லை. ஆதலால் நீங்கள் மகாவிஷ்ணுவிடம் போய்க் கேளுங்கள்” என்றார். அவ்வாறே நாரதரும், தும்புருவும் மகாவிஷ்ணுவிடம் சென்று கேட்டனர். மகாவிஷ்ணுவும் இவர்கள் கொண்டுள்ள கர்வத்தையும் அதனாலேயே அவர்களுக்கு அவமானம் ஏற்பட்ட தென்பதையும் அறிந்து, “ரிஷிகளே! இதன் காரணத்தைக்கூற என்னால் முடியாது. ஆனால் பூலோகத்தில் தண்டகாரணியத்தில் தவம் செய்துகொண்டிருக்கும் ஒரு குரங்கினிடம் சென்று கேட்டால் தெரியவரும்” என்று கூறினார். ரிஷிகளும் உடனே தண்டகாரணியத்தை நோக்கிச் சென்றனர்.

நாரதரும் தும்புருவும் தண்டகாரணியத்தில் அநேக தினங்கள் அக்குரங்கைத் தேடி அலைந்தனர். முடிவில் ஒரு அசோக மரத்தடியில் தவம் செய்துகொண்டிருந்த குரங்கொன்றைக் கண்டனர். இக்குரங்குதான் ராமதூதனாகிய ஆஞ்சநேயர். ஆஞ்சநேயரது முன்பாக ரிஷிகள் வெகுநேரம் காத்திருந்தும், தவம் செய்துகொண்டிருந்த அவர் கண் திறக்கவில்லை. ரிஷிகளும் என்ன செய்வது என்றறியாமல் விழித்தனர். கடைசியில் ஆஞ்சநேயர் கண்விழித்து இவர்களை நோக்கினார். உடனே ரிஷிகளும் தாங்கள் வந்த காரணத்தைத் தெரிவித்தனர்.

தெரிவித்ததும் ஆஞ்சநேயர் நாரதர் கையிலிருந்த வீணையை வாங்கி வாசிக்க ஆரம்பித்தார். ராமக்கிரியை என்ற ஓர் அபூர்வ ராகத்தை அதில் வாசித்தார். உடனே எதிரிலிருந்த மலை உருக ஆரம்பித்தது. அம் மலை நன்றாய் உருகியதும், ஆஞ்சநேயர் நாரதருடைய வீணையை அதில் வைத்தார். வைத்ததும் மலை முன்போலக் கல்லாய் விட்டது.



அப்போது ஆஞ்சநேயர் அவ்விரு ரிஷிகளையும் நோக்கி, "ரிஷிகளே! வீணைகானத்தில் நீங்கள் மிகவும் வல்லவர்களல்லவா? இப்போது தும்புரு கையிலிருக்கும் மற்றொரு வீணையை வாசித்து, உங்கள் கானத்தினால் இந்த மலையை உருக்கி, நாரதருடைய வீணையை எடுத்துச் செல்லுங்கள். உங்களில் யாரேனும் ஒருவராகிலும் இக்காரியத்தைச் செய்தால் போதும்" என்று கூறினார்.

நாரதரும் தும்புருவும் தங்களுக்குத் தெரிந்த ராகங்களை யெல்லாம் வீணையில் வாசித்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. மலை கல்லாகவே இருந்தது. கடைசியில் தங்களால் ஒன்றும் முடியாதது கண்டு, ஆஞ்சநேயரை வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர், "ரிஷிகளே! நீங்கள் வீணை வாசிப்பதில் மிகவும் வல்லவர்கள்தான். ஆயினும் உங்களைப் போல் வீணை வாசிப்பவர் எவ்வுலகிலும் இல்லையெனக் கர்வம் கொண்டீர்கள். 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு' என்னும் பழமொழியை நினைத்துக் கர்வம் கொள்ளாமலிருக்க வேண்டும். இதுவே நீங்கள் அறிய வேண்டிய விஷயம். அவ்வாறு நீங்கள் கர்வங் கொண்டதனுல்தான் தேவர்களுடைய வயிறுகள் வீங்கின. இனியாவது சிறிதும் கர்வங் கொள்ளாமல் உங்கள் வீணு கானத்தைச் செய்து வருவீர்களாக" என்று கூறினுர்.

பிறகு ஆஞ்சநேயர் குண்டக்கிரியை என்ற மற்ருேர் அபூர்வ ராகத்தை வீணையில் வாசித்து மலையை உருக்கி, நாரதரது வீணையை எடுத்துக் கொடுத்தார். நாரதரும் தும்புருவும் ஆஞ்சநேயரைப் பணிந்து சென்றனர். அதுமுதல் அவர்கள் கர்வம் கொள்ளவே யில்லை.

### கர்வங் கொண்டவர் கஷ்டமே யடைவர்

### பயிற்சியும் கேள்வியும்

I. சொந்த வாக்கியங்களில் அமை :—அபூர்வம், கொண்டாடு, மகிழ்வி, முறையிடு, புகழ்.

II. பூர்த்தி செய் :—(1)'———' என்னும் பழமொழியை நினைத்து——— கொள்ளாமலிருக்க வேண்டும். (2) வீணு———நீங்கள்———வல்லவர்களல்லவா ?

III. கர்வபங்கம் அடைந்தவர்களின் வரலாற்றைச் சுருக்கி எழுது.

IV. திணை, பால், எண் இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து உதாரணங்கள் கொடு.

# 13. போக்குவரவு சாதனங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| கரியான | மின்சாரம் | அரிது | பூட்டி | தீவனம் |
| ஆதிகாலம் | அஞ்சல் | கட்டுமரம் | வேண்டியவர் | போக்குவரவு |
| திருடர் | தீ | பெட்ரோல் | துரிதப்படுத்தினர் | யாத்திரை |
| துஷ்ட | இறக்கைகள் | நீர்மூழ்கி | மரக்கலங்கள் | டயர்கள் |
| கோச்சுவண்டி | வாட்டும் | டிராம் | ஏரோப்பிளேன் | சாதனங்கள் |
| சாலைகள் | பல்லக்கு | யூகித்து | புதுமையான | பிரயாணம் |
| நன்கு | கணவாய் | பாலைவனம் | தற்போது | |

ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குப் போவதும் வருவதும் போக்குவரவு எனப்படும். ஜனப் போக்குவரவு, சாமான்கள் போக்குவரவு, கடிதப் போக்குவரவு எனப் பலவகை யுண்டு. ஓர் ஊருக்கும் மற்ருேர் ஊருக்கும் இப் போக்குவரவுகளினுல்தான் சம்பந்தம் ஏற்படுகிறது. போக்குவரவுக்குரிய சாதனங்கள் பல உள.

ஆதிகாலத்தில் போக்குவரவு மிகவும் காலதாமதமாயும், கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலும் நடைபெற்று வந்தது. ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்கு ஜனங்கள் நடந்து சென்றனர். சிறிது தூரத்தி லுள்ள இடங்களுக்குச்செல்ல வேண்டியிருந்தால் கையில்பணமும் கட்டுச் சோறும் எடுத்துக் கொண்டு வழி நடந்தனர். வழியிலே திருடர் பயமும், துஷ்ட மிருகங்களினுல் ஏற்படும் ஆபத்துக்களும், மழை வெயில் முதலிய வைகளின் கொடுமைகளும் மனிதனை வாட்டும். ஒருமுறை இவ்விதப் பிரயாணத்தில் ஈடுபட்ட ஒருவன், மறுமுறையும் அம்மாதிரிப் பிரயாணத் தைச் செய்ய முன்வரான். பணக்காரர்கள் மனிதரால் சுமக்கப் பட்ட பல்லக்குகளில் ஏறிச் சென்றனர். அதிகமான சாமான்களை அய லூருக் குக் கொண்டுபோக வேண்டியிருந்தால், காளைகள்மேல் பாரம் ஏற்றிக் கொண்டு செல்வர். மலைச்சரிவுகளிலும், கணவாய்களிலும், குதிரைகள் மேலும், கழுதைகள்மேலும், பாரங்கள் ஏற்றிக் கொண்டு போவார்கள். பாலைவனங்களில் ஒட்டகங்களின்மேல் பெரும்பாரங்கள் ஏற்றிச் சென்று வந்தனர்.

இவ்விதம், நடந்தோ மிருகங்களின் மேலோ செல்லுவதனுல் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அதனுல் மாடுகளை வண்டியில் பூட்டி உபயோகிக்கலானுர்கள். ஒற்றைமாட்டு வண்டி, இரட்டைமாட்டு வண்டி என இருவித வண்டிகள் உண்டு. குடும்பத்தோடு பிரயாணம் செய்பவர்களும் அதிகமான பாரம் கொண்டுபோக வேண்டியவர்களும் இரட்டை மாட்டு வண்டியை உபயோகித்து வந்தனர். அவ்வாறு இரட்டைமாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கு, மாடுகளுக்குத் தீவனமும் மனிதருக்கு வசதியும் செய்துகொண்டு, பிரயாணத்தை முடித்துத் திரும்புவது மிகவும் சிரமமான காரியம். இதுபற்றியே முன் காலத்தில் காசியாத்திரை புறப்படுபவர்கள் திரும்புதல் அரிது என்று கூறுவது உண்மையாயிருந்து வந்தது.



சில காலத்துக்குப் பின் மாடுகளைப் போலவே குதிரைகளையும் உபயோகிக்க லானுர்கள். குதிரைமேல் ஏறிச் சவாரி செய்யவும், குதிரை வண்டிகளில் பிரயாணம் செய்யவும் பழகிக் கொண்டார்கள். பணக்காரர் ஒரு குதிரை அல்லது இரண்டு குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியில் ஏறிவந்தார்கள். இதற்குப் பின் அஞ்சல் குதிரை வண்டிகள் ஏற்படுத்தி, சிறிது தூரத்திற் கொருமுறை குதிரைகள் மாற்றவும் ஏற்பாடு செய்து, அதன்மூலம் பிரயாணத்தைத் துரிதப்படுத்தினுர்கள். அவ்வாறு துரிதப்படுத்தியும் சரியான சாலைகள் இல்லாததாலும், திருடர் பயத்தினுலும், மிருகங்களின் தொந்திரவுகளினுலும் பிரயாணம் அவ்வளவாக நன்கு நடைபெறவில்லை.



பண்டைக்காலத்தில் மனிதர்கள் இரண்டு மூன்று மரக்கட்டைகளை ஒன்றுய்ச் சேர்த்துக்கட்டி, கட்டு மரங்களாக ஆற்றிலோ, கடலிலோ மீன் பிடிக்க உபயோகித்து வந்தார்கள். பின்பு ஒரு பெரிய மரத்

தின் அடிக்கட்டையை யெடுத்து அதன் மத்தியில் சிறு துவாரம் செய்து, அதில் தீயைவைத்து எரித்து, கரியான பாகத்தைக் கற்க ளால் தோண்டி யெடுத்து ஒரு தொட்டி மாதிரியாகச் செய்து, அதைத் தோணி களாக உபயோகித்து வந்தனர். இத் தோணிகளில் அதிகத்தூரம் போக வோ, பெரும் பாரங்களை ஏற்றிச் செல் லவோ ஜனங்கள் பிரயாணம் செய் யவோ, முடியாமலிருந்தது. அதனால் பிற்காலத்தில் பாய்கள் கட்டிய தோணி களும், பெரிய மரக்கலங்கள் அல்லது கப்பல்களும் செய்து தங்கள் வியாபா ரத்தையும், போக்கு வரவையும் விருத்தி செய்தனர்.



ஆனால் நாளடைவில் பலவித இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட் டன. அவைகளின் உதவியால் பற்பல வண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. இதன் பயனாகத் தற்கால நாகரிக உலகம், போக்கு வரவுக்குப் பல புதுமையான சாதனங் களை உபயோகித்து வரு கிறது. தனியாகப் பிரயா ணம் செய்ய சைக்கிள் வண்டி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இரண்டு சக்கரங் களே உண்டு. அதனால் இதைத் துவிச் சக்கர வண்டி யென்றும் கூறுவார் கள். இவ்வண்டி நம் நாட்டில் அநேகரால் உப யோகிக்கப்படுகிறது.





இதற்கு யாதொரு இயந்திர உதவியும் தேவையில்லை. ஆனால் இதுமாதிரியே இயந்திர உதவியால் ஓடும் சைக்கிள் வண்டிக்கு மோட் டார் சைக்கிள் என்று பெயர். இதற்கும் இரண்டு சக்கரங்கள்தான்

உண்டு. இது பெட்ரோல் என்னும் எண்ணெயின் உதவியால் ஓடு கிறது. இதில் ஒருவர்தான் ஏறிச் செல்லலாம். இவ்விரண்டு சைக்கிள் களின் சக்கரங்களுக்கும் ரப்பர் கட்டுகள் (டயர்கள்) உண்டு.

இவை தவிர, பெட்ரோல் எண்ணெயின் உதவியால் தரைமேல் ஓடும் பலவித வண்டிகளும் உண்டு. அவைகளில் மோட்டார் வண்டி முக் கியமானது. இதற்கு நான்கு சக்கரங்கள் இருக்கின்றன. இச் சக்கரங்களுக் கும் ரப்பர் கட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. சாதாரணத் தரைமேல் ஓடும் வண்டிகளைத் தவிர இரும்புத் தண்டவாளங்களில் ஓடும் வண்டி களும் உண்டு. அவைகளில் புகைவண்டியும் ஒன்று. புகைவண்டி





நீராவியின் சக்தியினால் ஓடுகிறது. இதை ரயில் வண்டி என்றும் கூறுவ துண்டு. இதில் எஞ்சின் என்னும் நீராவி யுண்டாக்கும் வண்டி முன் பாக இருக்கும். எஞ்சினோடு பல வண்டிகள் சேர்க்கப்பட்டிருக்கும். இவ்வண்டிகளில் ஜனங்கள் ஏறிச்செல்வார்கள். சாமான்கள் ஏற்றிப் போகும் தனி வண்டிகளும் உண்டு. மின்சார சக்தியால் தண்ட வாளத்தின் மேல் ஓடும் வண்டிக்கு டிராம் வண்டி என்று பெயர். நமது மாகாணத்தின் தலைநகரமாகிய சென்னைப் பட்டி னத்தில் இவ்வண்டிகளைக் காணலாம். மின்சார சக்தியால் ஓடும் ரயில் வண்டிகளும் தற்போது ஏற்பட்டிருக்கின்றன. இவை வெகு வேகமாய்ச் செல்லக் கூடியவை.



நீரில் செல்லும் போக்கு வரவு சாதனங் களும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. நீரா வியின் சக்தியால் கடலில் செல்லும் நீராவிக் கப்பல் இவைகளில் முக்கிய

மானது. இதில் வியாபாரக் கப்பல், பிரயாணக் கப்பல், யுத்தக் கப்பல் எனப் பலவகையுண்டு. இவை தவிர சமுத்திரத்திற்கு அடியில் பிரயாணம் செய்யும் நீர்மூழ்கிக் கப்பல்களும் தற்காலத்தில் உபயோகப்பட்டு வருகின்றன.

ஆகாயத்தில் பெட்ரோல் எண்ணெயின் உதவியால், பட்சிகள் போல் பறந்து செல்லுவது ஏரோப்ளேன் என்பது. பட்சிகளுக்கு இருப்பதுபோல இதற்குப் பெரிய இறக்கைகள் உண்டு. இது ஆகாயத்தில் செல்லும்போது நீங்கள் பார்த்திருக்கலாம். ஆகாய விமானங்களில் தபால் கொண்டு போவதற்கும் ஜனங்கள் பிரயாணம் செய்வதற்கும் ஏற்ற வசதிகள் உண்டு. யுத்தம் செய்வதற்கான வசதிகளுள்ள விமானங்கள் வேறுவிதமாய் அமைக்கப்பட்டிருக்கும். இது தவிர, ஆகாயத்தில் பறக்கவும் தரையில் மோட்டார் வண்டி போல் ஓடவும், கடலில் கப்பல்கள் போல் செல்லவும் வசதிகளுமுள்ள ஒரு புதுமையான வண்டியும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.



நாகரிகம் அதிகமாக ஆக, பற்பல வசதிகளும் உள்ள புது மாதிரி வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான வசதிகளும் வேகமும் வண்டிகளில் ஏற்படுத்தப்படுகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமான ஆபத்துக்கள் நேரிடுவதை நாம் பார்த்து வருகிறோம். இன்னும் மனிதன் போக்குவரவுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்போகும் பற்பல சாதனங்களும் இன்னவை யென்று யாரால் யூகித்தறிய முடியும்?

### பயிற்சியும் கேள்வியும்

I. சொந்தவாக்கியங்களிலமை:—வாட்டும், அரிது, யூகி, பூட்டு, தற்போது.

II. (1) இப்பாடத்தின் மூன்றாவது பாராவில் கண்ட விஷயத்தை மூன்று வாக்கியங்களிலமைத்து எழுது. (2) இப்பாடத்தின் நாலாவது பாராவை ஒருமையாக மாற்றி எழுது.

III. ஆதிகாலத்தில் பிரயாணத்திலிருந்த கஷ்ட நஷ்டங்கள் என்னென்ன? (2) தற்கால வசதிகளும் அவைகளினால் அடையும் கஷ்ட நஷ்டங்களும் என்ன என்று கூறு. (யுத்தசாதனங்கள்)

IV. (1) எதிர்ப்பதங்கள் கூறு:—ஆதி, நாகரிகம், போக்கு, நஷ்டம், அரிது, வரவு. (2) ஈரருத்தமுள்ள மூன்று வார்த்தைகளை இப்பாடத்திலிருந்து பொறுக்கி எடுத்துத் தனித்தனி வாக்கியங்களிலமைத்துப் பொருள் படும்படி எழுது.

V. இடம்:—தன்னை அல்லது தங்களைப்பற்றிப் பேசுவது முதல் இடம் அல்லது தன்மையிடம் எனப்படும். (உ—ம்) நான், நாம், நாங்கள்.

முன்னுள்ள ஒருவனை அல்லது பலரைப்பற்றிப் பேசும்போது முன்னிலை இடம் எனப்படும். (உ—ம்) நீ, நீர், நீங்கள்.

தன்னிலையுமின்றி, முன்னிலையுமின்றி, மூன்றாவது ஒருவனையோ பலரையோ பற்றிப் பேசுவது படர்க்கை எனப்படும். (உ—ம்) அவன், அவள், அவர்கள்.

இப்பாடத்தின் 5-வது பாராவைத் தன்மையிலும் முன்னிலையிலும் மாற்றி எழுது.

---

# 14. சைக்கிள்

தங்கையே பார்! தங்கையே பார்!
சைக்கிள் வண்டி இதுவே பார்! 1

சிங்காரமான வண்டி
சீமையிலே செய்த வண்டி. 2

இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி. 3

மாடில்லை குதிரையில்லை
மாயமதாய்ப் பறந்திடும் பார். 4

தீயில்லை புகையுமில்லை
தீவிரமாய்ச் சென்றிடும் பார். 5

காலாலே மிதிப்பதனால்
கடும் விசையில் போயிடும்பார். 6

ஒன்றன்பின் ஒன்றாக
உருளும்பை தாக்களைப் பார். 7

அக்காளும் தங்கையும் போல்
அவைபோகும் அழகைப் பார். 8

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

# 15. குமணன்

| | | | | |
|---|---|---|---|---|
| அடுத்துள்ள | தர்மம் | துன்மந்திரிகள் | ஆரவாரித்து | ஓங்கி |
| வள்ளல்கள் | முற்றிலும் | தன்மை | தூற்ற | கேடு |
| உண்டாயிற்று | வரையாது | கொடை | வராகன் | தீர்மானித்தான் |
| கடமை | மற்றவர்கள் | மிஞ்சி | நிகழ்ந்த | எண்ணம் |
| அள்ளி | இத்தகைய | நொந்தனே | தழுவி | செய்திகள் |
| ராஜ்யம் | நேர்மாறுன | சிற்றரசன் | மாறிவிட்டது | மோசம் |
| வறுமை | தூண்டுதல் | பொன்மாரி | ஏருது | வாளே |
| நடுங்கிவிட்டான் | முடிசூட்டி | தொலேக்க | இலகு | சாற்றினுன் |

முற்காலத்தில் நம் தமிழ் நாட்டில் வள்ளல்கள் பலர் இருந்தனர். அவர்கள், யார் எதைக் கேட்டபோதிலும் அளவில்லாமல் கொடுத்து மகிழ்ந்தனர். அதனுலேயே அவர்களுக்கு 'வரையாது கொடுக்கும் வள்ளல்கள்' என்ற பெயருண்டாயிற்று. அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவி செய்வதையே தங்கள் கடமையாகக் கருதினுர்கள்.

இத்தகைய வள்ளல்களில் குமணன் என்னும் சிற்றரசனும் ஒருவன். அவன் முதிரம் என்னும் மலேயையும் அதை யடுத்துள்ள சில ஊர்களேயும் ஆண்டு வந்தான். புலவர்களேக்கண்டால் அவனுக்குஆனந்தம் அதிகம். அவர்களுக்குப் பொன்மாரி பொழிவான். அக்காலத்தில் அவனுக் கிணேயான வள்ளல்கள் யாரும் இலர். புலவர் பலர் அவன் சபையை யடைந்து, அவன் புகழ்பாடிப் பரிசுபெற்றனர். அவனது புகழ் நாடெங்கும் ஓங்கி விளங்கியது.

குமணனுக்கு ஒரு தம்பி இருந்தான். அவனே இளங்குமணன் என்றும் அமணன் என்றும் அழைப்பார்கள். அமணன் தன் தமையனுக்கு நேர்மாறுன குணங்களுடையவன். அவனுக்குத் தன் தமையன் செய்கை பிடிக்கவில்லே. "இப்படி வருவோர் போவோருக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்தால், கொஞ்சநாளில் ராஜ்யமே போய்விடும்" என்றெண்ணினுன். அமணனுக்குப் பல கொடியவர் சினேகமாயினர். அவர்களது தூண்டுதலின் பேரில் அண்ணனேத் தொலேக்க வழி

தேடினுன். கண் தலை தெரியாமல் ஆரவாரித்துக் குமணனைத் தூற்ற லாயினன்.

இதை யறிந்த குமணன், தன் தம்பியால் நாட்டுக்கே கேடு விளையும் என்றஞ்சினுன். ஆனுல், கொடியவர் நேசங் கொண்டுள்ள தம்பிக்கு அச்சமயத்தில் என்ன புத்தி சொன்னுலும் ஏருது என் றறிந்தான். ஆதலால் அவனையே அரசனுக்கத் தீர்மானித்தான். குமணன் தான் தீர்மானித்தபடியே செய்வதற்காக, ஒருநாள் இளங் குமணனை யழைத்து, "தம்பி! உனது எண்ணம் என்ன?" என்றுகேட் டான். அதற்கு அமணன், "அண்ணு! நீ அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்து வருகிருய்.உன்னுல் நம் நாடு வறுமையாகிக்கொண்டு வருகிறது. ஆதலின் நாட்டை என்னிடம் ஒப்புவித்து விடு" எனக் கூறினுன். குமணனும் இதையே எதிர் பார்த்தானுதலால், ஒன்றும் பேசாது அவ னுக்கு முடிசூட்டி, சில புத்திமதிகளையும் கூறிவிட்டுக் காடு நோக்கிச் சென்ருன்.

அரசாட்சி தன் கைக்கு வந்ததும் இளங்குமணன் பாடு கொண் டாட்டமாய்விட்டது. தன் இஷ்டப்படி அரசாட்சி செய்ய ஆரம்பித் தான். இவன் கொடுங்கோன்மையைப் பொறுக்காமல் ஜனங்கள் கலகம் செய்யத் தொடங்கினர். அதைக் கண்ட அவனது துன்மந்திரிகள், "குமணன் உயிருடன் இருக்கும்வரை, அவனுக்காக இவர்கள் கலகம் செய்து கொண்டுதான் இருப்பார்கள். அவனைக் கொன்றுவிட்டால் இவர்கள் அடங்கிவிடுவார்கள்" என்று சொல்லித் தூண்டினர். இளங் குமணனும் உடனே "குமணனது தலையைக் கொணர்வோருக்கு ஆயிரம் வராகன் பரிசு" எனப் பறை சாற்றினுன். அதுகேட்டு ஜனங்கள் யாவரும் நடுநடுங்கினர்.

இச்சமயத்தில் சாத்தனுர் என்ருெரு புலவர், குமணனிடம் பரிசு பெறுவதற்காக அங்கு வந்தனர். வந்தவர் அங்கு நிகழ்ந்த செய்தி களைக் கேட்டு மனம் வருந்தினர். அதன் மேல் எப்படியானுலும் குமண மன்னனைப் பார்க்காமல் செல்வதில்லை யென்று தீர்மானித்து, குமணன் இருந்த காட்டை யடைந்தார். அங்கே பல இடங்களிலும் அலைந்து

திரிந்து முடிவில் குமணனைக் கண்டார். புலவரும் தாம் வந்த காரியத்தைக் கூறினர்.

அது கேட்ட குமணன், "புலவரே! நான் அரசாண்ட காலத்தில் வந்தீரில்லையே! இப்பொழுது நான் என்ன செய்வேன்!" என்று கூறிச் சிறிது யோசித்தான். திடீரென்று, "புலவரே! இப்பொழுதும் மோசம் போகவில்லை.

அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்து நீ நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுன் வறுமை நோய்களையே.

"ஒன்றுக்கும் உதவாத என் தலைக்கு எனது தம்பி ஆயிரம் வராகன் மதிப்பு வைத்திருக்கிறன். ஆதலின் எனது தலையை வெட்டிக்கொண்டுபோய் அப் பரிசைப் பெற்றுக்கொள்ளும். இப்பொழுது என்னுற் செய்யக் கூடியது இவ்வளவே" என்று கூறித் தன் வாளை நீட்டினன். என்னே, குமணனது கொடைத்திறமை! தன் உயிரையும் புலவருக்காகக் கொடுக்க இசைந்த அவனது வள்ளல் தன்மையை எவ்வாறு புகழ்வது!

பார்த்தார் புலவர். உயிரையும் தம்பொருட்டுத் தியாகம் செய்ய முன் வந்த குமணனைக் காப்பாற்ற எண்ணினர். ஒரு பொய்த் தலையைச் செய்து அமணனை ஏமாற்ற நினைத்தார். ஆனல், தான் இல்லாத சமயத்தில், குமணன் வேறு யாருக்காவது தன் தலையைக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்று யோசித்துக் குமணனை நோக்கி, "அரசே! தாங்கள் தங்கள் தலையை எனக்குக்கொடுத்துவிட்டீர்கள். நான் திரும்பி வரும்வரை அத்தலை தங்கள் உடலிலேயே இருக்கட்டும். வேறு யாருக்கும் கொடுத்துவிடக்கூடாது," என்று கூறிச் சென்றர்.

சென்றவர், குமணன் தலைபோல் ஒரு பொய்த்தலை செய்து, இளங்குமணனிடம் சென்று காட்டிப் பரிசு கேட்டார். தலையைக் கண்டதும் இளங்குமணன் நடுங்கி விட்டான். 'தான் ஆடாவிடினும் தன் சதை

யாடுமல்லவா ?' அவன் குணம் முற்றிலும் மாறிவிட்டது. 'தமையன் இறந்து விட்டான்' என்று வருந்திக் கதறி யழுதான்.

அது கண்ட புலவர் அவனைச் சமாதானம் செய்து, "குமணனை உயிர்பெறச் செய்தால் என்ன தருவாய் ?" என்று கேட்டார். இளங்குமணனும் சிறிதும் தயங்காது, "என் உயிரையும் தருவேன்" என்றான். அதன்மேல் புலவர் இளங்குமணனை யழைத்துச் சென்று குமணன் முன் விட்டனர். அமணனும் தன் அண்ணனைக் கண்டதும் அவன் கால்களில் விழுந்து, தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். குமணனும் தன் தம்பி நல்வழிப்பட்டமைக்கு மன மகிழ்ந்து அவனைத் தழுவிக் கொண்டு தேற்றினான்.

அதன்மேல் தம்பியின் வேண்டுகோளுக்கும் புலவர் ஆணைக்கும் இணங்கி, குமணன் திரும்பவும் நாட்டுக்கு வந்து முடிசூடிக் கொண்டான். துன்மந்திரிகள் குமணனைக் கண்டதும் இருந்தவிடம் தெரியாமல் ஓடி விட்டனர். குடிகளும் மகிழ்ச்சி யடைந்தனர். சாத்தனார் மன மகிழும் படியாக வேண்டிய பரிசுகளைக் கொடுத்தனுப்பிவிட்டு, குமணன் முன் போல் நாட்டை ஆண்டு வந்தான். குமணனும் அமணனும் இணைபிரியாது வாழ்ந்து வந்தனர்.

கொடுப்பவர் என்றும் கொடுத்தே தீர்ப்பார்
'தர்மம் தலை காக்கும்'

### பயிற்சியும் கேள்வியும்

I. சொந்த வாக்கியங்களிலமை :—அள்ளி, கொடை, தூண்டு, தூற்றல், நிகழ்ந்த.

II. ஈரருத்தமுள்ள வார்த்தைகள் பத்துக்குக் குறையாமல் எழுதுக.

III. எதிர்ப்பதம் கூறு :—வறுமை, கலகம், சிநேகம், துன்மந்திரி, ஆனந்தம், தழுவி, கேடு, மோசம்.

IV. 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பதை ஒரு கதையினால் ரூபி.

V. இக்கதையினால் விளங்கும் நீதி என்ன ?

# 16. கடிகாரம்

| | | | | |
|---|---|---|---|---|
| எண்கள் | நக்ஷத்திரங்கள் | குறுக்கியோ | யுகம் | செக்கண்டு |
| கடிகாரம் | பொடி | தகுந்தபடி | உதயம் | நிர்ணயிக்க |
| கருவி | திட்டமாய் | சிருஷ்டிக்கப்பட்ட | விநாடி | நாழிகை |
| முகூர்த்தம் | மணிக்கட்டு | உத்தேசமாய் | பித்தளை | எச்சரிக்கை |
| தரைமட்டம் | தற்காலம் | பெண்டுலம் | தலைப்பில் | தகடு |
| விடியற்காலம் | வெவ்வேறு | சாஸ்திரீக | சுட்டிக்கொண்டே | மாட்டக்கூடிய |
| வெண்மையான | சாமம் | கணிப்பது | படிந்திருக்கும் | மணி |
| | | வேலைப்பாடு | | |

கடிகாரம் என்பது தற்காலத்திய சாஸ்திரீக முறையில் காலத்தைத் திட்டமாய் நிர்ணயிக்க அமைக்கப்பட்டுள்ள ஒரு கருவியாகும். இந்தக் கருவி இடங்களுக் கேற்றவாறும், காலங்களுக் கேற்றவாறும் வெவ்வேறு வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குள், அதிகப் பொருள் கொடுத்து வாங்குவதற்குத் தகுந்தபடி, நேரத்தைச் சரியாய்க் காட்டும் கடியாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஆதிகால முதல் காலத்தையும் நேரத்தையும் கணிப்பது வேறு விதமாகவே யிருந்து வந்திருக்கிறது. நாழிகை, முகூர்த்தம், சாமம் என்று நேரத்தையும், வாரம், மாதம், வருஷம், யுகம் என்று காலங்களை யும் கணக்கிட்டு வந்திருக்கிறார்கள்.

தற்கால ஒரு மணிநேரமானது இரண்டரை நாழிகையே யாகும். அதாவது ஒரு நாழிகை 24 நிமிஷங்களாகும். ஒரு நாள் பகல் முப்பது நாழிகைகளாகவும், இரவு முப்பது நாழிகைகளாகவும், ஆக ஒருநாளுக்கு அறுபது நாழிகைகளாகக் கணக்கிடப்பட்டு வந்தது. முன் காலத்தில் பகலில் மனிதர் தம் நிழலைக் காலடியால் அளந்து அல்லது சூரியனிருக் கும் இடத்தைப் பொறுத்து நாழிகைகளை உத்தேசமாய்க் கணக்கிட்டனர். இதல்லாமல் பெரிய பாத்திரங்களின் அடியில் துவாரம் செய்து, அவை களில் பொடி மணலை நிரப்பி, அம்மணல் எவ்வளவு இறங்கியிருக்கிறது என்பதின் மூலமும் நாழிகைகளை யறிந்து வந்தனர்.

ஒரு வைக்கோல் தாளை யெடுத்துப் பதினாறு பாகங்களாக அதை வகுத்து, அதன் நிழல் பூமியில் படும்படி அதை நிறுத்திவைக்க வேண்டும். பிறகு ஒவ்வொரு பாகமாகத் தரைமட்டத்துக்குச் சமமாய் இருக்கும்படி மடக்கிக் கொண்டே போகவேண்டும். இவ்வாறே நேராக நிற்கும் தாளின் நிழல் நுனியும், தரையில் படிந்திருக்கும் தாளின் நுனியும் ஒன்றுசேரும்வரை நீட்டியோ குறுக்கியோ மடக்கிக்கொண்டே போக வேண்டும். மொத்தம் பதினாறு பாகங்களில், தரையில் படிந்திருக்கும் பாகங்கள் போக, எத்தனை பாகங்கள் நேராக நிற்கின்றனவோ அத்தனை நாழிகைகள் ஆயின என்று கணக்கிடலாம். உதாரணமாக, நிற்கும் பாகங்கள் ஐந்தாக இருந்தால், சூரியோதயம் அல்லது காலை ஆறு மணிக்குமேல் ஐந்து நாழிகைகள் அல்லது இரண்டு மணிநேரம் அதாவது காலை 8 மணி ஆயிற்றென்று சொல்லலாம். இம்மாதிரியே பகல் நேரங்கள் முழுவதையும் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இரவிலே சந்திர உதயத்தைக் கொண்டும், நக்ஷத்திரங்கள் இருக்கும் நிலையைக் கொண்டும் நேரத்தை அறிந்து கொண்டனர். அதுவுமன்றிச் சேவல்களும் நேரங்களைத் தவறாமல் தெரிவித்து வந்தன. இரவில், நடு இரவில் ஒருதரம் சேவல் கூவும். அதிகாலை மூன்று மணிக்கு அதாவது விடிய ஏழரை நாழிகையிருக்கும்போது முதல் கோழியும், விடிய ஐந்து நாழிகையிருக்கும்போது அதாவது காலை நான்கு மணிக்கு இரண்டாவது கோழியும், விடியற்காலம் 5 மணிக்கு அதாவது விடிய இரண்டரை நாழிகை யிருக்கும்போது மூன்றாவது கோழியும் கூவும்.

அதன்பின் ஒரு கம்பியை ஒரு கல்லின் மத்தியில் நட்டு வைத்து அதன் நிழலிலிருந்து நேரத்தை அறிந்தார்கள். அதன் பின்பு கடிகாரங்கள் உலகில் தோன்றின. அவைகளில், மணி, அரை மணி, கால் மணி அடிக்கக் கூடிய கடிகாரங்களும், மணியை மட்டும் காட்டும் கடிகாரங்களும், கையில் கட்டும் சிறுகடிகாரங்களும், தேவையான நேரத்தில் எச்சரிக்கை செய்யும் கடிகாரங்களும், பாட்டுப் பாடும் கடிகாரங்களும் உள. இவைகளின் விலைகள் அவைகளின் வேலைப்பாட்டிற்குத் தகுந்தபடி

அமைந்திருக்கும். இவைகளின் மூலம் நேரத்தைப் பார்த்தறிவது மிகவும் எளிது.



1



2



3

ஒருநாளை இருபத்து நான்காகப் பிரித்து ஒவ்வொரு பாகத்துக்கும் மணி என்று பெயரிட்டார்கள். இவ்விருபத்து நான்கு மணி நேரத்தையும், பகல் பன்னிரண்டு மணிகளாகவும், இரவு பன்னிரண்டு மணிகளாகவும் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு மணியை அறுபது நிமிஷமாகவும், ஒவ்வொரு நிமிஷத்தை அறுபது விநாடி (செக்கண்டு) களாகவும் பிரித்துச் சுலபத்தில் பொழுதறியும்படி ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

முன்னேயுள்ள படத்தில் முதல் படத்தை (1) பாருங்கள். இது சுவரில் மாட்டக்கூடிய பெரிய கடிகாரத்தின் படம். இதன் மேல்பாகம் பெரியது ; கீழ் பாகம் சிறியது. மேல் பாகத்தில் ஒரு வெண்மையான வட்டத் தகட்டில் 1 முதல் 12 வரை உள்ள எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இத் தகட்டின் மத்தியில் சிறிதும் பெரிதுமாக இரு முட்கள் காணப்படுகின்றன. இம் முட்கள் அந்த எண்களைக் சுட்டிக் கொண்டே, தகட்டில் சுற்றி வருவதிலிருந்து, மணி எத்தனை என்று தெரிந்து

கொள்ளலாம். தகட்டின்மீதுள்ள எண்கள் பின்வருமாறு 1 முதல் 12 வரை யிருக்கின்றன:

| I | II | III | IIII | V | VI | VII | VIII | IX | X | XI | XII |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

கடிகாரத்தின் கீழ்ப் பாகத்தில் ஒரு வட்டமான கனத்த பித்தளைத் தகடு ஆடிக்கொண்டே யிருக்கிறதல்லவா? அதுதான் பெண்டுலம் என்று சொல்லப்படுவது. இவ்வாறு இது ஆடுவதால்தான் மேல்பாகத்தில்உள்ள முட்கள் ஒரே நிதானமாக யந்திர மூலமாய் நகர்ந்து நகர்ந்து சுற்றி வருகின்றன. இக்கடிகாரத்தின் தலைப்பில் XII என்ற எண் இருக்கிறது. அதன் வலது பக்கத்திலிருந்து I முதல் XI வரை உள்ள எண்கள் வட்டமாக இருக்கின்றன. தகட்டில் இருக்கும் ஒரு எண்ணுக்கும் மற்றொரு எண்ணுக்கும் நடுவே சிறிது இடம் இருக்கிறது. அந்த இடம் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே 12 மணிகளுக்கும் இடையில் 5 பாகங்கள் வீதம் மொத்தம் 60 பாகங்கள் இருக்கின்றன. இவைதான் நிமிஷங்கள்.

இப்பொழுது கடிகாரத்தைக் கவனியுங்கள்.பெரியமுள் விரைவாகவும், சிறியமுள் மெதுவாகவும் நகருவதைக் காணலாம். பெரிய முள் XII என்ற எண்ணிலிருந்து நகர்ந்து நகர்ந்து திரும்ப XIIக்கு வந்து சேரும் போது, சிறிய முள் ஒரு எண்ணிலிருந்து அடுத்த எண்ணுக்கு வந்திருக்கும். இதுதான் ஒரு மணி நேரம். இவ்வாறு பெரிய முள் பன்னிரண்டு தடவை சுற்றிவந்தால், சிறிய முள் ஒரு தடவை சுற்றும். இந்தக் காலம் பன்னிரண்டு மணி நேரம். சிறியமுள் இரண்டு தடவை சுற்றி வந்தால் 24 மணி நேரம் அல்லது ஒரு நாள் ஆகும்.

பெரிய முள், ஒரு எண்ணிலிருந்து மற்றொன்றுக்கு வர 5 நிமிஷங்கள் ஆகின்றன. பெரிய முள் XII என்ற எண்ணிலிருந்து III என்ற எண்ணுக்கு வந்தால் 15 நிமிஷங்களாகும். இதற்குக் 'கால்மணி' என்று பெயர். VI என்ற எண்ணுக்கு வந்தால் 30 நிமிஷங்களாகும்.

இதற்கு ' அரைமணி ' என்று பெயர். IX என்ற எண்ணுக்கு வந்தால் 45 நிமிஷங்கள் அல்லது ' முக்கால் மணி ' ஆகும். பிள்ளைகளே! இந்தக் கணக்குப்படி கடிகாரத்தைப் பார்த்து இப்போது மணி என்ன வென்று சொல்லுங்கள்.

சுவரில் மாட்டக்கூடிய இந்தப் பெரிய கடிகாரத்தைத் தவிர, சட்டைப் பையில் (2) போட்டுக் கொள்ளவும், கை மணிக்கட்டில் (3)கட்டிக் கொள்ளவும், ஏற்ற சிறு கடிகாரங்கள் உள்ளன. அவைகளைப் படத்தில் பாருங்கள். இம்மாதிரி சிறு கடிகாரத்தில் VI என்ற எண் உள்ள இடத்தில் ஒருசிறு வட்டம் இருக்கிறது. அதில் 10, 20, 30, 40, 50, 60 என்ற எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிறிய முள் வெகு வேகமாக அதில் ஓடிக்கொண்டிருக்கிறது. இச்சிறு வட்டத்திலுள்ள ஒவ்வொரு கோடும் ஒரு செக்கண்டு அல்லது விநாடியைக் குறிக்கும். இதிலுள்ள சிறு முள் ஒரு தடவை சுற்றி வந்தால் 60 செக்கண்டுகள் அல்லது 1 நிமிஷமாகும். அப்போது பெரிய முள் ஒரு நிமிஷத்தைக் காட்டும். இவ்வாறு பலவித கடிகாரங்களால், நாம் வெகு சுலபத்தில் நேரத்தை அறிந்து கொள்கிறோம். கடிகாரம் நமக்கு மிகவும் உபயோகமுள்ளது.

ஆனாலோ கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சூரிய, சந்திர நட்சத்திரங்களும் சேவல், காகம் முதலிய பறவைகளும் தங்களுடைய நேரங் கணிக்கும் வேலையை எவ்வித காரணம் பற்றியும் செய்யத்தவறுவதில்லை. இவை உலகத்தார் எவருக்கும் எவ்வித வித்தியாசமும் பாராட்டாது தங்கள் கடைமைகளைச் செய்கின்றன. இவைகளின் உதவிகொண்டு கால நேரங்களை நிர்ணயிக்கலாம்.

## பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமை :—சிருஷ்டி, சாமம், நகர், கணி, சுலபம்.

II. (1) கடிகாரங்களில் பலவித கடிகாரங்களைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது. (2) கால நிலை மாருத கடிகாரங்கள் என்னென்ன? (3) நிழல் அளவை வைத்து நேரம் கணித்த வகையை எழுது.

III. இலக்கணம்—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

(1) ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லும் ஒரு வினைச் சொல்லும் கட்டாயமாக வரும் என்று பார்த்தோம். (உ-ம்) நாய் குலைக்கிறது. பறவை பறக்கிறது. மனிதன் நடக்கிறான். (2) கந்தன் அரக்கரை வதைத்தான். இதில் கந்தன் என்ற பெயர்ச்சொல் இவ்வாக்கியத்தின் கர்த்தாவாயிருக்கிறது. ஆகவே எந்தப் பெயர்ச்சொல் தன் இயற்கை மாறாமல் நின்று ஒரு வாக்கியத்துள் பிரதான கர்த்தாவாக நிற்கிறதோ அது எழுவாய். இப்பொழுது 'கந்தன்' எழுவாய் (3) அக் கர்த்தாவின் செயல், பயனிலை எனப்படும். 'கந்தன்' என்ன செய்தான்? என்ற கேள்விக்கு உத்தரவாக வரும் வினை ஒரு முடிந்த சொல் பயனிலை. ஆகவே இங்கு 'வதைத்தான்' பயனிலை. (4) பயனிலையை வைத்துக்கொண்டு யாரை அல்லது எதை என்று கேட்ட கேள்விக்குப் பதில் வரும் உத்தரவு செயப்படுபொருள். யாரை 'வதைத்தான்?' 'அரக்கரை' வதைத்தான். 'அரக்கரை' செயப்படுபொருள். (5) இந்தப் பாடத்தில் செயப்படுபொருள் உள்ள ஐந்து வாக்கியங்களை எடுத்து எழுது. (6) செயப்படுபொருள் வராத ஐந்துவாக்கியங்களை இப்பாடத்திலிருந்து கண்டுபிடித்து எழுது.

---

# 17. கடிகாரம்

## (கும்மி)

சேவற் கோழியுண்டு காகமுண்டு—வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே! அதி காலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டுமோடி? 1

செங்கதிர் பொங்கி வருவதுண்டு—நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? 2

தன்னிழல் தன்னடி யாவதுண்டு—சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு
இன்னமுதே! பகல் உச்சி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி? 3

விண்மணி யாழியில் வீழ்வதுண்டு—வாசம்
வீச மந்தாரை மலர்வதுண்டு
கண்மணியே! மாலைக் காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி? 4

முல்லை யரும்பு விரிவதுண் டாம்பலின்
மொட்டுகள் மெள்ள அவிழ்வதுண்டு
மெல்லியலே! மாலை வேளை யறிந்திட
வெள்ளிக் கடிகாரம் வேண்டுமோடி? 5

அம்புலி நட்சத் திரங்களுண்டு—கணக்
காக்கி யறிய வழிகளுண்டு
இன்பமே! நேரம் இரவி லறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி? 6

கம்மென வாசகம் கமழ் பாரி சாதமிக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு
அம்மையே! நள்ளிர வீதென்று சொல்லிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி? 7

காலை மாலை எந்த வேளையும்—சூரிய
காந்தி மலர்தானே காட்டிடாதோ
வேலை யெழுந்த திருவே உனக்கினி
மேலும் கடிகாரம் வேண்டுமோடி? 8

சுற்றுப் பொருளெல்லாம் உற்றுநோக்கி—அவை
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்
பெற்றே முத்தே! இந்த உண்மை யறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி? 9

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

# 18. குலசேகரர்

| | | | | |
|---|---|---|---|---|
| அசுரர் | கனவு | பாகவதர்கள் | திடுக்கிட்டனர் | பிரபந்தம் |
| இராஜதானி | சபதம் | பூஜிப்பது | சமயோசிதமாய் | திருமால் |
| அநுக்கிரகம் | சமாதி | பரிசுத்தம் | குறுக்கிடவே | பிரசங்கியார் |
| மகவு | திருப்தி | சேவித்து | வரவழைத்து | புராணிகர் |
| வதம் | விசாரித்தார் | வடமொழி | அடியார் | சுருக்கியும் |
| விரித்து | நாமகரணம் | ராஜ்யபாரம் | நவரத்தினம் | உரைத்து |
| சீறி | மகுடம் | கருநாகம் | நிரபராதிகள் | பகவான் |
| காட்சி | முதலாயினோர் | அரண்மனை | க்ஷேத்திரங்கள் | அரவம் |
| | ஸ்தலம் | துணை | இன்றி | |

சேர நாட்டின் இராஜதானியாகிய கோழிக்கோடு நகரிற் கடுத்த திருவஞ்சைக்களம் என்னும் திருப்பதியில் திருடவிரதனென்னும் அரசர் செங்கோல் செலுத்தி வந்தார். அவருக்குத் திருமாலின் அநுக்கிரகத்தால் ஒரு ஆண் மகவு உண்டாயிற்று. அம் மகவுக்குக் குலசேகரன் என நாமகரணம் செய்து அருமையாக வளர்த்து நாளடைவில் அரசர்க்குரிய பல கலைகளையும் கற்பித்தார். தக்க வயது வந்ததும் தந்தை குலசேகரருக்கு மகுடம் சூட்டி, தான் தவம் செய்யக் காடு சென்றார்.

இவ்வாறு குலசேகரர் ராஜ்யபாரம் செய்யும் நாளில் பல நூல்களையும் ஆராய்ந்து, விஷ்ணுவே மேலான தெய்வம் எனக் கண்டார். அது முதல் சிறந்த விஷ்ணு பக்தராயினர். ஸ்ரீராமரது சரித்திரத்தைக் கூறும் இராமாயணத்தில் அவருக்கு அளவற்ற பிரியம் ஏற்பட்டு, அவர் தமது அரண்மனையிலேயே இராமாயணத்தைப் படிக்கச் செய்து, மிகுந்த பக்தியுடன் கேட்டு வந்தார்.

ஒரு நாள் பிரசங்கியார் இராமாயணத்தில் கரதூஷணவதத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். சூர்ப்பநகை மூக்கறுக்கப்பட்டுக் கரதூஷணாதியரிடம் சென்று முறையிட, அவர்களும் சினந்தெழுந்து பெருஞ் சேனைகளுடன் புறப்பட்டு வந்தனர். அப்போது இராமபிரான், தன் தம்பி இலக்ஷ்மணனைச் சீதாபிராட்டிக்குக் காவலாக வைத்து, துணை

A.V.R.

யின்றித் தாம் ஒருவராகவே அப் படையை எதிர்த்துச்சென்ருர்" என்று சொல்லிக்கொண்டிருந்தார். அது கேட்ட குலசேகரர், பரவசராய், "ஆகா! எம்பெருமான் யாதொரு துணையுமின்றித் தனியே செல்கிருரே" என்று கூறி, உடனே தமது படைகளுடன் புறப்படவேண்டுமென்று எழுந்தார். மந்திரி முதலாயினேர் திடுக்கிட்டனர். அப்போது புராணிகர் சமயோசிதமாய், "ஸ்ரீராமபிரான் தாமொருவராகவே வெகு சீக்கிரத்தில் அவ்வசுரர்களைக் கொன்று வெற்றி பெற்ருர்" என்று முடித்தார். இதைக்கேட்ட குலசேகரரும், தாம் புறப்படுவதை நிறுத்தினர். அது முதல் பிரசங்கியாரும் இராமபிரானது வெற்றியைக் கூறுங்கால் விரித்தும், அவரது துன்பங்களைக் கூறுங்கால் சுருக்கியும் உரைத்து வந்தார்.

இன்னொரு சமயம் பிரசங்கியார் ஊரிலில்லாததால், அவரது குமாரர் இராமாயணப் பிரசங்கம் செய்தார். குலசேகரரது இராம பக்தியை அறியாத அவர், இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் பாகத்தை விரித்துக் கூறுவாராயினர். அது கேட்ட குலசேகரர் சீறியெழுந்து, கடலைக் கடந்து இராவணன் முதலியோரைத் தொலைத்துச் சீதையை மீட்டு வரத் தீர்மானித்தார். அதன்படி மந்திரிகளோடும் படைகளோடும் இலங்கைக்குப் புறப்பட்டு விட்டார். வழியில் கடல் குறுக்கிடவே, அதனை நீந்திக் கடக்கத் தீர்மானித்து, நீரில் இறங்கி விட்டார். அப்போது அவரது பக்தியைக் கண்ட இராமபிரான் சீதையோடு அவரெதிரில் தோன்றிக் காட்சி தந்து, தாம் இராவணன் முதலியோரைக் கொன்று சீதையை மீட்டு வந்ததைக் கூறி, அவரைக் கரை யேற்றி மறைந்தார்.

இவ்வாறு விஷ்ணு பக்தியிற் சிறந்த குலசேகரர் ஸ்ரீரங்கத்தைப் பார்க்க ஆசை கொண்டார். அங்குச் சென்ருல் அவர் திரும்புத லரிது என நினைத்த மந்திரிகள், அநேக பாகவதர்களை வரவழைத்து அவர் முன் விடுத்தனர். பகவானைப் பூஜிப்பதை விட, பகவத் பக்தர்களான பாகவதர்களைப் பூஜிப்பதே மேல் என்னும் உண்மையை அறிந்த குலசேகரர், ஸ்ரீரங்க யாத்திரையை நிறுத்தி, அவ்வடியவரை வழிபட்டார். அப்

பாகவதர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அவர்களுடனேயே காலத்தைப் போக்கினர். இராஜ்யபாரத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை.

இவ்வாறு பாகவதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மரியாதையைக் கண்ட மந்திரி முதலான அரண்மனை உத்தியோகஸ்தர்கள், அவ்வடியவரிடம் பொறாமை கொண்டு அவர்களைத் தொலைக்க வழிதேடினர். ஸ்ரீராம நவமி உற்சவம் மிகுந்த சிறப்புடன் நடக்க ஆரம்பித்தது. அச் சமயத்தில் ஒரு நாள் ஸ்ரீராம விக்கிரஹத்துக்கு முக்கிய ஆபரணமாய் விளங்கிய ஒரு நவரத்ன ஹாரத்தை எடுத்து அவர்கள் ஒளித்து வைத்தனர். குலசேகரர் ஸ்ரீராமபிரானுக்கு அலங்கரிக்கும்போது, அவ்வாபரணத்தைக் காணாது மனம் வருந்தி, அதனைப்பற்றி மந்திரிமாரை விசாரித்தார். அதற்கு மந்திரிமார், “அரசே! இங்கு ஒருவரும் வரவில்லை. இப்பாகவதர்களில் யாரேனும் தான் எடுத்திருக்கவேண்டும்” என்றனர்.

அது கேட்ட குலசேகரர் மனம் வருந்தி, “இப்பாகவதர் இத்தீத்தொழிலைச் செய்யக் கனவிலும் கருதார். இது நிச்சயம்” என்று கூறி, கருநாகப் பாம்பு அடைக்கப்பட்ட ஒரு குடத்தைச் சபையில் வரவழைத்து, “பரிசுத்தரான இப்பாகவதர் நிரபராதிகள் என்பது உண்மையாயின் இதனுள் இருக்கும் அரவம் என்னைத் தீண்டாதொழியும்; இல்லையாயின் இது என்னைத் தீண்டிக்கொல்லும்” என்று கடுஞ்சபதம் செய்து, அக்குடத்தினுள்ளே கையிட்டார். அவருக்கு யாதொரு தீமையும் உண்டாகவில்லை. அதுகண்ட மந்திரிமார் நடுநடுங்கி, அவரது காலில் விழுந்து உண்மையைக் கூறி, தம்மை மன்னிக்குமாறு வேண்டினர். குலசேகரரும் அவர்களை மன்னித்துவிட்டார்.

பின் குலசேகரர் தமது குமாரனை திருடவிரதனுக்கு முடிசூட்டி, ஸ்ரீரங்கத்துக்குச் சென்று அங்குப் பலகாலம் ஸ்ரீரங்கநாதனைச் சேவித்து, பக்தியில் ஈடுபட்டிருந்தார். பிறகு பல க்ஷேத்திரங்களையும் காண விரும்பி யாத்திரையாகப் புறப்பட்டார். முடிவில் பிரமதேசமென்னும் ஸ்தலத்தையடைந்து, அங்குச் சிலகாலம் பகவத் பக்தியில் ஈடுபட்டிருந்து, சமாதி

யடைந்தார். குலசேகரர் முகுந்தமாலை என்னும் வடமொழி நூலும், பெருமாள் திருமொழி என்னும் தமிழ்ப் பிரபந்தமும் செய்தருளினர். இதனாலே இவர் இவ்விரு மொழியினும் வல்லவர் என்பது நன்கு விளங்கும். ஸ்ரீராம பக்தியில் குலசேகரருக்கு இணையானவரே யில்லை.

### பயிற்சியும் கேள்வியும்

I. சொந்த வாக்கியங்களிலமை:— விரி, சீறு, சீறி, மீட்டு, மீள், பூஜி, திடுக்கிடு, குறுக்கிடு, நிரபராதி, வழிபடு, அரவம்.

II. (1) குலசேகரர் பக்தியின் காரணமாகத் தம்மை மறந்த சம்பவங்களை எழுது. (2) 'பக்தியே முக்தி தரும் மருந்து' என்பதை ரூபி.

III. அபராதி × நிரபராதி; பாக்கியம் × துர்பாக்கியம்; நித்தியம் × அநித்தியம். இதைப்போன்று ஒரு வார்த்தையின் முன் சில எழுத்துக்களைச் சேர்க்கிறதின்மூலம் எதிரிடையாக மாறுகிற பத்து வார்த்தைகளை எழுது.

IV. பக்திக்கேற்ற ஐந்து பழமொழிகள் எழுது.

---

## 19. காற்று

| | | | | |
|---|---|---|---|---|
| தூற்றி | உயிரேல் | உப்புவாயு | மூச்சு | காற்ருடி |
| திண்ணம் | வாழ்வதற்கு | இடைவெளி | நெருக்கமான | அத்தியாவசியமானது |
| வீசினுல் | பூண்டு | அடுக்கி | சல்லடை | உறுப்புக்கள் |
| பதர் | நிரம்பி | எப்போதும் | ஜலவாயு | பலகணி |
| தாவரங்கள் | பருவக்காற்று | நசித்து | வடிகட்ட | சுகாதாரம் |
| இடையில் | ஏதுவாய் | வாயு | கணம் | உட்கொள்ள |
| கரியமிலவாயு | விசாலமாகவும் | விமானங்கள் | அசையும் | குழாய் |
| காற்ருேட்டம் | சுவாச | பிராணவாயு | காலியாகிறது | |

இவ்வுலகில் பிராணிகள் வாழ்வதற்கு மிகவும் அவசியமானவை காற்று, தண்ணீர், ஆகாரம் ஆகிய மூன்றுமே. இம் மூன்றும் எல்லாப் பிராணிகளுக்கும் எப்போதும் வேண்டியவை. ஆகாரமின்றிச் சில நாள் வாழலாம். தண்ணீரின்றிச் சில மணிநேரம் வாழலாம். ஆனல்

காற்றின்றி அரைக்கணமும் வாழமுடியாது. ஆதலால் இம்மூன்றிலும், உயிர் வாழ்வதற்குக் காற்றே மிகவும் அவசியமானது என்பது திண்ணம். உயிர்ப் பிராணிகள் தவிர புல், பூண்டு, மரம், செடி, கொடி முதலியவைகட்கும் காற்று மிகவும் அவசியமானது. காற்றில்லாத இடத்தில் இவை சீக்கிரம் நசித்துப்போம்.

காற்று இவ்வுலகம் முழுதும் பரவியிருக்கின்றது. ஆனால் அது நம் கண்ணுக்குத் தெரியவில்லை. காற்று அசையும்பொழுது, நாம் அதை உணருகிறோம். அது அசையாதிருக்கும்பொழுது நாம் அதை அறியமுடியாது. ஆனால் உடனே ஒரு விசிறியால் வீசினால் காற்று இருப்பது தெரியும். இதனால் காற்று எங்கும் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது என்று தெரிகிறது. காற்று அசையாதிருந்தால் அது வாயு என்று சொல்லப்படும். வாயுவும் ஒரு பொருள்தான். அது எந்த இடத்தில் இருக்கிறதோ, அந்த இடத்தின் வடிவத்தை அடையக் கூடியது.

வாயு உஷ்ணத்தினால் விரிவடைந்து கனம் குறைந்து மேலே கிளம்பும் இயல்புள்ளது. இவ்வாறு வாயு உஷ்ணமடைந்து உயரச் செல்லும்போது, அது இருந்த இடம் காலியாகிறது. அந்தக் காலியிடத்தை அடைக்க, அதன் பக்கங்களிலுள்ள, குளிர்ந்ததும் கனமுள்ளதுமான வாயு அவ்விடத்திற்கு விரைந்து வருகிறது. அப்படி விரைந்து வரும்பொழுது அது நம்மேல் படுவதால் நாம் அதை உணர்ந்து, அதைக் காற்று என்று சொல்லுகிறோம். நீர் நிலைகளுக்கு மேலும் பக்கத்திலுள்ள காற்று மேலே செல்லும்போது நீராவியை உயரக்கொண்டு செல்லுகிறது. அங்குச் சென்றதும் இந்நீராவி மேகம் என்று சொல்லப்படுகிறது. இம்மேகத்தின்மேல் குளிர்காற்று அடித்ததும் அது மழையாகப் பெய்கிறது. ஆகவே உலகம் முழுவதும் மழை பெய்ய உதவுவது காற்றே. காற்றில் பருவக்காற்றுகள் என்பனவும் உண்டு. பருவக்காற்றுகள் அடிக்கும்போது மழை பெய்யும்.

காற்றின் உதவியினுல் பட்டங்கள் பறக்கின்றன ; கடலில் கப்பல்கள் ஓடுகின்றன ; ஆகாயத்தில் விமானங்கள் பறக்கின்றன. பெரிய காற்ருடிகளின் உதவியினுல், மாவரைக்கும் யந்திரங்களும் தண்ணீர் இறைக்கும் யந்திரங்களும் வேலை செய்கின்றன. காற்றின் உதவியினுலேயே தானியங்களிலுள்ள பதரைப் போக்குகிருேம். இது பற்றியே 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழியும் ஏற்பட்டது. இக்காலத்தில் காற்றைப் பல வகைகளிலும் பிரயோசனப்படுத்திக்கொள்கின்றனர். துவிச்சக்கரவண்டி, மோட்டார் முதலிய வண்டிகளில் அசைவின்றிப் பிரயாணம் செய்ய ஏதுவாய், சக்கரங்களில் அமைத்துள்ள ரப்பர்க் குழாய்களில் காற்றை அடைத்துக் கொள்கிருேம். நாம் விளையாடும் கால் பந்துகளிலும் காற்றடைத்துத்தான் விளையாடுகிருேம்.

வாயுவில், பிராணவாயு, கரியமிலவாயு, உப்புவாயு, ஜலவாயு எனப் பலவகையான வாயுக்கள் கலந்திருக்கின்றன. பிராணிகள் உயிரோடு வாழ்வதற்கு வாயு அத்தியாவசியமானது. ஆனுல் அந்த வாயு மிகவும் சுத்தமாயிருக்கவேண்டும். இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு உயிர்ப் பிராணியும், சுத்தமான காற்றை உட்கொண்டு, அசுத்தமான காற்றை வெளிவிடுகின்றது. உள்ளே செல்லும் சுத்தமான காற்று பிராணவாயு எனப்படும். இவ்விதம் உள்ளே செல்லும் சுத்தமான பிராணவாயு, பிராணிகளின் தேகத்தினுள்ளே இருக்கும் அசுத்தங்களையெடுத்துக் கொண்டு வெளியே வருகின்றது. நாம் மூச்சு வெளியிடும்போதெல்லாம் அசுத்தமான காற்றே வெளி வருகின்றது. இதனுல் வெளியே உள்ள சுத்தமான காற்று ஒவ்வொரு கணமும் அசுத்தமாய்க் கொண்டே வருகிறது.

அப்படியாயின் நாம் வெளியிடும் அசுத்தமான காற்றே இவ்வுலக முழுதும் நிரம்பிவிடுமே, திரும்பவும் நாம் உட்கொள்ள வேண்டிய சுத்தமான காற்று எங்கிருந்து கிடைக்கிறது ? பிராணிகள் எப்படிச் சுத்தமான காற்றை உட்கொண்டும், அசுத்தமான காற்றை வெளிவிடுகின்றனவோ, அப்படியே செடிகள் முதலிய தாவரங்கள் சூரிய வெளிச்சத்தில் அசுத்தமான காற்றை உட்கொண்டு, சுத்தமான காற்றை வெளிவிடுகின்றன. நமக்குக் கெடுதல் செய்யும் அசுத்தமான காற்றைத் தாவ

ரங்கள் உட்கொண்டு, நமக்கு மிகவும் அவசியமுள்ள சுத்தமான காற்றைத் தருகின்றன. ஆகையால் அவை நமது வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவை. இதனுலேயே நாம் அவைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்.

உட்கொள்ளும் காற்று மிகவும் சுத்தமாயிருந்தால், தேகத்திலுள்ள அசுத்தத்தில் பெரும் பாகத்தை வெளியே கொண்டுவரும். உட்கொள்ளும் காற்றே அசுத்தமாயிருந்தால், தேகத்தில் ஒவ்வொரு கணமும் உண்டாகும் அசுத்தம் சிறிதுகூட வெளியேருது. தேகத்திலுள்ள அசுத்தங்கள் காற்றின் மூலமாய் வெளியேருவிட்டால், சுவாச உறுப்புக்கள் சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். ஆகையால் நாம் சுவாசிக்கும் காற்று சுத்தமாயிருக்கும்படி கவனித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் கவனிக்க வேண்டியவைகளில் முக்கியமானவை பின்வருமாறு :—

நல்ல காற்ரோட்டமுள்ள இடத்திலேயே வசிக்கவேண்டும். வீடுகளை மேடான இடத்திலும், விசாலமாகவும் கட்டவேண்டும். ஒரு வீட்டிற்கும் மற்ரொரு வீட்டிற்கும் இடையில் போதுமான இடைவெளி இருக்கவேண்டும். வீடுகளை நெருக்கமாகக் கட்டக்கூடாது. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் காற்ரோட்டமுள்ள வெளிப் பிரதேசம் இருக்க வேண்டும். ஒரே வீட்டில் அதிகமான ஜனங்கள் நெருக்கமாக வசிக்கக்கூடாது. வீட்டில் காற்ரோட்டத்திற்காகக் கதவுகளும், பலகணிகளும் வேண்டிய அளவு அமைக்கப்படவேண்டும். படுக்கும் அறையில் சாமான்களை அடுக்கி வைக்கக்கூடாது. தூங்கும்பொழுது, பலகணிகளையும் கதவுகளையும் மூடிவிட்டுத் தூங்கக்கூடாது.

நாம் மூக்குத் துவாரங்களின் வழியாகவே சுவாசிக்கவேண்டும். வாய் வழியாகச் சுவாசிக்கக்கூடாது. மூக்கின் உள்ளே இருக்கும் மயிர்கள் சல்லடைபோல் அமைந்திருக்கின்ற படியால் உட்செல்லும் காற்றிலுள்ள அசுத்தத்தை அம்மயிர்ச் சல்லடை வடிகட்டிச் சுத்தமாக்கி விடும். இம்மாதிரி செய்வதற்கு வாயில் ஒருவித ஏற்பாடும் இல்லை. ஆகையால் மூக்கின் வழியாகவே சுவாசித்தல் தான் நலம். இருந்தாலும் மிகவும் அசுத்தமான காற்றை வடிகட்ட மூக்கிற்கும் சக்தி

இல்லை. ஆதலால் நாம் கூடுமானவரை மிகவும் சுத்தமான காற்றையே சுவாசிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அசுத்தமான காற்று உள்ளே சென்ருல், தேகத்தில் உள்ள இரத்தத்தைக் கெடுத்து பலவித வியாதிகளை உண்டாக்கும்.

காற்று சம்பந்தமாக மேற்கூறிய விஷயங்களைக் கவனித்து அதன்படி நடந்தால் நோயற்ற வாழ்வை அடையலாம். இது பற்றியே 'காற்றுள இடத்திரு, நற்காற்றுட் கோள், வாய்வழி உயிரேல்' என்ற சுகாதார வாக்கியங்களும் கூறப்பட்டுள்ளன.

## பயிற்சியும் கேள்வியும்

I. பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—விரை, நிரப்பு, நசி, நெருக்கு, அடுக்கு, கணம், காலியாகு, உட்கொள்.

II. (1) காற்று என்று எதற்குப் பெயர்? (2) காற்றினுலடையும் போக்குவரவு சாதனங்கள் எவை? (3) காற்று சகல ஜீவராசிகளுக்கும் உயிரூட்டும் பொருள் என்பதை ரூபி.

III. இலக்கணம்: 'கந்தன் அரக்கரை வதைத்தான்' என்ற வாக்கியத்தில் 'வதைத்தான்' என்பது வினைச்சொல்.

(1) அது முன், ஒரு காலத்தில் வதைத்தான் என்பதை அதாவது இன்றைக்கு முன்பு நடந்த காரியத்தைக் குறிக்கிறது; அதாவது கடந்த அல்லது இறந்துபோன ஒரு காலத்தில் நடந்ததைக் குறிக்கிறது. இது இறந்த காலம் எனப்படும்.

(2) அந்த 'வதை' இப்பொழுது நடக்கிறதாக இருந்தால் 'வதைத்தான்' என்று சொல்லாமல் 'வதைக்கிருன்' என்று சொல்லுகிறோம். வதைக்கிருன் என்ற வினைச்சொல் இச்சமயத்தில நிகழும் அல்லது நடைபெறும் காலத்தைக் குறிக்கிறது. இது நிகழ்காலம் எனப்படும். (3) இனிமேல் நடைபெற வேண்டியதை நாம் எதிர் பார்க்கிறோம். இனிவருங்காலம், எதிர் பார்க்கும் காலம் அல்லது எதிர்காலம் எனப்படும். எதிர் காலத்தில் கூறவேண்டுமானுல் வதை என்ற சொல் 'வதைப்பான்' என்று மாறும்.

IV. வா, போ, நில், நட, படி என்ற வினைச்சொற்கள் முக்காலங்களிலும் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களில் ஒருமை, பன்மைகளில் எப்படி மாறி வரும் என்பதை வாக்கியங்களி லமைத்து எழுது.

# 20. தென்னையும் நாணலும்

| | | | | |
|---|---|---|---|---|
| நாணல் | துரும்பு | இளங்காற்று | வினவ | ஒடிந்து |
| ரசமான | மதிமயங்கி | அறும் | வேடிக்கை | புதர் |
| மெல்லிய | ஆற்றங்கரை | ஆழ்ந்து | மூலமந்திரம் | விளையாயிற்று |
| கண்ணுற்ற | சம்பாஷணை | தோப்பு | சங்கடம் | அலங்கோலம் |
| தென்றல் | ஊசலாடிக்கொண்டு | அங்குமிங்கும் | பெருகிற்று | வருந்துகிறேன் |
| முறுகின | வாய்விட்டு | நன்றி | பிணைந்து | காலக்கிரமத்தில் |
| பழித்தது | சுழல்காற்று | நிலைகொள்ளாமல் | | |

திருநெல்வேலி ஜில்லாவில் தாமிர வருணி ஆற்றங்கரை யோரத்தில் நன்முய்ச் செழித்து ஓங்கிய தோப்பு ஒன்றிருந்தது. அதன் ஓரத்தில் அநேக தென்னை மரங்களிருந்தன. அவைகளிலொன்று அங்குப் பக்கத்திலுள்ள நாணற் புதரின் மத்தியிலிருந்தது. அவைகளிரண்டும் மிகவும் சிநேகமாயிருந்தன. தினமும் ரசமான சம்பாஷணைகள் அவைகளுக்குள் நடைபெறும்.

விளையாட்டே வினையாயிற்று. ஒரு நாள் மாலை நேரத்தில் மெல்லிய காற்று ஊசலாடிக் கொண்டிருந்தது. நாணலோ காற்றில் அங்குமிங்கும் வளைந்து ஆடிக்கொண்டிருந்தது. தென்னையின் ஓலைகள் அங்குமிங்கும் அசைந்தனவே தவிர, மரம் உறுதியாய் நின்றது. நாணல் படும் அலங்கோலத்தைக் கண்ணுற்ற தென்னை, வாய்விட்டுச் சிரித்தது. சிரித்த காரணம் என்னவென்று நாணல் வினவத் தென்னை, "நாணலாரே, உம்முடன் சிநேகம் கொண்டதற்காக மிகவும் வருந்துகிறேன். தென்றலாகிய மெல்லிய இளங்காற்றிற்கும் நேரே நிற்கமுடியாமல் தவிக்கின்றீர். பார்த்தீரா என்னை! நான் அசையாமல் நின்று என் தலைமுடியை (ஓலைகளை) மட்டும் ஆடவிட்டு வேடிக்கை பார்க்கிறேன்" என்றது.

இது கேட்ட நாணல், "காற்றின் முன் நிமிர்ந்து நிற்க என்னால் முடியாது. இது என் இனத்தவரின் பழக்க வழக்கம். 'வளையாத வில் தையாது, முறுகின கயிறு அறும்' என்ற பழமொழிகள் எங்கள் ஒவ்வொருவருக்கும் மூலமந்திரம். உமது சிநேகத்திற்காக நாங்கள் அக்

குணத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. இக்குணத்தால் நானும் என் இனத்தாரும் நன்மை அடைவோம் என்பதில் சந்தேகமில்லை. இதைக் காலக்கிரமத்தில் காண்பீர் '' என்றது.

இதைக் கேட்ட தென்னை சற்று கோபங்கொண்டு, "நாணலாரே! 'நிமிர்ந்தவன் நிலைகொள்ளான்' என்பது உமது எண்ணம்போலும். உம்முடைய அற்பப் புத்தியை இவ்வளவு சீக்கிரத்தில் காட்டிவிட்டீரே. 'சிறியவர் சிநேகம் பிராண சங்கடம்' என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அதை நீர் எனக்கு நல்ல நேரத்தில் ஞாபகப்படுத்தினீர். இனி உமது சிநேகம் உதவாது'' என்று சொல்லிப் பழித்தது.

நாணல் மிகவும் வருத்தமுற்று, "அண்ணா! உம்மை மனவருத்தப் படுத்தும்படியான வார்த்தை ஏதும் நான் சொல்லவில்லையே. சிறியேன் அறியாது ஏதாவது சொல்லி யிருந்தாலும் மன்னிப்பீராக. நானும் எனது இனத்தவரில் சிலரும் உம்மைச் சுற்றிலும் இருக்கிறோம். எங்களால் உமக்கு யாதொரு பிரயோசனமும் இல்லை யாயினும் 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பதற் கிணங்க ஏதாவது சமயத்தில் நல்ல உதவி செய்ய நேரிடும்'' என்று கூறியது. தென்னையும் அதை அரை மனதுடன் ஏற்றுக் கொண்டது. இரவும் நெருங்கிற்று; காற்றும் பெருகிற்று. எங்குப் பார்த்தாலும் 'ஓ' வென்ற சப்தம். அநேக மரங்கள் ஒடிந்து விழுந்தன. பல மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டுப் போயின. ஆனால் நாணல்களில் ஒன்றாகிலும் சேதமாகாதிருக்கக் கண்ட தென்னைக்கு, நாணல் பகலில் சொல்லியவைகள் ஞாபகத்திற்கு வந்தன. தனக்கும் மற்ற மரங்களின் கதி ஏற்படுமோ வென்று பயந்தது. இச் சமயத்தில் ஒரு சுழல் காற்று அப்பக்கமாய் அடிக்கத் தொடங்கியது. அநேக தென்னைகள் வேரோடு பிடுங்கப்பட்டுக் கீழே சாய்ந்தன. இதைக் கண்ணுற்ற தென்னையும் மதிமயங்கி என்ன செய்வதென்று தோன்றாமல் நின்றது. தனக்கென்ன நேரிடுமென்று தெரியாமலே இரவுப் பொழுதையும் கழித்தது.

அடுத்த நாள் காலையில் தோப்புக்குச் சொந்தக்காரரிருவர் அங்கு வந்தனர். தோப்பிலுள்ள தென்னைகளெல்லாம் கீழே சாய்ந்திருப்பதை

யும், இந்த ஒரு தென்னைமட்டும் பிழைத்து நிற்பதையும் கண்டு அதன் பக்கமாய் வந்து நின்றார்கள். காரணத்தை யூகித்து அறிந்தார்கள். அவர்களில் இளையவன் "அண்ணா! இந்தத் தென்னைமட்டும் சாயாமல் பிழைத்திருப்பதின் காரணமென்ன?" என்று கேட்டான். மூத்தோன் சிறிது ஆழ்ந்து யோசித்து, தென்னையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "தம்பி! இந்நாணல்களின் வேர்கள் தென்னையின் வேர்களுடன் நன்றாகப் பிணைந்து இருப்பதனாலேயே இம்மரம் பிழைத்தது" என்றான். இது கேட்ட இளையவனும் திருப்தி யடைந்தான். தென்னையும் தான் பெரியவ னென்று எண்ணிக் கர்வங்கொண்டதை விடுத்து, நாணல் தனக்குச் செய்த நன்றியை மறவாது, அதனுடன் நேசமாகவே இருந்து வருகிறது.

## பயிற்சியும் கேள்வியும்

I. வாக்கியங்களிலமை:—மதிமயங்கி, ஊசலாடு, நிலைகொள், வாய்விட்டு, நிமிர்.

II. நீ தென்னையாகப் பாவித்து இக்கதையை எழுது.

III. நாணலையும் தென்னையையும் உயர்திணையாகவும், நாணல் பெண்பாலாகவும் தென்னையை ஆண்பாலாகவும் பாவித்து, இப்பாடத்தின் ஆறாவது பாராவை எழுது.

IV. ஆற்றங்கரை, இளங்காற்று, அங்குமிங்கும், மூலமந்திரம், காலக்கிரமம், சுழல் காற்று—பிரித்து எழுது.

V. (1) ராமன் வந்தான்; ராமன் விளையாடினான்; பின்பு ராமன் வீட்டுக்குப் போனான். ஒரே வாக்கியத்தில் எழுது. (2) இது போன்று இரண்டு மூன்று வாக்கியங்கள் சிலவற்றை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதி அவைகளைச் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது. (3) ஒரு பெரிய வாக்கியத்தை எடுத்து எழுதி அதை இரண்டு மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

## 21. சர்க்கரை

| | | | | |
|---|---|---|---|---|
| நசுக்கி | பனைவெல்லம் | லேகியம் | சுரண்டி | சாறு |
| சர்க்கரை | இனிமை | ஆறவைப்பார்கள் | கற்கண்டு | கோப்பரை |
| பீட் | கணுக்கள் | செங்கரும்பு | புஷ்டி | பாகு |
| பிழிவார்கள் | துண்டு | வெண்கரும்பு | நறுக்கி | இந்து |
| சுண்ணும்பு | உருளைகள் | நாமக் கரும்பு | சற்று | ஔஷதங்கள் |
| வெல்லம் | நுரையாக | ஆலை | தசை | பலவீனம் |
| | சரிப்படுத்திவிடும் | | குழைவு | |

சர்க்கரை எல்லோருக்கும் தெரிந்த பதார்த்தம். அது மிகவும் இனிமையானது. உணவுக்கு முக்கியமாய் வேண்டியது. சர்க்கரையில் பலவிதங்கள் உண்டு. அவை பழுப்புச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, மணல் சர்க்கரை, குழைவு சர்க்கரை என்பனவாம். எல்லா வகைகளும் தித்திப்பாகவே இருக்கும். பிள்ளைகளே, நீங்கள் சர்க்கரையைத் தின்று பார்த்திருக்கிறீர்களா?



சர்க்கரை முக்கியமாய்க் கரும்பின் சாற்றிலிருந்தே செய்யப்பட்டுவந்தது. ஆனால் ஐரோப்பாவில் பீட் என்னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்தும், வட அமெரிக்காவில் சர்க்கரை மரம் என்னும் மரத்தின் சாற்றிலிருந்தும் சர்க்கரை செய்யப் படுகின்றது. நம் இந்தியாவிலும், சைனாவிலும் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே

கரும்பு இருந்ததாகத் தெரியவருகிறது. இந்தியாவிலிருந்துதான் கரும்பு மற்ற தேசங்களுக்குக் கொண்டு போகப்பட்டது. கரும்பு உஷ்ணப் பிரதேசங்களிலேயே பயிராகின்றது.

கரும்பில் செங்கரும்பு, வெண்கரும்பு, நாமக்கரும்பு என்று பல விதங்கள் உண்டு. இவற்றில் செங்கரும்பே மிகவும் தித்திப்பானது. கரும்பு ஆறு அடி முதல் பன்னிரண்டு அடி உயரம் வரை வளரும். கரும்பில் பல கணுக்கள் உண்டு. கரும்பு ஒரு அங்குலம் முதல் இரண்டங்குலம் வரை பருமன் உள்ளது. கரும்பு விதையிலிருந்து உண்டாவதில்லை. ஆனால் கருப்பங் கழியைத் துண்டு துண்டாய் நறுக்கிப் பூமியில் நட்டுப் பயிராக்குவார்கள். நட்ட ஒரு வருஷத்திற்குள் அது நன்றாய் வளர்ந்து விடும். கரும்பின் நுனியில் பச்சையான நீண்ட இலைகள் உண்டு. அப் பாகத்தைக் கோழுத்தாடை என்று சொல்வதுண்டு. கரும்பின் அடிப்பாகம் மிகவும் இனிப்பாகவும் கொழுத்தாடைப் பாகம் சற்று உப்பாகவும் இருக்கும்.

முற்றிய கருப்பங் கழிகளைத் துண்டுகளாய் நறுக்கி, பின்பு அவற்றைக் கரும்பாலைகளிற் கொடுத்துச் சாறு பிழிவார்கள். கரும் பாலை என்பது இரும்பு உருளைகள் உள்ள ஒரு யந்திரம். இந்த ஆலையை இருமாடுகள் இழுத்துக் கொண்டே, சுற்றிச் சுற்றி வரும். ஆலையின் அடியில் பெரிய பாண்டம் வைத்திருப்பார்கள். ஆலை சுற்றும் பொழுது, ஒருவன் கரும்புத் துண்டுகளை இரும்பு உருளைகளுக்கு இடையில் கொடுத்துக்கொண்டே யிருப்பான். இரும்பு உருளைகள் அத் துண்டுகளை நசுக்கி, சாற்றை பிழிந்துவிடும். பிழியப்படும் சாறு முழுதும் கீழே வைக்கப்பட்டுள்ள பெரிய பாண்டத்தில் விழும்.



இவ்வாறு எடுக்கப்படும் சாற்றை யெல்லாம், ஈயம் பூசிய பெரிய கொப்பரையில் விட்டு, அடுப்பின் மெல் வைத்துக் காய்ச்சுவார்கள்.

காய்ச்சும்போது சிறிது சிறிதாகச் சுண்ணும்பு நீர் சேர்ப்பார்கள். அவ்வாறு சேர்த்தால், சாற்றில் உள்ள அழுக்கெல்லாம் நுரையாக மேலே வரும். இவ்வழுக்கு நுரையை அப்போதைக் கப்போது நீண்ட கரண்டிகளால் எடுத்து வெளியே போடுவார்கள். கொப்பரையில் உள்ள சாறு, நன்ருகக் காய்ந்தபின் பாகு ஆகும். இப்பாகை நன்ருய்க் காய்ச்சி மரத் தொட்டிகளிலும், மர அச்சுகளிலும் ஊற்றி ஆறவைப்பார்கள். ஆறிய பிறகு அது வெல்லமாய் மாறும். அச்சுக்களில் ஊற்றியது அச்சு வெல்லமென்றும், தொட்டிகளில் ஊற்றியது உருண்டை வெல்லமென்றும் சொல்லப்படும். இந்தப் பாகை ஆறவிடாமல் நன்ருய்க் காய்ச்சிப் பிறகு ஆறவைத்துக் கழிகளால் தட்டி உடைத்தால், பழுப்புச் சர்க்கரை ஆகும்.

இப்பழுப்புச் சர்க்கரையைக் கொதிக்கும் தண்ணீரிற் கரைத்து, கம்பளிகளில் ஊற்றிப் பலமுறை வடிகட்டுவார்கள். பிறகு மிருகங்களின் எலும்பைச் சுட்டெரித்த கரிகளின்மேல் ஊற்றி வடிகட்டுவார்கள்; அசுத்தமெல்லாம் கரியில் ஒட்டிக்கொள்ளும். சர்க்கரைத் தண்ணீர் சுத்தமாகிவிடும். அந்த நீரை மறுபடியும் ஈயம் பூசிய பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். நன்ருய்க் காய்ச்சி ஆறவைத்தால் இது வெள்ளைச் சர்க்கரை ஆகும். வெள்ளைச் சர்க்கரையிலிருந்து கற்கண்டு காய்ச்சப்படுகிறது.

நம் இந்தியாவில் தென்னை, பனை, ஈந்து முதலியவற்றின் சாறுகளிலிருந்தும் வெல்லம் ,சர்க்கரை, கற்கண்டு முதலியவை செய்கிருர்கள். சென்னை ராஜதானியில் அஷ்டகிராமம், பீமன் பட்டணம், அஸ்கா, ராஜமகேந்திரம், நெல்லிக்குப்பம் முதலிய பல இடங்களில் சர்க்கரை செய்கிருர்கள். வெல்லம் பெரும்பாலும் நமது ராஜதானி முழுவதிலும் செய்கிருர்கள். பனைவெல்லமும், பனங்கற்கண்டும் திருநெல்வேலி ஜில்லாவில் விசேஷமாய்ச் செய்கின்றனர்.

இனி பீட் கிழங்குகளிலிருந்து எப்படிச் சர்க்கரை செய்கிருர்கள் என்று தெரிந்து கொள்ளுவோம். இந்தக் கிழங்கின் விதைகள் மண்

ணில் விதைக்கப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. கிழங்குகள் முற்றிய பின் அவைகளைத் தோண்டி எடுத்து, இலேசான சிறு துண்டுகளாகச் சீவி, அவற்றை வெந்நீரில் போட்டு ஊறவைப்பார்கள். நன்ருய் ஊறிக் கருப்பஞ்சாறுபோல் அந்தச் சாறு ஆனபின், கிழங்குத் துண்டுகளைப் பிழிந்தெடுத்து விட்டு, சாற்றை அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி முன் கூறிய முறைப்படியே சர்க்கரை செய்வார்கள்.

சர்க்கரை மரத்தில் பல இடங்களில் வெட்டி, அதனின்றும் வடியும் பாலைச் சேகரித்து, முன் கூறியவிதமாகவே அடுப்பில் ஏற்றிக் காய்ச்சிச் சர்க்கரை செய்வார்கள். இம்மரங்கள் வட அமெரிக்காவிலும், இங்கிலாந்து தேசத்திலும் வளர்கின்றன.

சர்க்கரை தேகத்துக்குச் சுகத்தையும் புஷ்டியையும் தரக்கூடியது. முக்கியமாக அது குழந்தைகளின் தேகவளர்ச்சிக்கு இன்றியமையாதது. பெரியோர்களின் தேகத்தில் உள்ள தசைகளின் பலவீனத்தை, சர்க்கரை சரிப்படுத்திவிடும். ஆனல் பெரியோர்கள் சர்க்கரையை அதிகமாய் உபயோகிக்கக் கூடாது. சர்க்கரை சேர்ந்த பதார்த்தங்கள் பல நாள் வரை கெடாமல் இருக்கும். இதற்காகவே மேல் நாட்டார் ஊறுகாய்கள் சர்க்கரையிலேயே செய்கிருர்கள். நம் தேசத்தில் ஊறுகாய்களுக்கு முக்கியமாய் உப்புச் சேர்க்கிருர்கள். சிலர் சிறிது சர்க்கரை சேர்ப்பதும் உண்டு. சர்க்கரை பலவிதமான பலகாரங்கள் செய்ய உபயோகப்படுகிறது. லேகியம் முதலிய ஒளஷதங்களோடும் சர்க்கரை சேர்க்கப்படும்.

### பயிற்சியும் கேள்வியும்

I. சொந்த வாக்கியங்களிலமை:—பிழி, இனிமை, துண்டு, ஆலை, புஷ்டி, நறுக்கு.

II. பனைவெல்லம், சர்க்கரை, சீனி இவைகள் செய்யும் வகைகளைத் தனித்தனியாய் எழுது.

III. 'கந்தன் தான் அரக்கரை வதைத்தான்.' 'தான்' என்ற வார்த்தை வேருெருவரும் அரக்கரை வதைக்கவில்லை. வதைத்தவன் கந்தன் என்பதை வற்புறுத்துகிறது,

அப்படியே கந்தனோ ராமனோ இதைச் செய்யான். இங்கே 'ஓ' என்ற எழுத்து ஒரு காரியத்தை வற்புறுத்துகிறது.

இப்படியே எந்த ஒரு எழுத்தோ அல்லது பதமோ ஒரு பெயர்ச் சொல்லைத் தழுவி ஒன்றை வற்புறுத்துகிறதோ அந்தச் சொல் இடைச்சொல் என்று பெயர்.

திருநெல்வேலி ஜில்லாவில்தான் பனைவெல்லம் அதிகமாகச் செய்யப்படுகிறது. இதேமாதிரி சில இடைச் சொற்களைச் சேர்த்து இப்பாடத்தின் நான்காவது பாராவை எழுது.

---

## 22. சாமுவேல்

| | | | | |
|---|---|---|---|---|
| நேர்மை | திருவாக்கு | ஆசனம் | குற்றங்கள் | பிரார்த்தித்து |
| நூற்றாண்டு | முக்தி | முறியடித்து | அடியேனை | பால்குடி |
| ஆனதுபற்றி | சொல் | நலத்தையே | சமூகம் | சார்ந்தது |
| சந்நிதி | மலடி | இதர | கொள்ளைகொண்டு | அழிவு |
| கண் திறந்து | கசிந்து | மூத்தாள் | தள்ளாத | தீர்க்கதரிசி |
| இரங்கினார் | இந்தருளும் | ஏசுவார் | சரிவர | மகிமை |
| பிரதான | நல்வழி | ஆண்டவனே | இளையாள் | நேர்மை |
| பணிகளையும் | ஆசாரியன் | ஊழியம் | புண்படுத்தியது | கழுத்து |
| கிளர்ச்சி | நள்ளிரவு | பயபக்தி | சிறுமை | |

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பு அரேபியாவிலுள்ள எபிரேயம் மலைப்பிரதேசத்திலே எல்கானா என்பவனுக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். அவர்களில் மூத்தாளாகிய அன்னாள் என்பவளுக்குப் பிள்ளை இல்லை. இளையாளுக்கோ, அனேக பிள்ளைகளிருந்தனர். ஆனதுபற்றி அவள் கர்வம்கொண்டு மூத்தாளைக் கண்டபடி பேசுவாள். மலடி யென்று ஏசுவாள். இதெல்லாம் அன்னாளின் மனத்தைப் புண்படுத்தியது.

அக்குடும்பம் வருஷத்திற் கொருமுறை எருசலேமிலுள்ள தேவ ஆலயத்திற்குப் போய், கடவுளைப் பணிவது வழக்கமாயிருந்தது. அச்

சமயத்தில் அன்னாள் கடவுளின் சந்நிதியில் போய் நின்று மனங்கசிந்து அழுது, "ஆண்டவனே! என் சிறுமையைக் கண் திறந்து பாரும். 'மலடி' என்ற வசைமொழியினின்றும் என்னைக் காப்பாற்றி எனக்கு ஓர் ஆண்மகவை யீந்தருளும். அந்த மகன் அவன் ஆயுட்காலம் வரை உமக்கு ஊழியம் செய்வான்" என்று பிரார்த்தித்துக்கொண்டாள். ஆண்டவன் அவளுடைய வேண்டுகோளுக்கு இரங்கினர். மறு வருஷப் பண்டிகைக்குள் அன்னாளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அந்தக் குழந்தைக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். பிள்ளையும் நல்வழியிலும் பயபக்தியிலும் வளர்ந்து வந்தான்.

சாமுவேல் பால்குடி மறந்ததும், அவன் தாயாரும் தகப்பனும், அவனை எருசலேமிலுள்ள தேவாலயத்தில் கொண்டுபோய் விட்டனர். அப்பொழுது ஏலி என்பவன் அத்தேவாலயத்தின் பிரதான ஆசாரியனுயிருந்தான். ஏலியின் மக்கள் துஷ்டர்களாயும் கடவுள் பத்தி யற்றவர்களாயுமிருந்தார்கள். அவர்களின் குற்றங்களை ஏலி கண்டிக்காமலிருந்தான். ஆகையால் அவர்கள் செய்த பாவம் தகப்பனுகிய ஏலியைச் சார்ந்தது. கடவுள் ஏலிக்குப் பதிலாக உண்மையும் நேர்மையுமுள்ள ஒரு ஆசாரியனை நியமிக்க எண்ணங்கொண்டார்.

சாமுவேலோ தினந்தோறும் கடவுளின் ஆலயத்தில் செய்ய வேண்டிய சகல பணிகளையும் சரிவரச் செய்து முடித்து, அங்கேயே படுத்துக் கொள்வான். அக்காலத்தில் கடவுள் மனிதரோடு வார்த்தையாடுவது அபூர்வமாயிருந்தது. திடீரென்று ஒருநாள் நள்ளிரவில் கடவுள் சாமுவேலை அழைத்தார். சாமுவேல் ஏலிதான் தன்னை அழைக்கிருரென்று நினைத்து, ஏலியிடம் போய் "ஐயனே! அடியேனை அழைத்தீரா! இதோ இருக்கிறேன்" என்றுன். ஏலியோ, "மகனே! நான் உன்னை அழைக்க வில்லை. நீ போய் படுத்துக்கொள்" என்றுன். மறுபடியும் கடவுள் சாமுவேலைக் கூப்பிட்டார். சாமுவேல் மறுபடியும் ஏலியினிடத்திற்கு ஓடினுன். ஏலி 'கடவுள்தான் சாமுவேலை அழைக்கிருர்' என்பதை யறிந்து, "சாமுவேல்! நீ போய்ப் படுத்துக்கொள். இனி

மேலும் அச் சொல் கேட்குமாயின், 'ஆண்டவனே! சொல்லும். அடியேன் கேட்கிறேன்' என்று சொல்லு" என்று சொல்லி அனுப்பினன். சாமுவேலும் போய்ப் படுத்துக்கொண்டான். மூன்றும் முறையும் கடவுள் சாமுவேலே அழைத்தார். சாமுவேலும் ஏலி சொல்லிக் கொடுத்தவாறே கூறினன். கடவுள் "ஏலியின் மக்கள், தங்களது குடும்பத்துக்கே அழிவைத் தேடிக்கொண்டார்கள். ஏலியும் தன் மக்களே அடக்காத குற்றத்திற்காகத் தண்டனே அடைவான்" என்ருர்.

அடுத்த நாள் காலேயில் ஏலி, கடவுள் கூறியதைச் சாமுவேலிடமிருந்து அறிந்து, "கடவுள் சித்தப்படி நடக்கட்டும்" என்ருன். சில காலத்திற்கெல்லாம் அந்நாட்டிலுள்ள இரு சாதியாருக்கும் பலத்த யுத்தம் நடந்தது. அதில் ஏலியின் மக்கள் கொல்லப்பட்டனர். இச் செய்தி கேட்ட ஏலி, தன் ஆசனத்திலிருந்து கீழே விழுந்து, கழுத்து முறிந்து இறந்தான்.

நாளடைவில் சாமுவேல் பெரியவனுனன். கடவுளும் அவனேத் தன் சமூகத்திற்குகந்தவனுகக் கண்டு, தன்னே உண்மையாய் வழிபட்டு வரும் ஜனங்களின் நன்மை தீமைகளே அவனிடம் எடுத்துச் சொல்லி, அந்த ஜனங்களுக்கு நல்வழி காட்டும் தீர்க்கதரிசியாக அவனே ஆக்கினுர். அவனே யாவரும் தெய்வ மனிதனென்று கொண்டாடினுர்கள். அக்காலத்தில் சாமுவேலேச் சேர்ந்த இஸ்ரவேல் ஜாதி ஜனங்களுக்கு அரசர்கள் கிடையாது. அவர்கள் கடவுளேயே தங்கள் அரசனுக மதித்து வந்தார்கள். ஒரு சமயம் அந்த ஜனங்கள், இதர ஜாதியார்களேப் போலவே, தங்களுக்குள்ளேயும் ஒரு அரசனே ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். சாமுவேல் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லே. ஆகையால் சாமுவேல் கடவுளின் சித்தத்திற்கிணங்க, சவுல் என்ற ஒருவனே அரசனுக ஏற்படுத்தினுன். இவனே அரசனுகக் கொண்ட இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய ஜாதியாரோடு யுத்தம் செய்து, அவர்களே முறியடித்து, அவர்கள் நாட்டையும் பொருள்களேயும் கொள்ளே கொண்டார்கள். சவுல் என்னும் அரசன், சாமுவேலின் சொற்களே மதியாது, கொள்ளேப் பொருள்களே

அபகரிக்க எண்ணினன். அத்துடன் தனக்கு ஜயத்தை உண்டு பண்ணின கடவுளுக்கு அம்மகிமையைக் கொடுக்காது தன் பெயரால் பல கட்டிடங்களையும் கோபுரங்களையும் கட்டினன். இதனல் சாமுவேல் கடவுளின் திருவாக்குக் கிணங்க, தாவீது என்ற ஒருவனை அரசனுக்கினன்.

சவுல், தாவீதை வெறுத்து அவனைக் கொல்ல எண்ணினன். யுத்தத்தில் சவுல் மாண்டான். தாவீது, சாமுவேலின் விருப்பத்திற் கிணங்கவும், கடவுள் அருளினலும் ஜனங்களுக்கு நலத்தையே செய்து நன்கு வாழ்ந்து வந்தான். சாமுவேல் நீண்டகாலம் உயிரோடிருந்து பக்தியிலும் நேர்மையிலும் சிறந்தவனய் விளங்கி, தள்ளாத காலத்தில் முக்தியடைந்தான். அவனுடைய நாமம் மேல் நாடுகளிலும் நம் நாகரிக நாடுகளிலும் போற்றப்பட்டு வருகிறது.

### பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை:—நூற்ருண்டு, பிரதான, ஈந்தருள், ஊழியம், கொள்ளைகொள், பிரார்த்தி.

II (1) இளைய மனைவி அன்னளை மலடி என்று ஏசியதற்கு, அன்னள் என்ன செய்தாள்? (5 வரிகளில் எழுது). (2) சாமுவேல் முன்னேற்றத்திற்கு அவனிடம் காணப்பட்ட நற்குணங்கள் என்னென்ன? (3) சவுலிடம் காணப்பட்ட தப்பிதம் என்ன?

III இப்பாடத்தில் காணப்படும் வார்த்தைகளில் எதிர்ப் பதங்களுள்ளவற்றை எடுத்து எழுதி எதிர்ப்பதங்களையும் குறிப்பிடு.

IV (1) சாமுவேல் கடவுளையே வணங்கி வந்தார். (2) சவுலோ ஜயத்தைத் தன்னுடையதாக்கினன். (3) காற்ருே வெயிலோ பலமுள்ளவனுக்கு ஒன்றும் செய்யாது. மேற்கண்டவைகளில் காணப் பெறும் சொற்களைப் பிரித்து எழுதி என்ன சொற்கள் என்று தெரிவி.

V நீ இதுவரை படிந்தறிந்த பழமொழிகளில் ஐந்து எழுதி அவைகளின் பொது அர்த்தத்தையும் எழுது.

# 23. புதையல்

| | | | | |
|---|---|---|---|---|
| மங்கலான | வயிடூரியம் | துரு | கிட்டுகின்றன | அவுரிச்சாறு |
| மண்ணெண்ணெய் | ஆண்டு | மரகதம் | பிரகாசம் | கிரோசின் |
| தகரம் | தணல் | நீலம் | அச்சு | ஈயம் |
| கொலுசு | பழங்கால | தோற்றம் | மாணிக்கம் | களிம்பு |
| தாமிரம் | கந்தகம் | பொடாசியம் | கோமேதகம் | அரைஞாண் |
| வயிரம் | நாகம் | நிலக்கரி | வானவில் | வெண்கலம் |
| புஷ்பராகம் | பல்லாயிரம் | இயல்பு | | |

பூமியின் கீழிருந்து அகப்படும் பொருள்களுக்குப் புதையல் என்று பெயர். இவ்வாறு அகப்படுபவைகள் ; பழங்கால நாணயங்கள், உலோகங்கள், விலையுயர்ந்த கற்கள், இறந்த பிராணிகளின் எலும்புகள், நிலக்கரி, கிரோசின் என்னும் மண்ணெண்ணெய், கந்தகம் முதலிய மருந்துப் பண்டங்கள், உலோக உப்புக்கள் முதலியவைகளே.

பழங்காலத்தில் யுத்தம் ஏற்பட்ட சமயத்திலும், திருடர், கொள்ளைக்காரர் முதலியவர்களுக்கு அஞ்சியும், அக்காலத்தில் வாழ்ந்த ஜனங்கள் தங்கள் வசமிருந்த விலையுயர்ந்த நாணயங்களையும் ஆபரணங்களையும் பூமியின்கீழ் புதைத்து வைத்தனர். அவ்வாறு புதைக்கப்பட்ட நாணயங்களும் ஆபரணங்களுமே, பூமியைத் தோண்டும் சிலருக்குக் கிட்டுகின்றன. இவ்விதம் கிடைப்பவைகள் மூலம், பழங்காலத்திய பழக்க வழக்கங்களை நன்கு அறிந்து கொள்ளலாம்.

பூமியின் கீழிருந்து அகப்படும் உலோகங்களில் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு, இரும்பு, ஈயம், தகரம், நாகம் முதலியவை முக்கியமானவை. உலோகங்களைப் பூமியிலிருந்து வெட்டியெடுத்து, பிறகு அவைகளைச் சுத்தஞ்செய்து உபயோகப் படுத்துவார்கள். இவைகளில் தங்கம், மஞ்சள் நிறமானது. மிகவும் உறுதியும், கனமும், பிரகாசமும் உள்ளது. இது மிகவும் கொஞ்சமாகக் கிடைப்பதால் இதன் விலை அதிகம். உலோகங்களில் இதுவே மேலானது. இதில் களிம்பு ஏறுது. தங்கத்தினால் காப்பு, கொலுசு, சங்கிலி, மோதிரம் முதலிய பலவித நகை

கள் செய்வார்கள். தங்கத்துக்கு அடுத்தபடியாய்ச் சிறந்தது வெள்ளி. இது வெண்மை நிறமானது, பிரகாசமுள்ளது. இதிலும் களிம்பு ஏருது. வெள்ளியால் பாத்திரங்களும், காப்பு, கொலுசு, அரைஞாண் முதலியவைகளும் செய்வார்கள். தங்கத்திலும் வெள்ளியிலும் நகைகள் செய்பவனுக்குத் தட்டான் என்று பெயர்.

செம்பு அல்லது தாமிரம் சிவந்த நிறமுள்ள ஓர் உலோகம். செம்பினுல் பலவிதப் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. தங்கம், வெள்ளி, செம்பு, இவைகளாற் செய்த நாணயங்கள் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. பித்தளை வெளுத்த மஞ்சள் நிறமானது. இதுவும் சிறிது பிரகாசம் உள்ளது. ஆனுல் தங்கத்தைப் போல் அவ்வளவு பிரகாசமுள்ளதல்ல. பித்தளையில் பாத்திரங்கள் செய்வார்கள். செம்பு, பித்தளைப் பாத்திரங்களில் சீக்கிரம் களிம்பு ஏறும். களிம்பு பச்சை நிறமாயிருக்கும். இப் பாத்திரங்களில் களிம்பு ஏறுமாதலால், இவைகளில், வைக்கப்படும் புளிப்புப் பதார்த்தங்கள் சீக்கிரம் கெட்டுப் போம். இப் பாத்திரங்களினுள்ளே ஈயத்தைப் பூசி உபயோகப்படுத்தினுல் களிம்பு ஏருது. பதார்த்தங்களும் கெட்டுப் போகா. செம்பு, பித்தளைப் பாத்திரங்கள்செய்பவனுக்குக் கன்னுன் என்று பெயர்.

இரும்பு வெள்ளை நிறமானது. ஆனுல் அது வெள்ளியைப் போல் அவ்வளவு வெண்மையானதல்ல. அப்படியாயின் இரும்பு பார்வைக்கு ஏன் கருப்பாயிருக்கிறது? இரும்பில் சீக்கிரம் துருப்பிடிக்கும். அப்போது இரும்பு கருப்பு நிறமாய்க் காணப்படும். இரும்பு மிகவும் உறுதியான உலோகம். இது அதிகமாய்க் கிடைப்பதால், இதன் விலை மலிவு. இரும்பினுல் பலவித ஆயுதங்களும், கத்தி முதலிய சிறு கருவிகளும், பலவித இயந்திரங்களும் செய்யப்படுகின்றன. இரும்பு நமக்கு மிகவும் உபயோகமுள்ளது. இரும்பு வேலை செய்பவனுக்குக் கொல்லன் என்று பெயர்.

ஈயம் வெண்மை நிறமுள்ளது; எளிதில் வளையக்கூடியது; சீக்கிரம் உருகக்கூடியது. ஈயத்தினுல் பாத்திரங்களும், துப்பாக்கிக்

குண்டுகளும், அச்சு எழுத்துக்களும் செய்யப்படுகின்றன. ஈயத்தில் களிம்பு ஏறும். தகரம் என்னும் உலோகத்தை வெள்ளீயம் என்றும் சொல்வார்கள். இந்த உலோகத்தில் களிம்பு ஏருது. வெண்கலம் செய்வதற்குத் தகரத்தைச் சேர்ப்பார்கள்.

விலையுயர்ந்த கற்களில் வயிரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம் முதலியவைகளே பூமியிலிருந்து அகப்படுகின்றன. இவைகளுள் விலையுயர்ந்தது மாணிக்கமே. உறுதியாலும், பிற இரத்தினங்களையும் தன்னையும் அறுக்கக்கூடிய சக்தியுடைமையாலும், பிரகாசத்தாலும் சிறந்தது வயிரம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியிற் புதைந்த மரங்களின் கரித்துண்டுகளே இவ்வயிரம் ஆகின்றன. வயிரம் வெளித் தோற்றத்துக்கு வெண்மையாய்க் காணப்பட்டாலும், வான வில்லைப்போல ஏழு நிறங்களையும் மாறி மாறிக் காட்டும் இயல்புடையது. மரகதம் மயில் கழுத்துப் போலப் பசுமை நிறமுடையது. மாணிக்கம் சிவப்பு நிறமுடையது. புஷ்பராகம் மங்கலான வெண்மை நிறமாயும், மஞ்சள் நிறமாயுருக்கும். வயிடூரியம் தேன் நிறமுடையது. நீலம் குயிற் கழுத்துப் போலவும், அவுரிச்சாறு போலவும் நீலமும் கறுப்பும் கலந்து தோன்றும். கோமேதகம் மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமுடையது.

நிலக்கரி பூமியின் கீழுள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது. நிலக்கரி சாதாரண அடுப்புக் கரியைக் காட்டிலும் உறுதியும் கனமும் உள்ளது. நிலக்கரியைப் புகைவண்டி எஞ்சின்களிலும், வேறு பல இயந்திரங்களிலும் அடுப்பு எரிக்க உபயோகிக்கிருர்கள். இதன் தணலுக்குச் சூடு அதிகம். நிலக்கரி அதிக நேரம் நின்று எரியக்கூடியது. நிலக்கரிச் சுரங்கங்கள் நம் நாட்டில் அதிகம் இல்லை.

பூமியின் கீழ் கிரோஸின் என்னும் மண்ணெண்ணெய் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, இயந்திரங்களின் உதவியால் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இக் கிணறுகளிலிருந்து மண்ணெண்ணெய்,

பெட்ரோலியம் முதலிய எண்ணெய்கள் கிடைக்கின்றன. இம்மாதிரி எண்ணெய்க் கிணறுகள் பர்மாவிலும் அமெரிக்காவிலும் அதிகம். மண்ணெண்ணெய் ஏழை பணக்காரர் முதலிய யாவர்க்கும் உபயோகப்படுகின்றது. பெட்ரோலியம் என்னும் பெட்ரோல் எண்ணெய் மோட்டார், ஏரோப்ளேன் முதவியவைகளுக்கு உபயோகப்படுகிறது.

இவை தவிர கந்தகம், பொடாசியம் முதலிய பல உலோக உப்புக்களும் பூமியிலிருந்து கிடைக்கின்றன. இவைகள் மனிதர்க்கு மருந்துச் சரக்குகளாக உபயோகப்படுகின்றன. பொதுவாக பூமியிலிருந்து கிடைக்கும் எப்பொருளும் மனிதர்க்கு மிகவும் உபயோகமாகின்றது.

### பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை :—துரு, தோற்றம், களிம்பு, பல்லாயிரம், இயல்பு.

II (1) புதையல் என்ற வார்த்தைக்கு மிகவும் பொருத்தமான அர்த்தம் என்ன? அதை விளக்கு. (2) புதை பொருள்கள், எங்தெந்த ரூபங்களாக நமக்குக் கிடைக்கின்றன? அந்தந்த இனத்தைச் சேர்ந்தவைகளைப் பிரித்து எழுது.

**இலக்கணம் :—**உரிச்சொல் என்பது குணத்தை உணர்த்தும் சொல்; அது பெயர்ச் சொல், வினைச் சொற்களை அடுத்தே வரும்.

(உ-ம்.) சாலச் சிறந்தது. (சால = மிகவும்)
நனி பேதை. (நனி = மிகுந்த)

இந்த உரிச் சொற்கள் அனேகமாக செய்யுட்களிலேயே வரும்.

## 24. கல்வியின் மகிமை

### (கும்மி)

நீர்வள மோடு நிலவளமும் கொண்டு
நெஞ்சினில் வஞ்சக மில்லாதவர்
பார்வள மோங்கிப் பழகி யுறைந்திடும்
பாண்டிய நாட்டு நகரமொன்றில், 1

செல்வம் பெருகச் சிறந்த புகழொடு
சிந்தை மகிழுங் கலைபயின்று
கல்வி நலமும் கனிந்து புகழ்கொண்டு
காராளன் ஒருவன் வாழ்ந்திருந்தான். 2

வேளாண்மை செய்து மிகுந்த பொருள் சேர்த்து
வித்தையும் நன்கு பயின்றதனால்
தாளாண்மை யால்வந்த தனத்தையே கொண்டவன்
தருமம் பலவுமே செய்துவந்தான். 3

இல்லற வாழ்வெனும் நல்லற வாழ்வினில்
இருந்த அவனுக் கிருவர் மக்கள்,
நல்ல குணங்கள் பழகும் விருப்புடன்
நன்மை பெருக வளர்ந்திருந்தார். 4

மூத்தமகன் செல்வம் முக்கிய மென்றெண்ணி
முயற்சி செய்யா திருந்து தந்தை
காத்த பொருள்களைக் கைக்குவந்தபடி
கண்ட கண்ட வழி செலவழித்தான். 5

இளைய மகன் கல்வி இன்பம் சிறந்ததென்
றெண்ணிமிகப் பயின்றோங்கி வந்தான்.
விளைவதை ஒன்றும் அறியாது மூத்தவன்
வீணிற் படிக்கா திருந்து வந்தான். 6

அப்பன் இறந்ததும் மூத்தமகன் பொருள்
அத்தனையும் தான் எடுத்துக் கொண்டான்.
'இப்பண மொன்றும் எனக்குவேண்டா' மென்
றிளையவன் சென்றனன் வேற்றிடமே. 7

அந்நிய நாட்டின் அரசரைக் கண்டவன்
ஆனந்தத்தோடு கலை வளர்த்து
நன்னயமாக இளையவன் வாழ்ந்தனன்
நாடெங்கும் போற்றும் புகழுடனே. 8

துஷ்டர் பலரைத் துணையெனக் கொண்டுதன்
சொந்த பணத்தைத் தொலைத்த பின்பு
கஷ்டத்துடன் பல கடன்களும் பட்டுக்
கலங்கியே நின்றனன் மூத்தவனே. 9

திருடப் புகுந்து சிறையும் அடைந்தவன்
திண்டாடும் தன்மை அறிந்திளையோன்
விறைவிற் புகுந்து பணங்கள் கொடுத்துமே
மீட்டான் அண்ணனை வாட்டமற. 10

பின்னரும் வேண்டிய பெருமையுடனே
பேணிய தன்னோடும் வைத்திருந்தான்.
நன்னல மாகிய கல்விப்பய னவன்
நன்கு தெரிந்து மகிழ்ந்திருந்தான். 11

இந்தக் கதையினுல் இன்பப் பெருக்கத்தை
இளையவன் தான் பெறக் காரணமாய்
வந்தபலன் பெற வைத்திட்ட கல்வியின்
மகிமை அறிவீர்கள் பாலர்களே. 12

—நா. கனகராஜ ஐயர்.

# 25. கிராமத் தொண்டு

| | | | | |
|---|---|---|---|---|
| பொருக்குதல் | கூட்டுவிற்பனை | கிணறு | சந்தா | நோக்கத்துடன் |
| தொண்டு | உடன்பிறந்தார் | அபிவிருத்தி | விளக்குகள் | ஆரோக்கியம் |
| தளராத | சீர்திருத்தம் | உள்ளூர் | வட்டிக்கு | குப்பை |
| அடுத்தது | இலக்கிய | சுற்றத்தார் | விளைபொருள் | தொத்துவியாதி |
| கூளங்கள் | நன்கொடை | பலன் | எளியவர் | பேருதவி |
| அதிகாரிகள் | விவரமாக | குடிசை | ஐக்கியநாணயச்சங்கம் | |

ஒரு கிராமத்துக்குத் தொண்டு அல்லது ஊழியம் செய்வது எளிதான காரியமல்ல. ஒருவன் முதன் முதலில் தன்னைப்பெற்ற தாய் தந்தையர்க்கும், பிறகு உடன்பிறந்தார், சுற்றத்தார், ஏழை எளியவர்கள், கஷ்டப்படுகிறவர்கள் முதலியவர்க்கும் உதவிபுரியக் கடமைப்பட்டவன். ஒருவன் ஒரு கிராமத்துக்குத் தொண்டு செய்தால், அவன் அநேக ஏழைக் குடும்பங்களுக்கும் தொண்டு செய்தவனாவான்.

ஒரு கிராமத்திற்குத் தொண்டு செய்வதற்காக வீடு வீடாய்ச் சென்று ஒவ்வொருவருக்கும் உதவி செய்வதும் முடியாத காரியம். ஆனால் அந்தக் கிராமத்தவர்களுக்கான, பொதுவான சில தொண்டுகள் செய்வதுதான் சிறந்ததாகும். ஒரு கிராமத்திற்குப் பொதுவாகச் செய்யவேண்டிய தொண்டுகள் பல உள. அவைகளைக் கிராமச் சீர்திருத்தம் எனவும் சொல்லலாம். கிராமத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைக் கல்வி, சுகாதாரம், செல்வநிலை என மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

கல்வியே எவ்விதமான சீர்திருத்தத்திற்கும் ஆதி காரணமாயிருந்து பலனளிக்கக் கூடியது, ஒரு கிராமத்தில் குறைந்தது ஒரு பள்ளிக் கூடமும், அதை உண்மையான நோக்கத்துடனும், தளராத ஊக்கத்துடனும், விருத்தி செய்யும் சில ஆசிரியர்களும் தேவை. இலக்கியக் கல்வியுடன் பிள்ளைகளுக்குச் சிறு குடிசைத் தொழிற் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும். தேக ஆரோக்கியத்திற்கான பலவித விளையாட்டுக்களும் ஏற்படுத்த வேண்டும். நாட்டில் வழங்கும் இராகங்களில் பல பாட்

டுக்களையும் கற்பிக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொள்ள ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்.

ஒழிவு நேரங்களில் வயது வந்தவர்கள் கல்வி கற்றுக்கொள்ள இரவுப் பள்ளிக்கூடங்களும் நடத்த வேண்டும். படித்து வெளியேறுபவர்கள் தங்கள் கல்வி யறிவை விருத்திசெய்து கொள்ளவும், விவசாய அறிவை அதிகப்படுத்திக் கொள்ளவும், உலகப் போக்கை அறிந்து கொள்ளவும் இலவச வாசகசாலைகள் அமைக்கவேண்டும். அவைகளில் விவசாயம், கைத்தொழில் முதலியவைகளை விளக்கும் புத்தகங்களும், பத்திரிகைகளும் வழங்கப்படவேண்டும். இவைகளை வாங்குவதற்காக, நன்கொடை, சந்தா முதலியவை வசூல் செய்ய வேண்டும். கல்வியே மனிதற்குக் கண் என்பதை மறக்கக் கூடாது.

கல்விக்கு அடுத்தது சுகாதாரமேயாகும். 'சுவரை வைத்துத் தான் சித்திரம் எழுதவேண்டும்' என்னும் பழமொழிக்கிணங்க ஒருவன் தேக சுகத்துடன் இருந்தால்தான், அவன் எக்காரியமும் செய்ய முடியும். சுகமாய் ஒருவன் வாழவேண்டுமானால், அவன் சுத்தமாயிருக்கவேண்டும். பிறரையும் சுத்தமாயிருக்கச் செய்யவேண்டும். வீடுகளும் வீடுகளின் சுற்றுப் புறங்களும் தெருக்களும் பொதுவில் கிராம முழுவதும் சுத்தமாயிருக்கும்படி செய்யவேண்டும். சுகாதார விஷயங்களைப்பற்றி ஜனங்களுக்கு விவரமாக எடுத்துச் சொல்லவேண்டும். தெருவைப் பெருக்குதல், தெருக்களைச் சீர்திருத்தம் செய்தல் முதலிய வேலைகளை நடத்திக் காட்டவேண்டும். கிராமத்திலுள்ள மற்ற வாலிபர்களையும், இவ்வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபடச் செய்தல் வேண்டும். கிராமத்திலுள்ள குப்பை கூளங்களைத் தனியாக ஒரு புறத்தில் கொட்ட ஏற்பாடு செய்யவேண்டும். குளம் கிணறு முதலியவைகளை ஜனங்கள் அசுத்தம் செய்யாமல் பாதுகாக்க வேண்டும். இராக்காலங்களில் தெருக்களில் விளக்குகள் போடவேண்டும். மிருகங்களுக்குத் தனி இட வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். தொத்து வியாதிகளைப் பற்றி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல, சுகாதார அதிகாரிகள் மூலம்

ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்விதமாகக் கிராமச் சுகாதாரத்தை அபி விருத்தி செய்யலாம்.




அடுத்தபடியாகக் கிராமத்தின் செல்வ நிலையைப் பலவிதத்திலும் உயர்த்தப் பாடுபட வேண்டும். விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் காலா காலத்தில், குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும்படி ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தலாம். இவற்றின் மூலமாக விவசாயிகள், உழவுச் சாமான்கள் முதலியவைகள் வாங்கலாம். விளை பொருள்களைச் சேர்த்துவைத்து, கூட்டு விற்பனை செய்து நல்ல லாபம் பெறலாம். உள்ளூரில் விளையும் பொருள்களை ஒன்று சேர்த்து அய லூரில் கொண்டு போய் விற்று லாபம் அடையலாம்.

இந்த விதமான முன்னேற்றத்திற்கான வேலைகளை ஒருவன் செய் வதே, கிராமத்துக்குச் செய்யும் பேருதவியாகும். நம் கிராமங்கள் முன் னேறினால்தான், நம் நாடு முன்னேறும். நம் நாடு முன்னேறினால்தான் நம் தேசமும் முன்னேற்றம் அடையும். நம் தேசம் முன்னேற்றம் அடைந்தால்தான், நாம் சுதந்திரத்தோடு சுகமாக வாழலாம். தன்

கிராமத்திற்காக உழைப்பவனே தேசத்திற்காக உழைக்கும் நற்றொண்டனுவான்.

## பயிற்சியும் கேள்வியும்

I வாக்கியங்களிலமை:—தளராத, நன்கொடை, அபிவிருத்தி, சுற்றத்தார், பேருதவி.

II பள்ளிக்கூடப் பையன்கள் செய்யக்கூடிய கிராமத் தொண்டுகள் சிலவற்றை எடுத்துச் சொல்லி அவைகளை நீ செவ்வனே செய்ய என்ன ஏற்பாடுகள் செய்வாய் என்று எழுது. (2) கிராமத் தொண்டு எவ்வாறு தேசத்தொண்டாகிறது?

III இப் பாடத்தின் ஆருவது பாராவில் முதல் வாக்கியத்தை விடுத்து மற்றையவைகளில் இரண்டு வாக்கியங்களை ஒரே வாக்கியமாகவும், ஒரு வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகவும் எடுத்து எழுது.

IV முதல் மூன்று பாராக்களில் வரும் புது வார்த்தைகளை எடுத்து விட்டு வேறு வார்த்தைகளை அமைத்துப் பொருள் வேறுபடாமல் எழுது.

V (1) குற்றம் பார்க்கில் சுற்றமில்லை. (2) சுற்றம் பார்க்கில் குற்றமில்லை:—இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசமென்ன?

VI எதிர்ப் பதங்கள் சொல்லக்கூடிய வார்த்தைகளை எடுத்து எழுதி எதிர்பதங்கள் என்னவென்றும் எழுது.

இலக்கணம் :—சொற்றொடர்: சில சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நின்று ஒரு கருத்தை உணர்த்தினுல் அச்சொற்கள் சொற்றொடர் ஆகும். சொற்களின் கருத்து முடிந்ததாயிருந்தால் அச் சொற்றொடரை வாக்கியம் என்கிறோம்.

வாக்கியத்தில் சாதாரணமாக எழுவாய் முதலில் வரும்; செயப்படு பொருள் இருந்தால் அது அடுத்தபடியாக வரும்; முடிவில் பயனிலை வரும்.

(உ-ம்.) கந்தன் அரக்கரை வதைத்தான்.
இந்த முறை மாறியும் வாக்கியம் வரலாம்.

(உ-ம்.) அரக்கரைக் கந்தன் வதைத்தான்.
அரக்கரை வதைத்தான் கந்தன்.

# 26. சுவாமி விவேகானந்தர்

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி | முது மொழி | பாடல்கள் | உதயமாயின | முகவிலாசம் |
| பிரபல | தீர்க்க தரிசனம் | அறிகுறி | இடங் கொடுக்க | அறிவாளி |
| தெளிய | இரக்கச் சிந்தை | இலட்சியம் | குரல் | காளிதேவி |
| நிவர்த்திக்க | வக்கீல் | நிலைநாட்டினர் | சம்பிரதாயம் | அருள்வாக்கு |
| பிரமுகர்கள் | கேள்விகள் | சுவாமிகள் | மாது | ஆங்கிலம் |
| சொற் பொழிவு | சட்டம் | சிரோமணி | வெள்ளம் | உபசரித்தார் |
| | | மடம் | சந்நியாசம் | |

சுமார் 75 வருஷங்களுக்கு முன்னே கல்கத்தாவில் விசுவநாததத்தர் என்ற பிரபல வக்கீல் ஒருவரிருந்தார். அவர் மிகவும் தெய்வ பக்தியும் இரக்கச் சிந்தையுமுடையவர். புவனேசுவரி என்னும் பக்த சிரோமணி அவர் மனைவியாவர். இவர்களுக்கு 1853-ம் வருஷம் ஜனவரி மாசம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு நரேந்திரர் என்ற பெயரிட்டனர். நரேந்திரரும் தம் சிறு வயதிலேயே 'இளமையிற் கல்' என்பதற் கிணங்க கல்வி யறிவில் தேர்ச்சி யடைய ஆவல் கொண்டார். 'விளையும் பயிர் முளையிலே' என்றபடி கல்வியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து பதினெட்டாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் கல்வி பயிலும் காலத்திலேயே, "நம்மைப் படைத்தது யார்? நம்மை ஏன் படைக்கவேண்டும்? நம் நோக்கம் என்ன?" என்பதுபோன்ற

கேள்விகள் பல அவர் மனத்தில் உதயமாயின. அவற்றைப் பெரியவர்களிடத்திலும், அறிவாளிகளிடத்திலும் கேட்டுத் தெளிய எண்ணங் கொண்டார். பி. ஏ. பட்டம் பெற்ற பின் தம் தகப்பனாரைப் போலவே சட்டப் பரிக்ஷையில் தேற விரும்பினார். ஆனால் அவர்

மனத்தில் எழுந்த தெய்வீக எண்ணங்கள், வேறெந்த எண்ணத்திற்கும் இடங்கொடுக்கவில்லை. கடவுளைச் சதா நினைத்து உருகுவார். தம் சந்தேகங்களை நிவர்த்திக்க, ஒருவரைத் தேட ஆவல் கொண்டார். கடவுளைப் பற்றிய உருக்கமான பாடல்களைத் தமது இனிய குரலால், கேட்பவர் மனமுருகப் பாடுவார்.

அச்சமயத்தில் கல்கத்தாவிற்கடுத்த காளிகட்டத்திலே, இராமகிருஷ்ண பரமஹம்ஸர் என்ற மகாத்மா ஒருவரிருந்தார். அவர் சதா காளிதேவியை மனத்திலிருத்தி ஆனந்த பரவசமடைவார். அவருடைய கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியது. இவரைப் பெரியோரும் சிறியோரும் சதா தரிசனம் செய்து, அவருடைய அரிய உபதேசங்களைக் கேட்டுக் களித்தனர். இதையறிந்த நரேந்திரர் ஒரு நாள் அவரைப் பார்க்கக் காளிகட்டத்திற்குப் போனார், அங்கு நரேந்திரர் பரமஹம்ஸரைக் கண்டதும், அவருக்கு ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. பரமஹம்ஸரது பாதங்களில் பணிந்து அவருடைய உபதேசங்களைக் கருத்துடன் கவனித்தார். பரமஹம்ஸரும் இவருடைய முக விலாசத்தையும், அறிவின் அறிகுறியையும் அறிந்து, அவரிடம் அன்பு கொண்டார். தெய்வீகமான பாடல்களை நரேந்திரரைப் பாடச் சொல்லி மனங் குளிரக் கேட்கலானார். அது முதல் அடிக்கடி நரேந்திரர் பரமஹம்ஸரிடம் போய் அவருடைய அருள்வாக்கைக் கேட்டு, தமது சந்தேகங்களையும் தெளிவித்துக் கொண்டார். பரமஹம்ஸருக்கு அநேக சிஷ்யர்களிருந்தார்கள். அவர்களில் நரேந்திரரே முக்கியமானவர். இவரும் உலக வாழ்கையைத் துறந்து சந்நியாசம் ஏற்றுக்கொண்டார். அது முதல் இவருக்கு விவேகானந்தர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

அக்காலத்தில் தான் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரில் சர்வ மத சபை ஒன்று கூடியது. அதற்கு விஜயம் செய்யும் பொருட்டு, நம் விவேகானந்தர் இந்தியா முழுவதும் சுற்றி வந்தார். சென்னையிலுள்ள பிரமுகர்கள் ஒரு நிதி திரட்டி, அவர் கையில் கொடுத்து வழி விட்டனுப்பினர். இதுவரை அந்நிய நாடுகள் போய் அறியாத நம் சுவாமிகளும் நம் ஹிந்து மத சம்பிரதாயத்தை அயல் நாடுகளறியும்படி எடுத்

துச் சொல்ல ஆவல் கொண்டு புறப்பட்டார். இவர் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றும் திறமை வாய்ந்தவர். மிகுந்த பணக் கஷ்டத்தின் பேரில் அமெரிக்கா அடைந்தார். முதலில் அங்கு ஒருவரும் இவரை இலக்ஷியஞ் செய்யவில்லை. ஆனால் கடவுள் இவரோடிருந்தார். முடிவில் ஓர் அமெரிக்க மாது இவரை உபசரித்தார். சர்வ மத சங்கத்தில் பேசவும் இடங் கிடைத்தது. இதுவரை இவரை அற்பமாய் எண்ணிய அனைவரும் 'உடல் சிறியரென்றிருக்க வேண்டாம்' என்ற முதுமொழியை அறிந்து, இவருடைய அறிவைக் கண்டு ஆனந்தங் கொண்டார்கள். ஹிந்து மத உண்மையை அறிந்தார்கள். பல தேசத்தினர் இவரோடு நெருங்கிப் பழகினார்கள். இவரைத் தங்களுடைய தேசங்களுக்கு வந்து உபதேசம் செய்ய வேண்டிக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஆங்காங்கே சென்று, அரிய பெரிய உபந்நியாசங்கள் செய்து ஹிந்து மதத்தின் உண்மையை நிலை நாட்டினார்.

பிறகு இவர் இந்தியாவிற்குத் திரும்பி வந்து, வெள்ளத்தில் கஷ்டப்பட்டவர்களுக்கென்று ஒரு நிதி திரட்டி உதவி செய்தார். சென்னையில் இராமகிருஷ்ண மடமொன்று கட்டி அதில் கைத்தொழிற் கல்வியும் கற்பிக்குமாறு செய்து, அதை நடத்த அநேக சந்நியாசிகளையும் நியமித்தார்.

இச்சமயம் விவேகானந்தரின் உடல் நிலைசரியில்லாம லிருந்தது. இவரை மறுபடியும் மேல்நாடுகளுக்குப் பிரயாணம் செய்யுமாறு வைத்திய நிபுணர்கள் வற்புறுத்தினர். சுவாமியும் மேல் நாட்டுப் பிரயாணத்தை இரண்டாம் முறையும் முடித்து, இந்தியா திரும்பினார். இவர் தம் உபதேசங்கள் ஒன்றில், "இந்தியாவிற்கு நேராக ஒரு நட்சத்திரம் இருந்தது. அப்பொழுது இந்தியா சகல செல்வமும் உயர்வும் பெற்றிருந்தது. அது மேற்கு நோக்கிப் பிரயாணமாகிச் சுற்றி வந்து, ஜப்பானுக்கு நேராக இப்பொழுதிருக்கிறது. ஆகையால் இப்பொழுது ஜப்பான் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்

தில் அந் நட்சத்திரம் இந்தியாவிற்கு நேராக மறுபடியும் வரும். அப்பொழுது இந்தியா திரும்பவும் தன்னுடைய முன் நிலையை அடையும்" என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் தமது நாற்பதாவது வயதில் திடீரெனச் சமாதியடைந்தார். உலகத்தில் அவரை அறியாதவரே இல்லை; அவரைப் புகழாத மனிதரும் இல்லை. அவர் புகழ் இன்றும் ஓங்கி நிற்கிறது.

## பயிற்சியும் கேள்வியும்

I சொந்த வாக்கியங்களிலமை:—பிரபல, பிரமுகர், அறிகுறி, சம்பிரதாயம், உபசரி.

II (1) தகப்பனைப்போல் பிள்ளையும் என்பதற்கிணங்க இப்பாடத்தில் நீ என்ன அறிகிறாய்? (2) இந்தியாவைப் பற்றி விவேகானந்தர் சொன்ன தீர்க்க தரிசனம் என்ன? (3) அவருடைய பேர், கீர்த்தி எப்பொழுதுஎதிலிருந்து உலகத்திற்குத் தெரியத் தொடங்கியது? (4) பெரிய வீரர்களும், மகான்களும் அற்ப ஆயுளை அடைந்தார்கள் என்பதற்குச் சில உதாரணங்கள் கூறு.

III இலக்கணம்:—(1) சொற்றொடர்களில் ஒரு எழுவாயும் இரண்டு பயனிலைகளும் சில சமயங்களில் ஏற்படும். (உ—ம்) கந்தன் திருச்செந்தூர் சென்றான், அங்கு அமர்ந்திருக்கிறான். (2) ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்களுக்கு ஒரு பயனிலை ஏற்படுவதுமுண்டு. (உ—ம்) இராமனும் கிருஷ்ணனும் இங்கே வந்தார்கள். (3) இப்பாடத்திலிருந்து இம்மாதிரியான வாக்கியங்களுக்குச் சில உதாரணம் கொடு. (4) சொந்தத்தில் இம்மாதிரியான வாக்கியங்கள் சில அமை. (உ—ம்) கந்தன், வள்ளி, தெய்வானை மூவரும் செந்தின் மாநகரில் இனிது வீற்றிருக்கின்றனர்.

# 27. விவசாயம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒப்பு | கொழு | கடலை | செவ்வல் | வீழ்ச்சி |
| பயன் | கலாசாலை | மேழி | ஏர்க்கால் | தினை |
| மேன்மேலும் | புத்திமதி | கண்டீர் | முனை | பண்படுத்த வேண்டும் |
| கோதுமை | உழவன் | நம்மவர் | பழுது | துன்னூசி |
| ஏர் | கேழ்வரகு | அணைகள் | கையாண்டு | நுகத்தடி |

இவ்வுலகிலுள்ள ஜனங்கள் நான்கு விதமான தொழில்கள் செய்கின்றனர். பலர் விவசாயமும், சிலர் வியாபாரம், கைத்தொழில், உத்தியோக முதலிய தொழில்கள் செய்தும் பிழைக்கின்றனர். எல்லாத் தொழில்களிலும் மேலானதும் குற்றமற்றதும் விவசாயமே. இதனாலேயே 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்ற பழமொழி வழங்குகின்றது. நம் இந்தியர்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே தங்கள் முக்கியத் தொழிலாய் நம்பியிருக்கின்றனர். அநேக ஆயிர வருஷங்களாக நம்மவர் விவசாயம் செய்து வந்தும், அன்று செய்தவைகளையே இன்றும் செய்து வருகிறார்கள். புது முறைகளைக் கையாண்டு, அவற்றால் பயன் பெறுவது நம்மவர்க்குத் தெரியாது. 'பருவத்தே பயிர் செய்' என்ற வாக்கியத்தின் பொருளை யறியாத உழவன் ஒருவனும் நம் நாட்டிலில்லை. முன் காலத்தில் நம் தேசம் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், சிறந்து விளங்கிற்று. ஆனால் பிற்காலத்தில் அவை வீழ்ச்சி யடையவே, விவசாயம் மேன்மேலும் ஓங்கியது. தவிரவும் விவசாயத்திற்கு வேண்டிய வசதிகள் நம் தேசத்தில் ஏராளமாயிருக்கின்றன.

விவசாயம், நன்செய்ப் பயிர், புன்செய்ப் பயிர், தோட்டப்பயிர், தோப்புக்கள் முதலிய பல வகைப்படும். எப்பொழுதும் தண்ணீர் பாயக்கூடிய இடத்திலேயே நன்செய் பயிராகும். ஆகையால் நன்செய்கள், குளம், ஆறு, வாய்க்கால் இவைகளை யடுத்துத்தான் ஏற்பட முடியும். குளங்களில் தண்ணீரைத் தேக்கி வைத்து மடைகளின் மூலமாய், தேவையானபோது நன்சைப் பயிர்களுக்குப் பாய்ச்சுவார்கள்.

ஆறு அல்லது கால்வாய்களின் குறுக்கே அணைகள் போட்டு, சிறு கால்வாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதும் உண்டு. இவைகளில் ஆறு, கால்வாய்களிலிருந்து பாயும் தண்ணீர் வண்டல் மண்ணையும் கொண்டு வருவதால், அத் தண்ணீர்பாயும் நன்செய்கள் மிகவும் செழிப்பா யிருக்கும். நன்செய்களில் நெல், கோதுமை, கரும்பு, வாழை முதலியன பயிரிடப்படும்.

மழையை எதிர்பார்த்துப் பயிரிடப்படும் நிலங்களே புன்செய் நிலங்கள். நம் இந்தியாவில் புன்செய் நிலங்களே அதிகம். இவைகள் மழைக் காலத்திலேயே பயிர் செய்யப்படும். புன்செய்களில் கரிசல், செவ்வல், மணல், பரம்பு எனப் பலவித நிலங்கள் உண்டு. இவைகளில் கரிசல் நிலம் தண்ணீரை அதிகக் காலம் வைத்திருந்து, பயிர்களுக்கு உதவும் தன்மை யுள்ளது. புன்செய் நிலங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, உளுந்து, கடலை முதலிய தானியங்களும், பருத்தியும் விளையும்.

புன்செய் நிலத்தில் கிணறு தோண்டி அதிலுள்ள தண்ணீரைப் பாய்ச்சிப் பயிர் செய்வதுதான் தோட்டப் பயிர். தோட்டங்களில் மிள காய், கத்தரிக்காய் முதலிய காய் கறிகளும், கேழ்வரகு, சோளம் முதலிய தானிய வகைகளும் கிழங்கு வகைகளும் பயிரிடப்படும்.

கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தோ, வேறு இடங்களிலிருந்து தண்ணீர் எடுத்து ஊற்றியோ, மா, பலா, தென்னை முதலிய பல மரங்களை வளர்ப்பதுதான் தோப்பு உண்டாக்குதல். வேறு பயிர்கள் செய்ய உதவாத நிலங்களையே இதற்குத் தெரிந்தெடுப்பார்கள்.

நன்செய், புன்செய், தோட்டம் முதலியவைகளை முதலில் உழுது பண்படுத்த வேண்டும். இவ்வாறு உழுவதற்கு, ஏர் அல்லது கலப்பை என்ற கருவிதான் உபயோகப்படுகிறது. கலப்பை மரத்தினால் செய்யப் பட்டது. அதில் மூன்று பாகங்களுண்டு. முக்கியமான பாகம் கலப்பையின் அடிப்பாகம். அது கூர்மையாய், நிலத்தில் பள்ளம் செய் யத் தக்கவாறு அமைந்திருக்கிறது. அதற்குத் தன்னாசி என்று பெயர்.

இத் துன்னூசி மரத்தினால் செய்யப்பட்டிருப்பதால், அது சீக்கிரம் கெட்டுப் போகாதபடி, இரும்பினால் செய்யப்பட்ட கொழு என்ற கூர்மையான கருவி அதில் இணைக்கப்படும். நிலத்தில் கொழு உண்டாக்கிய பள்ளத்தின் வழியே, துன்னூசி எளிதாய்ச் செல்லும். துன்



புதுக் கலப்பை



பழைய கலப்பையால் உழுதல்

னூசியை அழுத்திப் பிடித்துக்கொள்வதற்கு அதன் மேற்பாகத்தில் மேழி என்ற ஒரு பாகம் இருக்கிறது. மேழியும், துன்னூசியும் சேரும் இடத்திலிருந்து, ஏர்கால் என்ற ஒரு நீளமான தடி முன்னோக்கிச் செல்லுகிறது. இதன் மறு முனையில் குறுக்காக நுகத்தடி கட்டப்படும். நுகத்தடியில் இரண்டு மாடுகள் பூட்டப்படுகின்றன.

இது பழையமாதிரிக் கலப்பை. இக்காலத்தில் புதுமாதிரிக் கலப்பைகள் பல வந்திருக்கின்றன. 'அகல உழுவதிலும் ஆழ உழு' என்ற பழமொழிப்படி செய்யவேண்டுமானால், புதுமாதிரிக் கலப்பைகளை உபயோகிப்பதே நல்லது. இவைகளில் மரத் துன்னூசிக்குப் பதிலாக, இரும்புத் துன்னூசி அமைக்கப்பட்டிருக்கிறது.

உழவன் தனது நிலத்தைப்பற்றியும், மழையைப்பற்றியும், பயிர்களைப்பற்றியும் எல்லா விஷயங்களையும் நன்றாயறிந்திருக்க வேண்டும். இவைகளை யறியாது உழவுத் தொழில் செய்பவன் நஷ்டமே யடைவான். இவ்வாறு நஷ்டமடைவது அவனது குற்றமேயன்றி, நிலம், காலம், இவற்றின் குற்றமாகாது. விவசாய விஷயங்களை யெல்லாம் கற்பிக்கவே பல விவசாயக் கலாசாலைகள் ஏற்பட்டுள்ளன. விவசாய

இலாகா அதிகாரிகளும் குடிகளுக்குப் பலவிதத்திலும் உதவி புரிகின்றனர். அவர்களது புத்திமதியையும், உதவியையும் பெற்று நாம் நன்மை யடைவோமாக.

'மேழிச் செல்வம் கோழை படாது'

### பயிற்சியும் கேள்வியும்

I பின்வரும் வார்த்தைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமை :—விதை, கருவி, பழுது, கையாண்டு, வீழ்ச்சி, பண்படுத்து.

II (1) சாகுபடி செய்யும் நிலங்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன? (2) தோட்டப்பயிர் செய்வதற்கான அனுகூலங்கள் என்னென்ன முதலில் செய்தாக வேண்டும்? (3) 'வேலியே பயிரை மேய்ந்தால்' என்பதற்குப் பொருள் கூறு. (4) விவசாய சம்பந்தமாய் உனக்குத் தெரிந்த சில மேற்கோள்களை எழுது.

III நம் இந்தியர்களிற் பெரும்பாலோர் விவசாயத்தையே தங்கள் முக்கியத் தொழிலாக நம்பியிருக்கின்றனர். தடித்த எழுத்துள்ள வார்த்தைகளுக்கு நீ படித்தமட்டில் இலக்கணம் கூறு.

IV 'விதை' என்ற வார்த்தை பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வருகிறது. இதுபோன்று வருகிற இன்னும் ஐந்து வார்த்தைகளை எழுது.

V கந்தன் எப்பொழுதும் குடையெடுத்துக் கொண்டுதான் வெளியில் செல்வான். கந்தன் ஒருபொழுதும் குடையெடுத்துக் கொள்ளாமல் வெளியில் செல்லமாட்டான். இதே மாதிரி ஐந்து வாக்கியங்களை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதி அவைகளை அர்த்தம் வேறுபடாமல் எப்படி எழுதலாம் என்டதைக் குறிப்பிடு.

## 28. கடிதங்கள்

### I

128, மேலராஜ வீதி,
பொன்னகரம்,
21, அக்டோபர், 1939.

எனது அன்புள்ள ராமாநுஜம்,

உன்னிடமிருந்து கடிதம் வருமென்று இது நாள் வரை எதிர் பார்த்தேன் ; வரவில்லை. தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதற்குச் சகல

ஏற்பாடும் நடந்துகொண்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். அது இப்பொழுது நடைபெறுகிறதா? நீ உயர்தரப் படிப்பை முடித்தபின் என்ன செய்துகொண்டிருக்கிருய்? கல்லூரியில் மேற் படிப்புப் படிக்கப் போகிருயோ? ஒரு வாரத்திற்கு முன்னதாகவே உனக்குக் கடிதம் எழுதி, மேற்படி விபரங்களை அறியும்படி அப்பா சொன்னுர்கள். நாங்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு பாகமாகிய ஏல மலைக்கு உல்லாசப் பிரயாணம் போயிருந்தோம். நேற்றிரவில்தான் திரும்பினேம். ஆகையால்தான் கடிதம் எழுதத் தாமதமாகிவிட்டது. எங்கள் உல்லாசப் பிரயாணத்தைப்பற்றி உனக்கு எழுத விரும்புகிறேன்.

சென்ற திங்களன்று காலை மூன்று மணிக்கு ஒரு வண்டி யமர்த்தி, இங்கு நம் வீட்டிலுள்ள யாவரும் புறப்பட்டோம். காலை 5 மணிக்கு மலையடிவாரம் போய்ச் சேர்ந்தோம். காலை நேரத்தில் மலைமேல் ஏறுவது மிகவும் உற்சாகமாகவே யிருந்தது. பலவித மரங்களும், செடி கொடிகளும், அப்பொழுதுதான் மலரும் புஷ்பங்களின் வாசனை யால் எங்களை மகிழ்வித்தன. பறவைகள் உல்லாசப் பாடல்களை பாடின. அங்குமிங்கும் சில இடங்களில் மான்கள் துள்ளி யோடி மறைந்தன. எங்களுடன் வந்த எங்கள் நாய் 'புலியன்,' அவைகளைத் தொடர்ந்து பிடிக்க மிகவும் பிரயாசைப்பட்டது. ஆனல் அது சங் கிலியால் பிணைக்கப்பட்டிருந்தமையால் அதனல் ஒன்றும் செய்ய முடிய வில்லை. 'புலியன்' இப்பொழுது பெரிதாகி விட்டது. வாட்டமாய் நீண்டு உயர்ந்து, பார்ப்பவர் மனத்தைக் கவரக்கூடியதாயிருக்கிறது.

காலை ஒன்பது மணிக்கு நாங்கள் அனைவரும் குறித்த இடம் போய்ச் சேர்ந்தோம். எங்கள் வரவை எதிர்பார்த்திருந்த நண்பர் தானியேல் என்பவர், எங்களை மனமுவந்து உபசரித்து வரவேற்றனர். நாங்களும் காலைக் கடன்களை முடித்துப் பசியாற்றிக் கொண்டோம். காடு மேடு கடந்து நடந்து வந்தஅலுப்பினல் அன்று முழுதும் இளைப்பாறினேம். மறுநாள் முதல் ஏலத் தோட்டம், காப்பித் தோட்டம், இவைகளைப் பல இடங்களிலும் போய்ப் பார்த்தோம். அங்கு இரண்டு

நாட்கள் தங்கி யிருந்து திரும்பிவிட்டோம். மலை வளத்தையும் அவை களின் விநோதத்தையும் பற்றி இன்னொரு முறை எழுதுகிறேன். என் நமஸ்காரம் உனக்குரித்தாகுக.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தம்பி,
ரா. பொ. சிவசாமி,

விலாசம் :

ஸ்ரீ. மா. ராமாநுஜம்,
153, யாதவர் தெரு, கீழூர்,
தூத்துக்குடி.

## II

153, யாதவர்தெரு,
கீழூர், தூத்துக்குடி,
30—10—'39.

என தருமைச் சிவசாமி,

உனது கடிதம் கிடைத்தது. பார்த்துச் சந்தோஷ மடைந் தேன். நானும் நமது கிராமத்துக்குப் போயிருந்தேன். அதனுல் தான் கடிதம் எழுத முடியவில்லை. தூத்துக்குடியில் முத்துக்குளியல் நடக்கிறது. ஒரு நாள், எப்படி முத்துக்குளிக்கிருர்கள் என்பதைப் பார்க்க நானும் சென்றிருந்தேன். பரதகுலத்தவர்கள் மிகவும் தைரிய மாகவே கடலுக்குள் மூழ்குகிருர்கள். அதற்கென்றே ஏற்பட்ட தோணி களிலிருந்து விடப்படும் கயிற்றில் பிணைக்கப்பட்ட கூடைகளிலிருந்து கொண்டு தண்ணீருக்குள் மூழ்குகிருர்கள். கடலின் அடியில் அகப் படும் முத்துச் சிப்பிகளை அக்கூடையில் வாரிப் போட்டுக்கொண்டு,

கயிற்றை அசைக்கிறார்கள். உடனே மேலே இருக்கிறவர்கள் அக் கூடையோடு அவர்களை உயரத் தூக்கி எடுக்கிறார்கள்.

இந்த விதமாய்த் தோணிகளில் முத்துச் சிப்பிகளை நிரப்பிக் கொண்டு கரை சேருகிறார்கள். தரையில் அவைகளைக் குவியலாகக் குவித்து ஏலமிடுகிறார்கள். பெரிய வியாபாரிகள் அவைகளை மொத்த மாக ஏலத்தில் எடுத்து, சில்லறையில் விற்கிறார்கள். பல விடங்களி லிருந்து ஆயிரக் கணக்கான ஜனங்கள் தினந்தோறும் அங்கு வந்து, சிப்பிகளை வாங்கி, அவற்றைப் பிளந்து முத்துக்கள் இருக்கின்றனவா என்று சோதிக்கிறார்கள். அவரவர்கள் அதிர்ஷ்டம் போல் முத்துக்கள் கிடைக்கின்றன. இன்னும் இரண்டு மாதம் முத்துக்குளியல் நடை பெறும். வருகிற கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் நீ இங்கு வந்தால், உனக்கு அவற்றை யெல்லாம் விவரமாய்க் காண்பிப்பேன்.

நான் பத்தாவது வகுப்பில், நம் மாகாணத்திலே இரண்டாவ தாகத் தேறியிருக்கிறேன். இப்போது வீட்டில் தான் இருக்கிறேன். யாராவது உதவி செய்தால், அடுத்த வருஷமுதல் கல்லூரிப் படிப்பைத் துவக்க உத்தேசித்திருக்கிறேன். நிற்க.

புதுக்கோட்டையில் நல்ல மழை பெய்திருப்பதால், காடுகளி லெல்லாம் விதைப்பாகிக் கொண்டிருக்கிறது. எங்கும் பசும் புல்லும், தண்ணீரும் கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன. 'புலியனை'ப் போலவே எனக்கும் ஒரு கோம்பை நாய் வாங்கி அனுப்பும்படி அப்பா விடம் சொல். பெரியோர்களுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லவும். உனக்கு எனது அன்பான ஆசீர்வாதம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
மா. ராமானுஜம்.

விலாசம்:

ஸ்ரீ. ரா. போ. சிவசாமி.

128, மேல ராஜவீதி, பொன்னகரம்.

மதுரை ஜில்லா.

## III

போடிநாயக்கனூர் முனிசிபல் பாடசாலை,
கனம் தலைமை உபாத்தியாயர் அவர்கள் சமுகத்துக்கு, மேற்படி பாடசாலை,
நான்காவது வகுப்பு, நயினர் எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

ஐயா,

என்னுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக, எனக்கு 25-10-'39-ம் தேதியன்று ஒரு நாள் மட்டும் ரஜாக் கொடுக்க வேணுமாய்ப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிந்துள்ள, மாணுக்கன்,
ரா. நயினர்

### பயிற்சியும் கேள்வியும்

I 'தென்னையும் நாணலும்' என்ற பாடத்திலுள்ள தோட்டக்காரன் நீயென்று வைத்துக்கொண்டு மரங்கள் எல்லாம் விழுந்து போய் ஒரு மரம் மட்டும் விழுந்து போகாத காரணத்தைப்பற்றித் தூர இடத்திலிருக்கும் உன் தகப்பனுருக்கு ஒரு கடிதம் எழுது.

II உன்னுடைய பள்ளிக்கூடத்தில் பாய் பின்னும் கைத்தொழில் கற்றுக் கொடுக்கிறுர்கள் என்று வைத்துக்கொண்டு எப்படி பாய் பின்ன வேண்டும் என்பதை உன் தம்பிக்கு ஒரு கடிதம் எழுது

III நீ உன் அக்காளின் கலியாணத்திற்காகப் போக வேண்டியதற்காக உன் தலைமை உபாத்தியாயருக்கு ஒரு ரஜாக் கடிதம் எழுது.

# 29. பொத்தான் துவாரம் தைத்தல்

துவக்கின பொத்தான் கத்தரிக்கோல் நிதானித்து கிழிந்து கோத்து ஏதாவது

சட்டைகளில் பொத்தான் துவாரங்கள் இருப்பது யாவருக்கும் தெரியும். அவைகளை எப்படி வெட்டித் தைப்பது என்பதை நாம் அறியவேண்டிய தவசியம். முதலில் பொத்தான் மாட்டவேண்டிய இடத்தைச் சரியாக நிதானித்து, ஒரு துவாரத்துக்கும் மற்ருெரு துவாரத்துக்கும் உள்ள தூரம் ஒரே அளவுள்ளதாய் இருக்கும்படி கவனித்துப் பென்சிலால் குறித்துக் கொள்ளவேண்டும். பிறகு அப் பென்சில் குறி மத்தியில் இருக்கும்படி துணியை மடித்து, கத்தரிக்கோலால் இரு மடிப்பையும் சேர்த்துச் சிறிது வெட்டவேண்டும். இப்போது துணியை முன்போல் விரித்தால் பொத்தான் துவாரம் தெரியும். இத் துவாரத்தை அப்படியே விட்டு விட்டால், அதிகமாகக் கிழிந்து கொண்டே போவதுடன், ஒழுங்கற்றதாயும் பலவீன முள்ளதாயும் ஆகிவிடும். ஆகையால் அதன் ஓரங்களைத் தைப்பது நல்லது.

ஓர் ஊசியை எடுத்து அதில் முறுக்கிய நூலைக்கோத்து, நூலின் நீண்டபாகத்தின் நுனியை முடிந்துகொள். துவாரத்திலுள்ள இரண்டு மூலைகளில் ஏதாவது ஒன்றிலிருந்து உன் தையலை ஆரம்பி. ஆரம்பிக்கும்போது மூலைக்குச் சற்றுவிலகியே துணிக்குள்ளாக நுழைத்து, ஊசியின் காதிலிருந்து தொங்கும் நூலை, உள் பக்கமாய் நீட்டிக்கொண்டிருக்கும் ஊசி முனையைச் சுற்றிப்போடு. இப்பொழுது ஊசியை இழுத்தால், துவாரத்தின் ஓரத்தை இறுக்கிய ஒரு பின்னல் தையல் ஏற்படும். இதே மாதிரியாகத் தைத்துக்கொண்டே போனுல் அந்த இடத்தில் ஒருவிதப் பின்னல் பரவி அதைப் பலப்படுத்தும். அடுத்த மூலைக்கு வந்ததும் முன்போலவே சிறிது தூரத்தில் இரண்டு அல்லது மூன்று தையல்கள் போட்டுப் பலப்படுத்த வேண்டும். மறுபடியும் பின்னல் தையலை ஆரம்பித்து முதலில் துவக்கின மூலையில் வந்து முடிக்கவேண்டும். இப்பொழுது மிகவும் உறுதியான பொத்தான் துவாரம் ஏற்படும்.



# 30. உண்மையின் பெருமை

[மதுரை நகரில் கோபாலன் என்ற வாலிபன் இருந்தான். அவன் கெட்டவர்களுடைய சகவாசத்தில் சேர்ந்து, திருடுதல், பொய்சொல்லுதல், கள் குடித்தல், சூதாடல் முதலிய பல தீத்தொழில்கள் புரிந்து வந்தான். அவனது தாய் எவ்வளவு கூறியும் அவன் இத்தொழில்களை விடவில்லை.]

காட்சி 1.

இடம் :—மதுரை நகரில் ஒரு வீடு.
காலம் :—மாலை வேளை.
பாத்திரங்கள் :—கோபாலன், அவனுடைய தாய்.

[கோபாலனுடைய தாய் படுக்கையில் சாகும் தருணத்தில் இருக்கிறாள்.]

தாய் :—(தனக்குள்) ஐயோ! ஈசா! இவ்வளவு துஷ்டனாக எனக்கு ஒரு பிள்ளை பிறக்கவேண்டுமா! நான் என்ன சொல்லியும் கேட்கமாட்டேன் என்கிறானே! கடைசித் தரமாகவும் சொல்லிப் பார்க்கிறேன். (வெளியாய்) கோபாலா!

[கோபாலன் வருகிறான்]

கோபாலன் :—அம்மா! ஏன் கூப்பிட்டாய்?

தாய் :—கோபாலா! நான் சீக்கிரம் இறந்து விடுவேன் என்று தோன்றுகிறது. நீ வெளியிலே எங்கேயாவது போய்விடாதே!

கோபா :—அம்மா! நீ சாக வேண்டாம் அம்மா!

[அழுகிறான்]

தாய் :—அப்பா! நான் ஏன் இன்னும் இந்தப் பூமியிலே இருக்க வேண்டும்? நீயோ திருடுதல், பொய் சொல்லுதல், கள் குடித்தல், சூதாடல் முதலிய பல கெட்ட காரியங்களையும் செய்கின்றாய். நான் எவ்வளவோ சொல்லியும் நீ அவைகளை விடமாட்டேன் என்கிறாய். தவிரவும் நான் சொல்லுகிறபடி நீ கேட்பதில்லை. ஆகையால் நான் இருப்பதை விட இறப்பதே நல்லது.

கோபா :—நான் என்னசெய்வேன், அம்மா! பிழைக்கும்வழி ஒன்றும் தெரியாமல் திருட ஆரம்பித்தேன். அதிலிருந்து இந்தப் பழக்கங்

கள் எல்லாம் என்னைப் பிடித்துக்கொண்டன. இப்போது நான் அவைகளை விட்டுவிட நினைத்தாலும், அவைகள் என்னை விட மாட்டேன் என்கின்றனவே! என்ன செய்வேன்?

தாய் :—கோபாலா! அப்படியானால் நீ உன்னுடைய தீத்தொழில்களை விடமாட்டாயா?

கோபா :—எப்படியம்மா ஒரே யடியாக விட்டுவிட முடியும்? ஒரு வழியும் தோன்றவில்லையே!

தாய் :—அப்பா! கடைசியாகக் கேட்கிறேன். இவைகளில் ஒன்றையாவது நீ விட்டுவிட முடியாதா? ஏதாவது ஒன்றை நீ விட்டுவிடுவதாகச் சத்தியம் செய்து கொடுத்தால், நான் மனச் சமாதானத்துடன் உயிர் விடுவேன். எதைவிடுகிறாய், யோசித்துச் சொல்.

கோபா :—(தனக்குள்) நம் தாய் கடைசியாகக் கேட்பதற்காக ஏதாவது ஒன்றை விட்டுவிடத்தான் வேண்டும். எதைவிட்டுவிடலாம்——? திருடுவதை——ஐயையோ! அதை விடமுடியாது. செலவுக்குப் பணம் கிடைக்காமல் போய்விடும். குடிப்பது பழக்கமாய் போய் விட்டது. சூதாடுவதையோ——நமது சிநேகிதர்கள் விடமாட்டார்கள். பொய் சொல்லுவதை வேண்டுமானால் விட்டுவிடலாம். அதனால் ஒன்றும் நஷ்டமில்லை. (வெளியாய்) அம்மா! (பாடுகிறான்.)

(விருத்தம்)

அன்னையே சொல்லக் கேளாய்! அருந்துயர் இனிமேல் வேண்டா
என்ன நான் செய்தபோதும் இழிவுள பொய்சொ லேன்காண்!
என்னுயிர் உள்ள காலத் தென்றுமிவ் விரதங் காப்பேன்;
சொன்னசொல் தவறமாட்டேன்; தொழுகிறேன் அருள் செய்வாயே!

நான் இன்றுமுதல் என் உயிர் உள்ளளவும் பொய் சொல்லமாட்டேன். இது சத்தியம். இனியாவது என்னை ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

தாய் :—கோபாலா! இனிமேல் நான் சந்தோஷமாக உயிர்விடுவேன். நீ எப்பொழுதும் உண்மையே பேசு; உனக்கு நற்கதி பிறக்கும்.

## காட்சி 2.

இடம் :—அரச மாளிகைக்கு அருகே ஒரு வீதி.

காலம் :—நள்ளிரவு.

பாத்திரங்கள் :—கோபாலன், பாண்டியன்.

[மதுரை அரசனுன பாண்டியன் பிச்சைக்கார வேஷத்தில் நகர சோதனை செய்து வருகிறுன்.]

பாண்டியன் :—(தனக்குள்) அதோ! யாரோ ஒருவன் வருகிறுன். அவனைப் பார்த்தால் திருடனைப்போல் காண்கிறது. அவனைச் சோதிக்கலாம்.

[கோபாலன் வருகிறுன்]

பாண்டி :—பசி கண்ணை மறைக்கிறதே! ஈசனே! நீ எல்லோருக்கும் உணவு அளிப்பவன் என்பது பொய்யோ! (கோபாலனைப் பார்த்து)

பாட்டு

ஏதப்பா, தெய்வமோ நீ சொல்லேன்—இங்கே
ஆதரிப்பார் ஒருவருமே இல்லேன்.

கோபா :—போதுமப்பா வருத்தமினி வேண்டாம்—இப்
போதுனக்கு நல்லதிர்ஷ்டம் உண்டாம்

பாண்டி :—நல்லதிர்ஷ்டம் என்றனை நீ யாதோ?—அதைச் சொல்லுதலிப்
போதுனக்கா காதோ?

கோபா :—அரசர ரண்மனையிற் களவாட—நான்
விரைவிற் செலவேண்டும், வாயென்கூட

பாண்டி :—என்ன! அரண்மனையிலா களவாடப் போகிறுய்? நீ யாரப்பா?

கோபா :—அப்பா! என் பெயர் கோபாலன். நான் தெற்கு வெளி வீதியில் வசிப்பவன். திருடிப் பிழைப்பதே என் தொழில்.

பாண்டி :—நல்ல வேளை! எனக்கும் அதே தொழில்தான். நானும் உனக்குத் துணையாக வருகிறேன்.. எனக்கும் பாதி பங்கு கொடுக்கிறுயா?

கோபா :—கண்டிப்பாய்த் தருகிறேன். அதற்குத்தான் உன்னையும் அழைத்தேன். வா, போகலாம்.

[இருவரும் பக்கத்திலுள்ள அரண்மனைக்குச் செல்கிறார்கள். காவலாள் தூங்கிக்கொண்டிருக்கிறான்.]

கோபா :—(பாண்டியனை நோக்கி) நீ இங்கேயே காவலாக இரு. நான் உள்ள போய்த் திருடிக்கொண்டு வருகிறேன். பிறகு நாம் இருவரும் பங்கிட்டுக் கொள்ளலாம்.

[பாண்டியன் தலை அசைக்கிறான். கோபாலன் உள்ளே செல்கிறான்.]

பாண்டி :—(தனக்குள்) திருடர்கள் உண்மை பேசுவதை நான் இதுவரை பார்த்ததில்லை. இவன் புதுமாதிரித் திருடனாக இருக்கிறான். இவனை முற்றிலும் பரிசோதித்துப் பார்ப்போம்.

[சிறிது நேரங்கழித்து கோபாலன் வருகிறான்.]

கோபா :—அப்பா ! அரசனுடைய பொக்கிஷ சாலையில் எவ்வளவோ தங்கம், வெள்ளி யெல்லாம் இருந்தன. அவைகளை யெல்லாம் நான் தொடவில்லை. விலை மதிக்கமுடியாத மூன்று இரத்தினங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றை அரசனுக்காக வைத்துவிட்டேன். மற்ற இரண்டையும் கொண்டுவந்திருக்கிறேன். இந்தா, உனக்கொன்று. (கொடுக்கிறான்) நான் போய் வரட்டுமா ?

பாண்டி :—கோபாலா ! போய் வா. உன்னை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்.

[கோபாலன் போகிறான். அதன் பின் பாண்டியன் அரண்மனைக்குள் சென்று பொக்கிஷசாலையை அடைந்து பெட்டியைத் திறக்கிறான்.]

பாண்டியன் :—(பெட்டியிலிருந்த ஒரு இரத்தினத்தை எடுத்துப் பார்த்து) ஆம் ! கோபாலன் சொன்னது உண்மையாகவே இருக்கிறது. திருடர்களுக்குள் யோக்கியமானவர்கள்கூட இருக்கிறார்கள் போல் இருக்கிறதே ! (இரத்தினத்தைப் பெட்டியில் முன்னிருந்தவாறே வைத்துவிட்டு போகிறான்.)

காட்சி 3.

இடம்:—பாண்டியன் சபை.

காலம் :—பகல்.

பாத்திரங்கள் :—அரசன், மந்திரிகள் மூவர், சில பிரபுக்கள், சேவகர்கள்.

[பாண்டியன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறான். மந்திரிகளும் பிரபுக்களும் உரிய இடங்களில் இருக்கிறார்கள். சேவகர்கள் ஒரு புறமாக நிற்கிறார்கள்.]

பாண்டி :—பொக்கிஷ மந்திரி! நேற்று இரவு நமது பொக்கிஷத்தில் களவு போனதாகக் கனவு கண்டோம். தாங்கள் சென்று உண்மையை அறிந்து வாருங்கள்.

[பொக்கிஷ மந்திரி போகிறார்.]

பார்த்தீர்களா! நாம் என்னதான் காவல் வைத்திருந்தாலும் திருடர்கள் அதையும் கடந்து திருடிவிடுகிறார்களே!

முதல் மந்திரி :—அரசே! காவலாளிகள் தூங்கி விட்டார்கள் போலிருக்கிறது.

கல்வி மந்திரி :—மன்னா! திருடர்கள் கற்றுத் தேர்ந்தவர்களா யிருந்தால், எவ்வகைக் காவலையும் கடந்து சென்றுவிடுவார்கள்.

பாண்டி :—மந்திரிகளே! நான் கண்டது கனவுதானே! ஒரு வேளை களவு போகாமலும் இருக்கலாம். பார்ப்போம்.

[பொக்கிஷ மந்திரி வருகிறார்.]

(அவரை நோக்கி) என்ன! மந்திரியாரே! பொக்கிஷம் சரியாக இருக்கிறதா?

பொ. மந் :—அரசே! நமது பொக்கிஷத்தில் விலையுயர்ந்த மூன்று இரத்தினங்களை மட்டும் கள்வர்கள் எடுத்துச் சென்றிருக்கின்றனர். மற்றவைகளெல்லாம் அப்படியே இருக்கின்றன.

பாண்டி :—(ஆச்சரியத்துடன்) என்ன! மூன்று இரத்தினங்களையுமா?

பொ மந் :—ஆம், மகாராஜ்!

பாண்டி :—(சிறிது யோசித்து) அடே, சேவகா! இங்கே வா. இம் மந்திரியின் உடைகளைச் சோதனை செய்.

[சேவகன் வருகிறான், மந்திரியைச் சோதனை செய்கிறான். மூன்றாம் இரத்தினம் கீழே விழுகிறது]

முதல் மந் :—ஆகா! இதென்ன ஆச்சரியம்!

ஒரு பிரபு :—(மற்றொரு பிரபுவிடம்) என்ன ஐயா! பொக்கிஷ மந்திரி பக்காத் திருடன்போல் இருக்கிறதே.

பாண்டி :—(கோபத்துடன்) சபையோர்களே! பார்த்தீர்களா, இம் மந்திரியின் செயலை!—நேற்றிரவு யான் நகர சோதனைக்குச் சென்ற பொழுது ஒரு திருடனைக் கண்டேன். அவன் யாரென்று விசாரித்து அறிந்தேன். அவன் அரண்மனையில் திருடச் செல்வதாக உண்மையைக் கூறினான். யானும் அவனுக்கு உடந்தையாக இருந்தேன்; அவன் மூன்று இரத்தினங்களில் ஒன்றைப் பெட்டியிலேயே வைத்துவிட்டு, இரண்டை எடுத்து வந்தான். ஒன்றை எனக்குக் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துச் சென்றான். பின் யான் பொக்கிஷத்திற்குச் சென்று, அவன் கூறியபடியே ஓர் இரத்தினம் இருப்பதைக் கண்டு சந்தோஷங் கொண்டேன். பின் இங்கு நடந்தவைகளை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அக் கள்வனிடம் உள்ள யோக்கியதைகூட நம் பொக்கிஷ மந்திரியிடம் இல்லை.—சேவகா! நீ சென்று தெற்கு வெளி வீதியில் வசிக்கும் கோபாலன் என்பவனை அழைத்து வா?

[சேவகன் போகிறான்]

(பொக்கிஷ மந்திரியை நோக்கி) வஞ்சகா!

(பாட்டு)

வஞ்சனை கொண்டவன் மந்திரியென்று நீ
என் வாழ்வைக் கெடுப்பதுவோ?
அஞ்சினை யில்லையிப் புன்தொழிலென்றும்
உயர்ந்தார்க் கடுப்பதுவோ?
வெஞ்சிறைக் கேகுவையே—இனிப்
பஞ்சையாய் வாழ்குவையே! (வஞ்சனை)

சேவகர்களே! இக் கள்வனைச் சிறையில் அடையுங்கள்.

[சேவகர்கள் பொக்கிஷ மந்திரியைப் பிடித்துப் போகின்றனர். ஒரு சேவகன் கோபாலனை அழைத்து வருகிறான்.]

கோபா :—(பாண்டியனை வணங்கி) அரசே! என்னை அழைத்த காரணம் தெரியவில்லை. தயை செய்து கூறவேண்டுகிறேன்.

பாண்டி :—கோபாலா! நேற்று இரவு நீ நம் அரண்மனைப் பொக்கிஷத்தில் திருடியதாக அறிகிறோம். அது உண்மைதானா?

கோபா :—(பயத்துடன்) உண்மை தான், மகராஜ்!

பாண்டி :—கோபாலா! நீ உண்மை பேசுவதைக் கண்டு யான் மகிழ்ச்சி அடைகிறேன். நேற்று இரவு உன்னுடைய கூட்டாளியாக இருந்தவன் யானே. இதோ இருக்கிறது, நீ எனக்குப் பங்காகக் கொடுத்த இரத்தினம். இன்று முதல் நீ என் கூட்டாளியாக இருப்பாய். உன்னையே எனது பொக்கிஷ மந்திரியாக நியமிக்கிறேன். முதல் மந்திரியாரே! என்ன சொல்லுகிறீர்?

முதல் மந் :—ஆம், மகராஜ்! இது சரிதான். பொக்கிஷ மந்திரியாக இருப்பவர் உண்மை உள்ளவராய் இருத்தல் வேண்டும். அப்பதவிக்கு இவர் முற்றிலும் தகுந்தவரே.

பாண்டி :—கோபாலா! நீ என்ன சொல்லுகிறாய்?

கோபா :—மகராஜ்! நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? தங்கள் உத்தரவு போல் நடக்கக் காத்திருக்கிறேன்.

[கோபாலன் பொக்கிஷ மந்திரிப் பதவியை ஏற்றுக் கொள்ளுகிறான். அரசன் எழுந்து செல்லுகிறான். கோபாலன் தவிர, யாவரும் போகின்றனர்.]

கோபா :—(தனக்குள்) நான் என் தாயார் வார்த்தையைக் கேட்டு பொய் சொல்லும் ஒரு கெட்ட வழக்கத்தை மட்டும் விட்டதற்கு, எனக்கு இம்மந்திரி வேலை கிடைத்தது. இனி நான் எல்லாக் கெட்டவழக்கங்களையும் விட்டு விட்டு நல்லவனாய் நடந்துகொள்ள வேண்டும். அப்படியே செய்வேன், இது சத்தியம்!

[கோபாலன் போகிறான்]

## அப்பியாசம்—2

## படப்பழக்கம்—1



# வெற்றி வேற்கை

## ஆசான்

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

## அழகு

கல்விக் கழகு கசடற மொழிதல்.
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
வணிகர்க் கழகு வரும்பொரு ளீட்டல்.
உழவர்க் கழகு ஏர் உழுதூண் விரும்பல்.
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
பெண்டிர்க் கழகு எதிர் பேசா திருத்தல்.
அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

## பெருமை சிறுமை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்,
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
கற்றோர் எல்லாம் அறிஞரும் அல்லர்.
பெருமையும் சிறுமையும் தான் தர வருமே.

## நட்பு

அடினும் ஆவின்பால் தன் சுவை குன்ருது
சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அருது.
புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேராகாது.
அடினும் பால் பெய்து கைப்பருது பேய்ச் சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.
ஆதலால்,
ஒருநாள் பழகினும் பெரியோர்க் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே.
நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

## பிழை பொறுத்தல்

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

## கல்வி மாண்பு

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னுயின் கீழிருப் பவனே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பர்.
அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.
ஆகையால்,
கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

## எவர்க்கு எது இல்லை

யானைக் கில்லை தானமும் தருமமும்.
பூனைக் கில்லை தவமும் தசையும்.
ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை
அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
அல்லல் இல்லை அறிவுடை யோர்க்கே.

## நிலையாமை

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.

### (1) செல்வ நிலையாமை

குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

### (2) வறுமை நிலையாமை

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

## (3) யாக்கை நிலையாமை

மணவணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
ஆதலால்,
இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே ;
இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

## அச்சம்

தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறிகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
குன்றுடை நெடுங்கா ட்டே வாழினும்
புன்தலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.
ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ் சும்மே.
குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே.

## இதனில் இது நன்று

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே.
சான்றோ ரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

## பதர்

காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.
அங்கண்மா ஞாலத் தரசுவீற் றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.
முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்(து)

அதன்பயன் உண்ணு வணிகரும் பதரே.
வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

## பொய்யும் மெய்யும்

பொய்யுடை யொருவன் சொல்வன் மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

## ஒழிக்க வேண்டுவது

பழியா வருவது மொழியா தொழிவது.
சுழியா வருபுனல் இழியா தொழிவது.

## போக்கு வரவு

துணையோ டல்லது நெடுவழி போகேல்.
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்
வழியே ஏகுக வழியே மீளுக.

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

(*Vide Elementary School consolidated list dated 30—4—'40 Page 130*)

பதிப்பாளர்

**வி. சூ. சுவாமிநாதன்**

மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை

**ிலை 0—6—0**

---

WADESA VASAGAM BOOK 4 :: :: PRICE 0—6—0